# தமிழரசு




டிச 16 1972

asia 72

# அரசு - மிகவுயர்ந்த தரமான

# போர்ட்லேண்ட் சிமெண்ட் உங்களுக்குக் கிடைக்கிறது

அரசு சிமெண்ட் தரத்தில் தலைசிறந்து விளங்குவது; தரமே உருவானது. வலிமைக்கு மற்றொரு பெயரான அரசு, வலுவான கட்டுமானங்களுக்கு நேர் நிகரில்லாததாகும்.

அரசு சிமெண்டுக்குள்ள தனிச் சிறப்புத் தன்மைகள், அதனால் கட்டப்படும் எதையும் திண்மையும், நீர்க்காத திறனும் கொண்டு நெடுங்காலம் நீடித்து விளங்கச் செய்கின்றன.

அரசு ஒரு நவீன, விஞ்ஞான ரீதியான தயாரிக்கப்படும் போர்ட்லெண்ட் சிமெண்ட் குடியிருப்பு இல்லங்கள், பண்ணைக் கட்டிடங்கள், அலுவலக கட்டிடங்கள், தானியக் குதிர்கள், குழாய் அமைப்புகள், அணைகள், பாலங்கள், நீர்த்தொட்டிகள், நீர்த் தேக்கங்கள், நீச்சல் குளங்கள், அலங்கார அமைப்புக்கள் போன்ற எத்தனையோ கட்டுமான வேலைக்கு அரசு அருமையானதொரு சிமெண்ட்.

அரசு தமிழ்நாட்டிலேயே முதலாவதான ஒரே அரசினர் துறை சிமெண்ட் ஆலை




யால், கடுமையான தரக்கட்டுப்பாடுகளைக் கையாண்டு உற்பத்தி செய்யப் படுகிறது.

## தமிழ்நாடு சிமெண்ட்ஸ்

(தமிழ்நாடு அரசுக்கு சொந்தமான நிறுவனம்)

ஆலங்குளம், இராமநாதபுரம் மாவட்டம்

## அரசு -வலிவும் வனப்பும் வாய்ந்தது

AC-16



asia72
TAMIL NADU
ஆசியா-72
சிறப்பிதழ்
தமிழரசு
16-12-1972
மலர்:3. இதழ்:12

# சேவல் சண்டை



முதல்வர் கலைஞர்

அயலூர் போய் வீடுவந்த இனியனிடம் ''என்னத்தான் வாங்கி வந்தீர்?'' எனக் கேட்டுப் பறந்து வந்தாள் ஏந்திழையாள். இல்லறத்தின் புதுச்சுவையைத் தெவிட்டாமல் உண்ணுகின்ற இளங் காதற் பெட்டகங்கள், இனியன்—ஏந்திழை. இருவரும் தமிழ்க் குலத்தார்—எழிற் கோலத்தார்! ''வானவில் போல் அழகு காட்டி வளைந்திருக்கும் தோகை கொண்ட ஆண்கோழியொன்று வாங்கி வந்தேன்'' எனச் சொல்லி, ''மடிமீது இருந்து கொண்டு மறத்தமிழன் சாயல் காட்டும் சேவல் தன்னைப் பார்'' என்றான். ''பாகற் பழம் போன்ற கொண்டைதனைக் கண்டாயோ பெண்ணே? சூடுபட்ட நாக்குபோல் தொங்குகின்ற தாடையின் அழகுபார் கண்ணே! சேரனின் நடை காட்டும்! படை கண்டு கலங்காத வீரனின் தோற்றம் காட்டும்!'' எனப் புகழ்ந்தான்.

''சரியத்தான் ஒப்புகிறேன்; பெட்டையொன்று வாங்கி வந்தாலும் முட்டையிடும்......இதைக் கொணர்ந்து பயன் என்ன?'' ஏந்திழையின் பேச்சுக்கு முதற் பதிலாய் நகை முழக்கிப் பின்னும் கூறலானான். ''துப்புரச் சிவந்த வாய்ப் பேரழகே! பசுமாடு; பெட்டைக் கோழி; பெண்ணாடு வளர்ப்பதிலே பால் முட்டையெனப் பயன் காணும் குறிக்கோள் ஒன்று மட்டும் உண்டு! ......நான் சேவல் வாங்கி வந்த நோக்கத்தை உன் செவிதனிலே போட்டால், ஒப்பிடுவாய் என் செயலை!'' எனச் சொன்ன அத்தானின் தோளில் சாய்ந்து ''புரிந்து கொண்டேன் உமதுள்ளம் — பெண்ணைப் புகழ்வதற்கு மயில் தன்னை அழைத்திடுவார் — இனிமேல் ஆணைப் புகழ்வதற்குச் சேவல் தன்னைக் காட்டிடலாம் என்பதுதான் உமதெண்ணம்!'' எனச்

''அதிலும் தவறுகின்றாய் என் அன்பே! ஆணுக்குச் சேவல் தன்னை ஒப்பிடலாம்! ...... மறுப்பாரில்லை! ஆனால் ஒன்று; பெண் குலத்தைப் புகழ்வதற்கும் ஆண் மயில்தான் தேவைப்படும்—அதையும் உணர்ந்திடுவாய்!''—என்று கூறி அவள் முகம் கடுப்பதற்குள் சிவப்பாக்கி, முடித்து விட்டான் கோபந்தன்னை!

''ஏந்திழையே! இன்று காலை நடைபெற்ற நிகழ்ச்சி தன்னை உன்னிடத்தில் சொல்லாமல் இருப்பதற்கு முடியவில்லை. என்மாமன் செங்கண்ணன் இருக்கின்றாரே; அவருக்குத் தினந்தோறும் தேகத்தில் கொழுப்பேறி நாக்கு வழி சிந்துகின்ற காட்சி தன்னை நான் நேராக அனுபவித்தேன். சேவற் சண்டையிலே பெருவீரர் எனப்புகழ் மண்டிவிட்ட காரணத்தால் —தானே தான் உடல் வருந்திப் போரிட்டு வென்றது போல் வெட்டரிவாள் மீசை தன்னை முறுக்கிவிட்டு, அன்றொரு நாள் தென்னிலங்கை தன்னை ஆண்டிருந்த இராவணன் போல் எண்ணிக் கொண்டு நடக்கின்றார்; தொலையட்டும்—கவலையில்லை! நான் சேவலை வாங்கி வருகின்ற வழியினிலே மடக்கிக் கொண்டு,'' என்னப்பா இளவெட்டு! சண்டைக்குப் பழக்குதற்குக் கோழி வாங்கிப் போகின்றாயோ?'' எனக் கேட்டார். ''இல்லை'' என்றேன். ''என்னதான் பழக்கினாலும் என்னை வெல்ல ஈரேழு லோகத்திலும் ஆள் இல்லை! வளர்த்துப்பார் உன் சேவலையும்! என் கோழி மூச்சுப்பட்டால் உன் கோழி ஒரு காதம் ஓடிவிடும்'' எனத் தற்பெருமை மலைமீது ஏறி நின்று சண்டைக் கோழிதரும் பெருமையாலே மண்டைக் கனம் கொண்டுவிட்ட மாமன் கூவலானார். நானும் பேசலுற்றேன்.

''சேவற் சண்டையிலே பெற்ற புகழ் பெருவீரம் என நினைத்து—சேரன் செங்குட்டுவன், கனகவிசயர் மீது வீசிநின்ற கனல் தெறிக்கும் வார்த்தைகளைப் பேசாதீர் மாமா! கோழி தன்னை ஆசையாய் வளர்ப்பதற்கு வாங்கி வந்தேன்—கோழையையும் சினங்கொள்ளச் செய்கின்ற உமது பேச்சால் அந்த எண்ணம் மாற்றிக் கொண்டேன். சூளுரைப்பேன் ஏற்றுக் கொள்ளும்! வீரர் நீர்தான் எனச் சூட்டிக்கொண்ட பட்டத்தை, எண்ணி இரு திங்கள் முடிவதற்குள் இழக்கச் செய்வேன். இன்று முதல் என் கோழி சண்டைக் கோழி இதையறிவீர் — வருகின்றேன் — எனச் சொல்லி வந்து விட்டேன்— ஊர் முழுவதும்

''ஏனத்தான் புது வம்பு? கோழிச் சண்டை தனைத் தொழிலாய்க்கொண்ட செங்கண்ணன்—அவரிடத்தில் வெல்வதென்றால் சுலபமா? வேண்டாமே வீராப்பு! தோற்றுவிட்டால் வெளியினிலே கிளம்புதற்கும் வீதியிலே நடப்பதற்கும் வெட்கம்—வெட்கம்! வேண்டாம் அன்பா பிடிவாதம்—விட்டுவிடுக!'' என்றாள்.

''தமிழன் சூளுரைத்துப் பின் வாங்கினான் எனில் தலைகுனிய நேராதோ தங்கமே! அஞ்சாதே! நம் கோழி வீரக்கோழி என்பதற்கு ஒருசான்று! இதன் தாய்க் கோழி ஒரு நாள் குஞ்சுக் கூட்டமுடன் இரை தேடப் போகும் போது, கொத்த வந்த பருந்து ஒன்றை எதிர்த்துத் துரத்தியதாம். மற்றொரு நாள் வஞ்சக நரி யொன்றின் வயிற்றுக்கு விருந்தாகும் நெருக்கடியில் போராடித் தப்பியதாம்! அதன் பிள்ளை இந்தச் சேவல்!''

''சரியத்தான்—சேவல் பேச்சு முடியட்டும்! பெட்டைக் கோழியின் துயர் தீர்ப்பீர்; வாரும்!'' என்றாள்! பருவ இளவரசி தந்திட்ட பழச்சுவையமுதங்கூட அவனுக்குச் சுவைக்கவில்லை. மலர் மெத்தை, இன்பத்தைத் தரவும் இல்லை. வீணையும் நாதமும் ஆகிவிட்ட நிலையில் கூட ஏந்திழையின் செங் கண்ணைப் பார்த்தவுடன் செங்கண்ணன் நினைவாலே குழப்பமுற்றான். எப்படியும் வெற்றி பெற்றிட வேண்டுமென்ற துடிப்பாலே செயல் புகுந்தான். சேவலுக்குப் போர்ப்பயிற்சி துவங்கிற்று. தாயின் பேரைப் பிள்ளை எடுக்குமென்ற தளராத நம்பிக்கையொரு புறமும்—செங்கண்ணன் கோழிப் போர் மேதையென்ற புகழுரைகள் மறுபுறமும் நெஞ்சத்தைத்





தாக்கிடவே, நாள் நெருங்க நெருங்க நடுங்கலானாள் ஏந்திழையாள்!

போர் நாளும் வந்தது—ஊர் மக்கள் கூடிவிட்டார். இரு நூறு பொன் பந்தயத் தொகையாக இரு சார்பும் கட்டவேண்டுமென நிபந்தனையும் தந்தார்கள் ஊர்ப் பெரியோர்! நானூறு பொன் கொண்ட கிழியொன்று தொங்குகின்ற மண்டபத்தில் ஊரார் அனைவருமே நிறைந்திருந்தார். இனியன், தன் சேவற் கோழியுடன் களம் வந்தான். ''இளங் கோழி! ஆனாலும் செங்கண்ணன் கோழிபோல் பலமுள்ள கோழியாய்த் தெரியவில்லை'' எனச் சொன்னார் சில கிழவர்! அதைக் கேட்டாள் ஏந்திழை! மேனியெல்லாம் வியர்வையாலே நனைந்துவிட்டாள். இனியனின் சேவல் நிற்கின்ற இடம் நோக்கி, இராஜ நடை போட்டவாறு செங்கண்ணன் கோழி வந்தவுடன் ஊர்ச் சிறுவர் கைகொட்டி வரவேற்றார். ஏந்திழைக்குப் பொறுக்கவில்லை.

செங்கண்ணன் கோழியினை மிஞ்சுவதாய் நின்றிருந்த காட்சி அவள் உள்ளத்தை உலுக்கிற்று. போர் ஆரம்பம்! ஒன்றையொன்று கொத்துதற்கும், பிறாண்டுதற்கும், காலாலே கீறுதற்கும் முயன்று மோதின; சிறகுகள் காற்றில் பறந்தன. எழிற் கொண்டைகள் நிமிர்ந்தன. சுழற்காற்று போல் இரண்டு சேவலும் சுழன்று சுழன்று போர் புரிந்த வேகத்தை ஊரார் வியந்தனர். இனியன் கோழித் தலையினிலே ஒரு கொத்து! குருதி வெள்ளம்! ஆனாலும் அயரவில்லை. முதுகினிலே மற்றொரு கொத்து! வலி பொறுக்கவில்லை. சிறு சோர்வு! அந்தச் சோர்வு கண்ட நேரத்தில் செங்கண்ணன் கோழி மள மளவென அதன் மீது பறந்து பறந்து கொத்தியது. கீறியது! இனியன் கோழி கத்தியது. ஏந்திழைக்கோ நிற்க

அவமானம் சூழப் போகிறதே என நினைத்து இனியனுமே கலங்கலுற்றான். ஏந்திழை ஓடியதைக் கண்டு மனம் நொந்தான். செங்கண்ணனின் சிரிப்பு வலுத்தது. ஊர் மக்கள் கை கொட்டி ஆர்ப்பரித்தார். இனியன் கோழி இப்போது வீழ்ந்துவிடும்—செத்து விடும் எனச் சொல்லி ஒரு கிழவர் வாய் மூடுவதற்குள், செங்கண்ணன் கோழிமீது அக்கோழி ஒரு பாய்ச்சல் நடத்தியது. மறு பாய்ச்சல்—செங்கண்ணன் கோழிக்கு வயிற்றினிலே ஒரு காயம்! அடுத்த ஒரு மோதல்—இப்படி அடுக்கடுக்காய் வெறிபிடித்த மோதல்—பாய்ச்சல் ! இனியனுக்கு பெரு மகிழ்ச்சி! திடுமெனச் செங்கண்ணன் கோழி விலகிச் சென்று , இனியன் கோழி மேல் பாய்வதுபோல் போக்குக் காட்டிக் களம் விட்டு ஓடிற்று! தோல்வியால் முகம் தொங்கவிட்டான் செங்கண்ணன்.

அதே ஊர் மக்கள் இனியனுக்கு மாலையிட்டார். மாலை தன்னைக் கோழிக்கு அணிவித்து நானூறு பொன்னோடு வீடுவந்தான். குப்புற வீழ்ந்திருந்த ஏந்திழைக்கு வெற்றிச் சேதிக் கிடைத்திடவே—அத்தானை எதிர் கொண்டு தழுவிக்கொண்டாள். விடவே மறுத்தாள். காதல் பெரு வெள்ளம் உடைப்பெடுத்து ஓடிற்று. இன்பப் பிரவாகம்!

கோழி களைப்பாறுதற்கு வேண்டுவன செய்துவிட்டு, “நானூறு பொன்னுக்கும் கோழிக்கே ஒரு கூண்டு வாங்கிடுவீர்! இரும்புக் கம்பியுள்ள கூண்டு இனி நம் கோழிக்குக் கூடாது; வெள்ளிக் கம்பியுள்ள கூண்டொன்றே தேவை” என்றாள். சரியென்று கிளம்பி விட்டான் கூண்டு வாங்க!

மறு நாள் காலையிலே வெள்ளிக் கூண்டுடனே வேல் விழியாம் ஏந்திழையைக் கூப்பிட்டான் பார்த்தாயா கூண்டழகை எனக் காட்ட! அவளும் வந்து இருவருமே இரும்புக் கூண்டினிடம் சென்று அன்புச் சேவல் தன்னை இடம் மாற்றிக் குடியேற்றக் கூண்டைத் திறந்தார். வெள்ளிக் கூண்டானாலும் கூண்டினிலே வாழ்வதற்குச் சேவலுக்கு விருப்பமில்லை போலும்—அதனாலே அது மாண்டு கிடந்தது இரும்புக் கூண்டினிலே!


அடுத்த இதழுடன்

இலவச இணைப்பு

நம்பிக்கை வாக்கு

தமிழ்நாடு சட்டமன்றத்தில், நம்பிக்கைத் தீர்மானத்தின் மீது

முதல்வர் கலைஞர்

ஆற்றிய முழு உரை

இதுமட்டுமல்ல அடுத்த இதழுடன் இன்னும் இரண்டு இலவச இணைப்புகள் உண்டு. விவரம் உள்ளே....

# சுவையான செய்திகள்!



## சுடச்சுடச் காஞ்சிப் பட்டு!

ஓட்டலில் தோசைக்கு
'ஆர்டர்' கொடுத்து வாங்கி
உண்ணுவது போல், 'ஆர்
டர்' கொடுத்துக் காஞ்சிப்
பட்டு வாங்கும் அதிசய
இடம் ஒன்று இருக்கிறது.
அதுதான் 'ஆசியா-72'
பொருட்காட்சியில் அமைந்
துள்ள தமிழ்நாடு அரங்கு.
மேலும். தமிழ்நாடு அரங்
கத்தில் கற் சிலைகள். சிற்
பங்கள். மர வேலைகள்,
தக்கையிலான வேலைப்பாடு
கள், துணி நெசவு ஆகிய
வைகளை உருவாக்கும் கலை
வல்லுநர்களை அழைத்துச்
சென்றுள்ளார்கள்.

தஞ்சை மாவட்டத்தைச்
சேர்ந்த தக்கைச் சிற்பி
கோபாலகிருஷ்ணன் ஓர்
இடத்தில் அமர்ந்து தக்கை
யினாலான ரோஜாப்பூ, சிவந்
திப்பூ செய்த வண்ணமிருக்கி
றார். ஒரு பூ 50 காசு,
ஒரு ரூபாய் என்று அவ்வப்
போது வாங்கிச் செல்கின்
றனர். பிசைந்த காகிதத்தில்
(பேப்பர் மாசி) செய்யப்படும்
நடராஜா, மோகினி ஆகிய
சிலைகளுக்கு நல்ல வரவேற்பு

மற்றொரு பகுதியில்
மாமல்லபுரத்தைச் சேர்ந்த
சிற்பி கல்லிலே கலை வண்
ணத்தைக் காட்டுகிறார்.
சந்தன மரத்தில் சிற்பங்களை
உருவாக்குகிறார் கன்னியா
...சிக் குச்சர்.

காஞ்சிபுரத்தைச் சேர்ந்த
நெசவாளர், உலகப் புகழ்
பெற்ற காஞ்சிப் பட்டு எவ்
வாறு உருவாகிறது என்ப
தைக் காட்சியைக் காண
வரும் மக்கள் கண்டுகளிக்
கும் வண்ணம் கண்ணெதி
ரில் உருவாக்கிக் காட்டு
கிறார்.

இதனைப் பார்த்து, வியப்
படையாத வெளிநாட்டவர்
களே கிடையாது. ஒரு
வெள்ளைக்காரர் மாலை
நேரத்தில் அணியும் துணி
ஒன்றிற்கான 'டிசைன்'
தந்து அம்மாதிரி நெசவு
செய்யச் சொல்லி நெச
வானதும் 'சுடச்சுட' வாங்
கிச் சென்றார். இதே
போன்ற பட்டுப்புடவைக்கு
'ஆர்டர்' கொடுத்து
வாங்கிச் சென்ற வட
நாட்டுப் பெண்மணியினர்
புலர்.

## பறக்கும் மாம்பழம்

தமிழ்நாட்டுப் பழவகைகளில் வெளிநாட்டவர்களை மிகவும் கவரும் பழம் முக்கனிகளில் ஒன்றான மா. தமிழ்நாட்டின் மாம்பழத்திற்கும், வாழைப்பழத்திற்கும் வெளிநாட்டில் நல்ல வரவேற்பு உள்ளது எனவே ஆசியா'72 பொருட்காட்சியில் தமிழ்நாட்டு அரங்கில் வேளாண்மைத் துறையின் பிரிவில் இந்தப் பழங்களும் முக்கிய இடம் பெற்றுள்ளன.



இதில் சிறப்பு அம்சம் என்னவென்றால் இந்த டிசம்பர் மாதத்திலும் மாம்பழம் உற்பத்தி ஆவதுதான். சாதாரணமாக மாமரம் காய்த்துக் கனிதரும் காலம் ஏப்ரல் முதல் ஜூன் வரை தான். பிற காலங்களில் மாம்பழத்தைக் கண்ணில் காண்பதே அரிது.

ஆனால் குமரி மாவட்டத்தில் டிசம்பர் மாதத்திலும், மா கனி தருகிறது. அதனைப் பயன்படுத்தியுள்ளனர் வேளாண்மைத் துறையினர்.

டெல்லியில் காட்சிக்கு வைக்கப்படும் கனிகள் அழுகிவிடாமலிருக்கும் பொருட்டு மூன்று நாட்களுக்கு ஒருமுறை சென்னையிலிருந்து விமானத்தில் கூடை கூடையாக மாம்பழங்களும் வாழைப்பழங்களும் ஆசியா'72க்கு டெல்லிக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன.

## சிற்பக் கலையின் சிகரம்

பழங்காலச் சிற்பங்களில் சிங்கம் அல்லது யாழியின் வாயில் உருளைக்கல்லினை வடித்திருப்பர் சிற்பிகள். உடைக்காமல் ஒட்டாமல் எப்படி இந்த உருளைக்கல்லினை வாயினுள் அமைத்தனர் என்பது புரியாத புதுமையாகவே இருக்கும் சிற்பத்தைப் பார்ப்பவர்களுக்கு. நெல்லை மாவட்டம் கிருஷ்ணபுரத்திலுள்ள கோவிலில் இன்றும் இந்தச் சிற்பம் உள்ளது.

காலத்தால் அழியாத இந்தச் சிற்பக் கலைக்குப் புத்துயிரூட்டி இன்றும் கலைத்திறன் தமிழனிடமுண்டு என்று நிரூபித்து வருகின்றனர் தமிழ்நாடு அரசினரால் நடத்தப்பெறும் மாமல்லபுரம் அரசினர் சிற்பப்பள்ளியினர். அவர்கள் கல்லினால் செய்த இந்தச் சிங்கச் சிற்பம் இன்று டெல்லியில் பொருட்காட்சியில் அனைவரது கவனத்தையும் கவர்ந்து நடுநாயகமாக உள்ளது. சுமார் ஓர் அடி நீளமுள்ள இந்தச் சிங்கத்தினைக் கண்டு வியக்காதவர் யாருமில்லை. அதன் வாயிலுள்ள கல்லினை உருட்டி அதிசயிப்பவர்கள் பலர்.

அங்குள்ள மற்றொரு முக்கிய சிற்பம், கண்ணகி சிலையாகும். இதுவும் கல்லினால் செய்யப்பட்டது. மாமல்புரத்திலிருந்து கொண்டு வந்தது. ஓர் அடி உயரமுள்ள இந்தக் கண்ணகி கையிலுள்ள சிலம்பு தனியாக ஆடக்கூடிய வகையில் மிக நுட்பமாகச் செய்யப்பட்டுள்ளது. இதனைத் தொட்டுப் பார்க்கும் வெளி நாட்டவரும் பிற மாநிலத்தவரும் அதிசயப்படுகின்றனர்.

டெல்லியில் நடைபெறும் ஆசியா-72 பொருட்காட்சியிலும் இப்படித் திடீர் என்று பொருட்காட்சிக்காக மாத்திரம் சில நாளிதழ்கள் உருவாகியுள்ளன.

ஆசியா-72 செய்தி (Asia-72 News) என்பது ஆசியா-72 பொருட்காட்சி அமைப்பாளர்களால் நடத்தப்படும் நாளிதழ். இதே போன்ற வேறு சில நாளிதழ்கள் 'பொருட்காட்சி அழைக்கிறது' (Fair Calling), 'விழாக்கள்' (Festivals) என்பவையாகும்.

பொருட்காட்சித் திடலில் அன்றாடம் நடைபெறும் முக்கிய நிகழ்ச்சிகள், பிரமுகர்கள் வருகை, அரங்கங்கள் பற்றிய விவரங்கள் ஆகியவை புகைப்படங்களுடன் இந்த நாளிதழ்களில் வெளியிடப்படுகின்றன.

தமிழக அரங்கத்திற்கு நாள் தோறும் சுமார் 10 ஆயிரம் பேர் வருகிறார்கள். சென்ற 3-ஆம் தேதி (ஞாயிறு) அன்று ஒரு லட்சம் மக்கள் வருகை தந்தனர். இவ்வாறு லட்சக் கணக்கில் மக்கள் வருவதால் இந்த நாளிதழ்களுக்கும் நல்ல வரவேற்பு இருக்கின்றது. அதிகமான கூட்டத்தை வரவேற்கும் அரங்கம் சோவியத் நாட்டின் அரங்கமாகும்.

### காவிரி பாயும் டில்லி

ஆசியா '72 பொருட்காட்சித் திடலிலுள்ள சாலைகள் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு ஆற்றின் பெயரைச் சூட்டியுள்ளனர். தமிழ்நாட்டின் காவிரி, பெரியாறு ஆகியவையும் அவற்றில் சில பெயர்கள். தமிழ்நாடு அரங்கத்தின் முன்னால் செல்லும் சாலையின் பெயர் நர்மதை.

### மாலை விலை ரூ. 750.

ஆசியா'72ல் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கும் ஏலக்காய் மாலையின் விலை மதிப்பு சுமார் ரூ. 750. ஏலக்காயுடன் சந்தன உருண்டையில் இடையிடையே வைத்துக் கோக்கப்பட்ட இந்த ஏலக்காய் மாலையில் கிராம்பு, மிளகு, கஸ்தூரி போன்ற வாசனைத் திரவியங்கள் உள்ளன. வெளிநாட்டவர்களைக் கவர்ந்த பொருட்களில் இந்த மாலை முக்கியமானது.

கைத் திறனுக்கு எடுத்துக்காட்டாக அமைந்த மற்றொன்று, முழுக்க நெல்மணிகளினால் உருவாக்கப்பட்டுள்ள தேர். 3 அடி உயரமுள்ள இந்தத் தேரினை உருவாக்கியவர் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவர். தமிழக அரங்கத்திற்கு வந்த பிரதமர் திருமதி இந்திரா காந்தியைக் கவர்ந்த இந்தத் தேர் ரூ. 1500 மதிப்புள்ளது. தஞ்சை மாவட்டக்காரரிடமிருந்து தொழில் துறையினர் விலைக்கு வாங்கிக் காட்சியில் வைத்துள்ளனர்.

திருவாரூர் தேரின் மாதிரியில் செய்யப்பட்ட சுமார் 10 அடி உயரமுள்ள தேர் ஒன்றும் நமது அரங்கத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது. குமரி மாவட்டத்திலுள்ள தேர்ச் சிற்பக் கூடத்தில் உருவாக்கப்பட்டிருக்கும் தேர் இது. எக்ஸ்போ-70 பொருட்காட்சியில் இடம் பெற்ற பெருமையும் இந்தத் தேருக்கு உண்டு.

### அன்றாடம் போட்டி

டெல்லியில் நடைபெறும் ஆசியா-72 பொருட்காட்சி, ஆசிய வணிகப் பொருட்காட்சியில் 3-வது ஆகும். ஒவ்வொரு முறையும் ஒரு வணிகப் பொருளை மையமாகக் கொண்டு நடைபெற்று வருகிறது. அந்த வகையில் ஆசியா 72-ன் மையப் பொருளாகவுள்ளவை, துணிமணிகளாகும். அதனால் இப்பொருட்காட்சியின் மையத்தில் மிகப் பிரம்மாண்டமான அரங்கம், துணிமணிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. இதுதான் பெரிய அரங்கமும் கூட. எல்லா மாநிலங்களிலும் தயாரிக்கப்படும் பட்டு, கம்பளி, பருத்தி ஆடைகள் இங்கே கொணரப்பட்டுக் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

இந்த ஆடைகளின் அழகினை எடுத்துக் காட்டுவதற்காக இந்த அரங்கத்தில் அன்றாடம் ஆடை அலங்கார அணிவகுப்பு நடைபெறுகின்றது. தினமும் மாலையில் 6 மணிக்கு ஒரு முறையும் 8 மணிக்கு ஒரு தடவையுமாக இரு காட்சிகள் நடைபெறுகின்றன. அழகான இளம் பெண்கள் நவநாகரிகமான ஆடைகள் அணிந்து அணிவகுப்பில் காட்சி தருகிறார்கள்.

இந்த அரங்கத்தில் சேலைகள், கம்பளங்கள், 'ரெடிமேட்' சட்டைகள், உடுப்புகள் விதவிதமாக வைக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டுத் துணிகளும் இந்த அரங்கத்தில் இடம் பெற்றுள்ளதுடன், தமிழ்நாடு அரங்கத்தில் கைத்தறிக்கெனத் தனியிடமும் ஒதுக்கப்பட்டுள்ளது. அங்குள்ள, மேனகை, ஊர்வசி, பொன்னி, காவிரி (அனைத்தும் புடவைகளின் பெயர் தான்) அனைவரையும் கவருகின்றன. இந்தப் பட்டுச் சேலைகளின் விலை ரூ. 200 முதல் ரூ. 1500 வரை, தரத்திற்குத் தக்கபடி உள்ளன.



# தைமெட் 10-ஜி உங்கள் பருத்திப் பயிருக்கு இடையருத, நீண்டகால, சக்திமிக்க முவ்வழிப் பாதுகாப்பைத் தருகிறது.

பயிர் ஜீவாணுவில் ஊடுருவிச் செயல் புரியும் தன்மையும், தொடுநஞ்சாகவும், புகைநஞ்சாகவும் செயலாற்றும் தன்மையும் ஒப்பற்ற முறையில் ஒருங்கே இணையப்பெற்ற **தைமெட் 10-ஜி**, அணுகுவதற்குக் கடினமான புழு பூச்சி-களைக் கட்டுப்படுத்துவதுடன், புழுபூச்சிகள் தாக்கத்தொடங்குவதற்கு முன்பே அவற்றிற்கு எதிராக பயிர்களுக்கு உள்ளமைந்த சக்திமிக்க பாதுகாப்பைத் தருகிறது.

தவிர, **தைமெட் 10-ஜி** முழுவளர்ச்சியடைந்த பயிர்களில் கெடுதலான விளைவு எதையும் தோற்றுவிப்ப-தில்லை; அதன் நீண்டகால கட்டுப்பாடு மற்றும் சீதோஷ்ண நிலைமைகளினுல் பாதிக்கப்படாத தன்மையின் காரணமாக, **தைமெட் 10-ஜி**யின் ஒரு பிரயோகம், வழக்கமான பூச்சிக் கொல்லிகளின் பல தெளிப்புகளை விடச் சக்திமிக்க பயனைத் தருகிறது. லாபத்தில் நாட்டமுடைய பயிர்செய்பவர்களுக்கு, அதிக விளைச்சல், அதிக லாபங்கள், பத்திரத்தன்மை மற்றும் திறன்மிக்க பயிர்ப் பாதுகாப்பை உறுதிசெய்கிறது.




**விவசாயப் பிரிவு,**
**ஸயனமைட் இந்தியா லிமிடெட்**
த.பெ. எண் 9109, பம்பாய்-25.

CYANAMID

# இதோ ஒரு மினி டைப்ரைட்டர்



ஆர்வம்

ஆற்றல்

அயராத உழைப்பு

அனுபவம்

இவை இருந்தால் மட்டும் ஒருவர் தொழிலைத் தொடங்கிவிட முடியாது. எல்லாவற்றுக்கும் மிகமுக்கியமான மூலதனம் அதற்கு மூல காரணமல்லவா?

தட்டச்சுப் பொறி தயாரிக்கின்ற பிரபலமான நிறுவனமொன்றில் பணியாற்றிப் பதினைந்து ஆண்டுக் காலம் அனுபவம் பெற்ற ஒருவர், சொந்தமாகத் தொழில் நடத்த எண்ணினார். மேற்கண்ட ஆர்வம், ஆற்றல், அயராத உழைப்பு, அனுபவம் எல்லாம் இருக்கிறது அவருக்கு. ஆனால், மூலதனத்துக்கு எங்கே போவார்? யார் தருவார்கள் பெருந்தொகையை?

அவரது சிந்தனை சிறகடித்துப் பறந்தது; சீக்கிரமே அதற்கொரு வழியும் பிறந்தது. உள்ளத்திலே உறுதியும், முகத்திலே உவகையும் பொங்கத் தமக்கு உதவி செய்யக் காத்திருக்கும் நண்பனை நாடி விரைந்தார்.

யார் அந்த நண்பன்? திறமை எல்லாம் இருந்தும், தொழில் தொடங்கிட வழி தெரியாமல் தவிப்போருக்கு உறுதுணையாக இருக்கும் அந்த நண்பரின் பெயர்தான் டி. ஐ. ஐ. சி.! ஆமாம். இந்த நான்கு எழுத்துக்களுக்குள் அடங்கியிருக்கும் முழுப்பெயர்தான், 'தமிழ்நாடு தொழில் மூலதனக் கழகம் (Tamilnadu Industrial Investment Corporation). சென்னையிலுள்ள இந்நிறுவனம் தொழில் தொடங்குவோருக்குத் தக்க உதவிகளைச் செய்து வருகிறது.

''நெடுநாட்களாக எனக்கொரு எண்ணம் இருந்தது அந்த எண்ணம் நிறைவேறாதா என்று ஏங்கிக் கிடந்த காலமும் உண்டு. அந்த ஏக்கத்துக்கு ஏற்ற மருந்து எது என்று நான் தேடிக் கொண்டிருந்தபோது டி.ஐ.ஐ.சி. என் மனத்துக்குத் திடமளித்தது; என் எண்ணம் நிறைவேறவும் வழி வகுத்தது'' என்று பெருமிதத்துடன் கூறுகிறார் இன்று சொந்தமாகத் தொழில் நடத்தும் திரு குணசேகரன்.

தமிழ்நாடு அரசின், தொழில் மூலதன நிறுவனம் இவருக்குத் தொழிற்கூடம் உருவாக்கிட நாலரை இலட்சம் ரூபாய் கடனாக வழங்கியுள்ளது. மற்றும் யுனைடெட் கமர்சியல் பாங்க்கும் கடன் தந்துள்ளது. இந்த உதவியின் உருவகமே, கையில் சுலபமாக எடுத்துச் செல்லும் தட்டச்சுப் பொறிகள் தயாரிக்கும் தொழிற்கூடம் (Portable Type writers).

'சுமதி இண்டஸ்ட்ரீஸ்' என்ற பெயரில் சென்னை சைதாப்பேட்டையில் இயங்கிவரும் இந்தத் தொழிற்கூடம் 1966-ல் தொடங்கப்பெற்றது. இங்கு நாற்பது பேர் பணியாற்றுகின்றனர்.

புள்ளி விவரப்படிப் பார்த்தால், இந்தியாவில் ஓராண்டுக்கு ஒரு இலட்சம் தட்டச்சுப் பொறிகள் தேவைப்படுகின்றன. ஆனால் கடந்த ஆண்டில் தயாரான தட்டச்சுப் பொறிகளோ ஏறத்தாழ 43 ஆயிரமே ஆகும். இவற்றில் கையில் எடுத்துச் செல்லும் தட்டச்சுப் பொறிகளை எவரும் தயாரிக்க முன்வரவில்லை என்பதை இங்குக் குறிப்பிடவேண்டும். இதற்குக் காரணம், இத்தொழில் கடினமானது என்பதேயாகும்.



தொழிற்கூடத்தின் ஒரு தோற்றம்

இத்தகைய தட்டச்சுப் பொறிகள் நுண்ணிய வேலைப்பாடு கொண்டவையாகும். இவற்றைத் தயாரிக்கக் கூடுதலான திறமை வேண்டும். ஒரு சிறிய தட்டச்சுப் பொறியில் சுமார் 627-க்கு மேற்பட்ட சின்னஞ்சிறு பாகங்கள் உள்ளன. இவற்றின் சரியான இணைப்புகளைப் பொறுத்துத்தான் இது நன்றாக இயங்கும். ஒரு சிறிய இணைப்புச் சரியாக அமையவில்லை என்றாலோ, அல்லது பழுதுபட்டுவிட்டாலோ இது வேலைசெய்வதை நிறுத்திக் கொண்டுவிடும்.



தட்டச்சுப் பொறியின் பாகங்கள் இணைக்கப்படுகின்றன

சில ஆண்டுகளுக்கு முன் இதே போன்ற ஒரு தொழிற்சாலை இந்தியாவில் இருந்தது. அது இப்போது மூடப்பட்டுவிட்டது. அது மேலை நாட்டுத் தொழில் நுட்பத் துணையோடு தட்டச்சுப் பொறிகளைத் தயாரித்து வந்தது. பல பாகங்கள் வெளி நாட்டிலிருந்து தருவிக்கப்பட்டு இங்கு இணைக்கப்பட்டன. ஆனால், இந்தத் தொழிற்கூடமோ மேலை நாட்டு உதவி எதுவுமின்றி, முழுக்க முழுக்க இந்தியாவில் தயாரிக்கப்பட்ட பாகங்களைக் கொண்டே இந்தத் தட்டச்சுப் பொறிகளை உற்பத்தி செய்து வருகின்றது என்றால், இதனை இயக்கி வருகின்ற பங்குதாரர்களின் பெரு முயற்சியை நாம் பாராட்டத்தான் வேண்டும்.

வெளியூர்களுக்கு அடிக்கடி செல்லும் தொழில் பிரதிநிதிகள், பத்திரிகை நிருபர்கள் போன்றவர்களுக்கு இந்தச் சிறிய தட்டச்சுப் பொறி மிக இன்றியமையாத சாதனமாகும். வீட்டுக்கொரு வானொலி வாங்குவது போல, இந்தச் சிறிய தட்டச்சுப் பொறியையும் வாங்கி வைக்கலாம். கணக்கு வகைகள், வாழ்த்துக்கள், கடிதங்கள் முதலியன அழகாகத் தெளிவாக தட்டச்சு செய்து அனுப்பினால், படிப்பவர்களுக்கு எத்தனை மகிழ்ச்சியாயிருக்கும்! இதன் விலை கூடப் பெரிய தட்டச்சுப் பொறியைவிடக் குறைவானது. சுமார் ஆறுநூறு ரூபாய்க்கு இதனை வாங்கிப் பயனடையலாம்.

இப்போது மிக மும்முரமாக இப்பொறிகள் இங்குத் தயாராகி வருகின்றன. 1973-ஆம் ஆண்டில் இந்தச் சிறிய அழகிய தட்டச்சுப் பொறிகள் விற்பனைக்கு வந்துவிடும். இலங்கை, காசிய நாடுகளுக்கு இவைகளை ஏற்றுமதி செய்யும் வாய்ப்பு உள்ளதால், இதற்கு நல்ல வரவேற்புக் கிடைக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

இந்நிறுவனம் ஆண்டுக்குப் பதினைந்தாயிரம் தட்டச்சுப் பொறிகள் தயாரிக்கத் திட்டமிட்டுள்ளது. தற்போது ஆங்கிலத் தட்டச்சுப் பொறிகளே இங்குத் தயாரிக்கப்பட்டு வருகின்றன. தமிழிலும் பிற மொழிகளிலும் படிப்படியாகத் தயாரிக்கும் எதிர்காலத் திட்டமும் இருக்கிறது. இங்குத் தயாராகும் தட்டச்சுப் பொறியின் பெயர்: 'பிரசிடெண்ட் ஜூனியர்'

இந்தியாவிலேயே சிறிய தட்டச்சுப் பொறிகளைந் தயாரிக்கும் நிறுவனம் இது ஒன்றே என்ற பெருமையுடன் திகழ்கின்றது இத்தொழிற்கூடம்.

கடந்த ஓராண்டுக் காலமாக தட்டச்சுப் பொறிகளை உற்பத்தி செய்து வரும் இத்தொழிற்கூடம் பல தொழில் வல்லுநர்களின் பாராட்டுதல்களைப் பெற்றிருக்கின்றது. விடா முயற்சியால் வெற்றி வாகை சூடி ஒரு முன்மாதிரியாகவும் இது விளங்கி

"வளரும் தொழில்கள் எத்தனையோ உள்ளன. அவற்றையெல்லாம் தொடங்கி நடத்தக்கூடிய திறமை மிக்கவர்களைத் தமிழகம் பெற்றிருக்கிறது. தமிழ்நாடு அரசு தொழிற்கூடங்கள் கட்டித் தருதல், இயந்திரங்களை வாங்கித் தருதல், கடனுதவி வழங்குதல் போன்ற பலப்பல உதவிகளைச் செய்து வருகிறது. இந்த உதவிகளையெல்லாம் பெற்றுத் தொழில்கள் தொடங்கினால் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கவும், தமிழகத்தின் தொழில் வளத்தை பெருக்கவும் வழி செய்தவர்களாவோம்" என்று இதன் பங்குதாரர்கள் மிகுந்த நம்பிக்கையோடு கூறுவதை நாமும் வரவேற்கத்தானே வேண்டும்?

தமிழ்நாடு அரசின் சிட்கோ, டான்சி, டி. ஐ. ஐ. சி., போன்ற நிறுவனங்களின் உதவியினைத் தொழிலதிபர்கள் நன்கு பயன் படுத்திக் கொள்ளவேண்டும். நல்ல பல தொழில்களுக்கு நண்பனாக இருந்து தக்க உதவிகளைச் செய்து வரும் இந்நிறுவனங்களால், எதிர்காலத் தொழில் உலகம் ஒளி மயமாய்த் திகழும் என்பதில் சிறிதும் ஐயமில்லை!

# சாசனத் தமிழ்ச் சொற்கள்

## மயிலை. சீனி. வேங்கடசாமி

தமிழ்நாட்டிலே பல்லாயிரக் கணக்கான சாசனங்கள் எழுதப் பட்டுள்ளன. சேர, சோழ, பாண்டிய, பல்லவ அரசர்கள் எழுதிய சாசனங்களும் சிற்றரசர் குறுநில மன்னர் முதலானோர் எழுதிய சாசனங்களும் பல ஆயிரக்கணக்கில் நம்முடைய நாட்டிலே சிதறிக் கிடக்கின்றன. அந்தச் சாசனங்கள் எல்லாம் கற்களிலும் செப்பேடுகளிலும் எழுதப்பட்டவை. பழைய கோவில்களின் சுவர்களிலே எழுதப்பட்ட சாசன எழுத்துக்களை இன்றும் கண்டு வருகிறோம். தொல்பொருள் ஆய்வுத் துறை (ஆர்க்கியாலஜி இலாகா) ஒரு நூற்றாண்டாகச் சாசனங்களைப் படியெடுத்து வருகிறது. படியெடுத்த சாசனங்களில் ஆயிரக் கணக்கானவை வெளியிடப்பட்டுள்ளன. வெளியிடப் படாத சாசனங்கள் இன்னும் ஆயிரக் கணக்கானவை இருக்கின்றன. படி எடுக்கப்படாத சாசனங்களும் இன்னும் நூற்றுக் கணக்கில் உள்ளன.

கற்களிலும் செப்பேடுகளிலும் பொறிக்கப்பட்டுள்ள இந்தச் சாசனங்கள், தமிழ் நாட்டின் பழைய சரித்திரங்களை எழுதுவதற்குக் கருவியாகப் பயன்படுகின்றன. சாசனங்களைக் கொண்டே சேர, சோழ, பாண்டிய, பல்லவ அரசர்களுடைய வரலாறுகள் எழுதப்பட்டன—எழுதப்படுகின்றன. மேலும், மக்கள், சமூக வரலாற்றையும் பழக்க வழக்கம் பண்பாடுகளையும் அறிவதற்குச் சாசனங்கள் பேருதவியாக இருக்கின்றன. வரலாறுகளை எழுதுவதற்கு மட்டும் சாசனங்கள் பயன்படுகின்றன என்று கருத வேண்டாம்; தமிழ்மொழி வளர்ச்சிக்கும் சாசனங்களைப் பயன்படுத்தலாம். ஆயிரக் கணக்கான சொற்கள் சாசனங்களிலே காணப்படுகின்றன. அந்தச் சொற்கள் இப்போது வழக்கில் இல்லாத பழஞ் சொற்கள். அழகாகவும் புதுமையாகவும் உள்ள ஆயிரக்கணக் மறைந்து கிடக்கின்றன. அந்த அருமையான சாசனச் சொற்களையெல்லாம் திரட்டித் தொகுத்து, சாசனச்சொல் அகராதியாக வெளியிடுவது தமிழ் வளர்ச்சிக்கு ஆக்கந் தருவதாகும். சாசனச் சொல் அகராதி இது வரையில் வெளிவராதிருப்பது வருந்தற்குரியது.

நம்முடைய அரசாங்கத்தார் தமிழ் வளர்ச்சித் துறை ஒன்றை அமைத்து அதன் மூலமாகப் பல நல்ல செயல்களைச் செய்து வருகிறார்கள். அரசாங்க அலுவல்களைத் தமிழிலேயே செயலாற்றி வருவது பாராட்டத்தக்க அருஞ்செயலாகும். தமிழ் வளர்ச்சித் துறையின் சார்பாகத் தமிழக வரலாறு எழுதுவதற்கு ஒரு குழுவை நம்முடைய அரசாங்கம் ஏற்படுத்தியிருக்கிறது. அந்த வரலாற்றுக் குழுவே சாசனச் சொல் தமிழ் அகராதியை எழுதுவதற்கு அரசாங்கம் ஆணையிடலாம். சாசனச் சொல் அகராதி ஒன்றை வெளியிடவேண்டும். அப்படி வெளியிடுவது தமிழ் வளர்ச்சியில் ஒரு படி முன்னேறுவதாகும். மேலும் அச் சொற்கள் மறைந்து போகாமல் காப்பாற்றியதும் ஆகும். அச் சொற்கள் மறைந்து போகாமலும் அவற்றைப் பயன்படுத்தும் முறையிலும் சாசனச் சொல் அகராதி வெளிவர வேண்டும். அத் துறையில் பயிற்சியுள்ள தக்க அறிஞர்களைக்கொண்டே இதனைச் செய்வது எளிது.

சாசனச் சொற்கள் சிலவற்றை வாசகர்களின் கவனத்துக்காகக் கீழே தருகிறேன். மிகச் சில சொற்களைத்தான் தருகிறேன். இவை பாதுகாப்பட வேண்டிய பழஞ் சொற்கள் என்பதை வாசகர்கள் முடிவு செய்வார்கள் என்பதில் ஐயமில்லை.

1. அக நாழிகை—கருவறை, கர்ப்பக்கிருகம், மூலஸ்தானம் (திருவுண்ணாழிகை என்றும்

2. அகநாழிகையார், அக நாழிகைப்பட்னி செய்வார்—கோவிலில் திருமேனிகளுக்குத் திருமஞ்சனம், அர்ச்சனை முதலியன செய்கிறவர். பூசை செய்கின்றவர்.

3. அகநாழிகைச் சென்னடை—திருக் கோவில்களின் அன்றாடச் செலவு.

4. அக்கன்—தமக்கை.

5. அகச் சுற்று—உட் பிரகாரம்.

6. அச்சு-பழைய நாணயங்களில் ஒன்று (அழகச்சு, ஆணையச்சு முதலியன).

7. அத்தாழம்—மாலைநேரம்

8. அட்டிக் கொடுத்தல்—தானமாகக்கொடுத்தல்(அட்டின, அட்டுவதாக).

9. ஆசந்திர தாரகம்—நிலாவும் விண்மீன்களும் உள்ளவரையில்.

10. ஆட்டை—ஆண்டு (ஆட்டைக்கு, ஆட்டை தோறும், ஆட்டை வட்டம்).

11. ஆதிரசாலை—மருத்துவமனை.

12. ஆள் காசு—தலைவரி.

13. ஆனை அச்சு—ஆனையின் உருவம் பொறித்த ஒரு காசு.

14. இஞ்ஞாட்டு — இந்த நாட்டின்.

15. இஞ்ஞான்—இந்த நாள்.

16. இடஞ்சில் (இடிஞ்சில்)—அகல் விளக்கு.

17. இணை—இரண்டு, ஜதை, ஜோடி.

18. இண்டை—கோயில் திருமேனிகளின் தலையைச் சுற்றி

19. இடை நாழிகை—அக நாழிகையைச் (கர்ப்பக் கிருகத்தை) சார்ந்த இடைகழி. அர்த்தமண்டபம் என்று இப்போது வழங்கப்படுகிறது.

20. இரண்டு பூ (இருபூ)—ஆண்டுகளுக்கு இரண்டு போகம் தானியம் விளைவது.

21. இறை—வரி (தறியிறை, செக்கிறை).

22. இறையிலி—வரியில்லாமல் தானம் செய்யப்பட்ட நிலம்.

23. இறையிழிச்சி—வரிநீக்கி.

24. இலக்கணஞ் செய்து—முறைகளை வகுத்து.

25. இழிக்க—அகழ, தோண்ட, கல்ல (துறவு கிணறு இழிக்க).

26. இலை—வெற்றிலை (இலை வாணியப்பாட்டம்—வெற்றிலை விற்பதற்கான வரி).

27. ஈழக்கருங்காசு (ஈழக் காசு)—ஈழ நாட்டில் (இலங்கையில்) வழங்கின காசு.

28. ஈழ விளக்கு—ஈழ நாட்டு விளக்கு.

29. ஈரங் கொல்லி—கோயில்களில் தரையைக் கழுவி மெழுகி ஈரத்தைப் புலர்த்துகிறவன்.

30. உண்ணாழிகை (உள்+நாழிகை) — திருவுண்ணாழிகை, அக நாழிகை, கர்ப்பக் கிருகம்.

31. உண்ணாழிகைப் புறம்—அகநாழிகையில் (கோயில்) பூசை செய்கிறவர்களுக்காகத் தானங் கொடுக்கப்பட்ட நிலம்.

32. உதிரப்பட்டி—போரில் உயிர்விட்ட வீரர்களின் குடும்பத்துக்கு அளிக்கப்பட்ட நிலம்.

33. உத்தர மந்திரி—முதல் அமைச்சர்.

34. உபயம் பலிசை (உபயம்—இரண்டு, பலிசை—வட்டி)—காசாகவும் தானியமாகவும் கொடுக்கப்படுகிற வட்டி.

35. உவா—அமாவாசை, பௌர்ணமி (தலையுவா—அமாவாசை. இடையுவா—முழு நிலா நாள்.)

இச்சொல் மலையாளத்தில் வாவு என்று வழங்கப்படுகிறது.

36. ஊத்தைப் பாட்டம்—ஆற்றிலிருந்து மண் எடுப்பதற்கான வரி.

37. ஊர் வாரியம்—ஊர் ஆட்சிக்குழு.

38. ஏணிக்காணம்—தென்னை பனை மரங்களிலிருந்து கள் இறக்குவதற்கான வரி.

39. ஏரி வாரியம்—ஏரியைப் பாதுகாக்கும் குழு (ஏரிவாரியப் பெருமக்கள்).

40. ஏரிப்பட்டி—ஏரியைப் பராமரிப்பதற்கான செலவுக்காக விடப்பட்ட நிலம்.

41. ஏத்தக் காணம்—ஏத்தம் (ஏற்றம்) இட்டு நீர் இறைத்துக் கொள்வதற்காகச் செலுத்தும் பணம்.

42. ஒட்டோலை—சம்மதித்து எழுதிக்கொடுத்த உடன்படிக்கை

43. ஒரு பூ நிலம்—ஒரு போகத்தானியம் விளையும் நிலம்.

44. ஒலிவண்ணார் பாறை—துணி வெளுக்கும் வண்ணார் செலுத்தும் பணம் (ஒலித்தல்—துணி வெளுத்தல்).

45. ஓரணை—ஒரு ஜதை, ஒரு ஜோடி.

46. ஓலை—திருமுக எழுத்து, தானப்பத்திரம்.

47. ஓலை எழுத்து—அரச ஆணையை எழுதும் அலுவலன்.

48. ஓலைத் தூது—கடிதம் எழுதி அஞ்சல் ஆள் மூலமாக அனுப்புதல் (ஓலைத் தூது கூடக்கடவர்).

இவைபோன்ற எத்துணையோ நூற்றுக்கணக்கான சொற்களையெல்லாம் அகரவரிசைப் படுத்திச் சாசனத் சொல் அகராதி ஒன்று வெளிவரவேண்டியது அவசியம் அல்லவா?

## ஆசியா–72 பொருட்காட்சியில் ஜப்பான் அரங்கு

புது டில்லியில் நடைபெறுகிற மூன்றுவது ஆசிய சர்வதேச வணிகக் கண்காட்சியில் பங்கெடுத்துக் கொள்கிற முக்கியமான வெளிநாடுகளில் ஜப்பானும் ஒன்று. 4,000 சதுர மீட்டர் பரப்பளவு நிலத்தில் ஜப்பான் காட்சி அரங்கு அழகுற அமைக்கப்பட்டிருக்கிறது. அரங்கினூடே மூன்று மரப்பாலங்களின்கீழே, செயற்கை சிற்றுறு 'சலசல' என்று ஓடிக்கொண்டிருக்கின்றது. பாலங்களின் கீழே பொருத்தப்பட்டுள்ள பச்சை, மஞ்சள் விளக்குகளின் ஒளி தண்ணீரில் பட்டு பிரதிபலிக்கும்போது, கனவுலகத்தில் இருப்பது போன்று பிரமை ஏற்படுகிறது.

ஜப்பான் காட்சி அரங்கு 5 பிரிவுகளாக பிரிக்கப்பட்டு, அந்நாட்டிலுள்ள 11 முக்கிய உற்பத்தி, வணிக நிறுவனங்களின் உற்பத்திப் பொருள்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. முக்கியமாக முன்னேறும் நாடுகளுக்குத் தேவையான இயந்திர சாதனங்கள் இடம் பெற்றுள்ளன. ஒரு பள்ளியை 5 இலட்சம் மடங்கு பெரிதாக்கிக் காட்டும் எலட்டிரான் மைக்ராஸ்கோப், 6 அல்லது 8 பேர் அமரக்கூடிய 'ஜெட்' விமானத்தின் 'மாடல்' அனைவரது கவனத்தையும் கவருகிறது.

சமீப ஆண்டுகளில் இந்தியா—ஜப்பான் கூட்டுறவு முன்னேற்றத்தை விளக்கும் புகைப்படங்கள் இடம் பெற்றுள்ளன.

திறந்த வெளியில் இரு குட்டி 'சூப்பர் எக்ஸ்பிரஸ் எலக்ட்ரானிக்' ரயில் வண்டிகள் ஓடுகின்றன. உலகின் மிக வேகமான 'நியூ டோக்கைடோ லைன்' இரயில் வண்டியின் மாடல் இது. இதில் 30 குழந்தைகள் அமரலாம். அத்துடன் பல்வேறு மிருகங்கள் வடிவில் மோட்டார் கார்களும் இருக்கின்றன. இவற்றில் குழந்தைகள் சவாரி செய்யலாம்.

கண்காட்சி முடிவடைந்த பிறகு, இந்தப் பொழுது போக்கு வண்டிகள், இந்திய அரசு மூலம் இந்தியக் குழந்தைகளின் உல்லாசப் பூங்காவுக்கு அன்பளிப்பாக அளிக்கப்படும்.

டிசம்பர் 9ஆம் தேதி ஜப்பான் நாள் கொண்டாடப்பட்டது. அன்று ஜப்பான் கலை நிகழ்ச்சிகளும் திரைப் படங்களும் காண்பிக்கப்பட்டன.

# உண்மையின் சந்நிதி

சோம. மகாதேவன்.

15

## வருவது வழித்தங்குமா ?

கடந்த நான்கு நாட்களாகவே மீனம்மாப் பாட்டி வீட்டைக் கடந்து போகவில்லை. வந்து மோதியிருக்கும் அதிர்ச்சி, நடையைக் குறைத்துக் கட்டிலிலே படுக்க வைத்து விட்டது.

இப்போது, யாரிடமும் சொல்லி அழமுடியாத கவலை பாட்டிக்கு.

ஒன்றே ஒன்றுக்காகத்தான் வாழ்நாளில் பெரும் பகுதி ஓய்வின்றி உழைத்தாள் இந்த மீனம்மாப் பாட்டி. எல்லாம் அவனே என்றிருக்கும் பேரனை வளர்த்து, ஆளாக்கி, நிறைவோடு வாழ வைத்து விட வேண்டுமென்ற துடிப்பு ஒன்றுதான். அதுவே, இறுதியில் இப்படிக் கலங்கித் தவிக்க வைத்து விட்டதே. இங்கே யாருமே நடக்கத் துணியாத தடத்தில் வழி நடந்து, இப்படிப் படுக்கையில் தள்ளி விட்டதே பேரனுக்குப் பெண்ணெடுத்த படலம்.

அவன்—பாண்டியன் பேசப் படித்தவன். எதிலேதான் அவனுக்குப் பயம் தெரிகிறது ? தலைக்குமேல் கல் என்றிருக்கும் போதும், அவன் சிரித்துக் கொண்டே நிற்கிறான். அவனுக்கிருக்கும் நெஞ்சழுத்தம் எல்லாருக்கும் இருக்க முடியுமா?

எந்த விதமான அச்சமும் தோன்றாமல், இதே ஊரில் குடியிருந்தவளுக்குத்தானே, கடைசிக் காலத்தில் இப்படி மேல் மூச்சு வாங்குகிறது.

கூடத்தை ஒட்டிய உள் அறையில் படுத்து, மேல் உத்திரத் கொண்டிருந்தாள் மீனம்மாப் பாட்டி. விழிகளின் ஓரத்திலே நீர் கோத்திருந்தது.

பொன்னையா பிழைப்பது இரண்டாம் பட்சம் என்று சொல்லுகிறார்களே அப்புறம் என்ன ஆகும் ? அருமை பெருமையாகப் பேரனைக் கட்டிக் காத்ததெல்லாம், இப்படியொரு சுழலில் மூழ்கிப் போவதற்கா ?

பாட்டி பொருமிக்கொண்டிருந்தாள்.

இடையிலே இருமலும் வந்தது.

சமையலறையிலிருந்து அரசி ஓடி வந்தாள்.

" பாட்டி "

" என்னம்மா "

" மருந்து குடிச்சுக்கிங்க " என்றவள், பக்கத்திலிருந்த அலமாரியைத் திறந்து, மருந்து எடுத்துக் கொண்டு வந்தாள் அரசி.

பாட்டி உதட்டளவில் சிரித்தாள். அதில் வேதனை கொப்பளித்தது.

" லிங்கம் எங்கேம்மா?"

" வயலுக்குப் போயிருக்காங்க பாட்டி."

" தனியாவா போயிருக்கான்?"

பாட்டி ஒருச்சாய்ந்து படுத்து அரசியைப் பார்த்தாள். கண்களில் தேங்கி நின்றிருந்த கண்ணீர் தலையணையில் வழிந்தது.

" ஊரெல்லாம் பகையா இருக்கேம்மா. வரப் போறதை நினைச்சு என் உயிரும் குறையுதே. நான் என்ன செய்யப் போறேன் ?" என்றாள் பெருமூச்சோடு.

" பாட்டி ' என்று பதறியவாறு முகத்திற்கு நேராகக் குனிந்தாள் அரசி. " இப்ப வந்திடுவாங்க " என்றாள்.

" அவன் வரலையா—ஊரைக் கட்டியாளறவன் ?"

"மதுரைக்குப் போனவங்க இன்னம் வரலே பாட்டி " என்றாள் அரசி.

பாட்டி திரும்பிப் படுத்தாள்.

அந்த ஊருட்டி முத்தையாவை இன்னிக்கு நேத்தா எனக்குத் தெரியும்! அவன் வச்ச குறி தப்பாதே. உருட்டிப் போடுவானே பாவி மகன். பெரிய வீடு எதையும் தாங்கிக்கும். அவங்க ஆட்ட பாட்டத்துக்குப் பலியாக நான்தான் கிடைச்சிருக்கேன் என்ற பாட்டி தலையில் கையை வைத்துக் கொண்டாள்.

பதட்டத்துடன் கட்டிலில் உட்கார்ந்து, பாட்டியின் கையைப் பிடித்துக் கொண்ட அரசிக்குக் கண்களில் நீர் பொங்கி

'' உங்க நல்ல மனசுக்கு ஒரு குறையும் வராது பாட்டி'' என்று மட்டுமே சொல்ல துடித்த அரசி, உதடுகள் துடிக்கப் பாட்டியின் நெஞ்சிலே முகம் புதைத்துக் கொண்டு வெம்பினாள்.

'' பிறந்த மகள் கண் கலங்காமே வாழணும்னு பெத்தவன் நினைக்கலேயம்மா?'' என்ற பாட்டி அரசியின் தலையை அணைத்துக் கொண்டாள்.

அரசியால் பாட்டிக்கு என்ன ஆறுதல் சொல்ல முடியும் ?

சற்று நேரம் கழித்து, அரசி தலை நிமிர்ந்த போது, பாட்டி கண்களை மூடி இருந்தாள். இரு மருங்கிலும் கண்ணீர் கசிந்து வந்தது.

அரசி குனிந்து கண்களைத் துடைத்துக் கொண்டாள். அவளால் பாட்டியின் கண்ணீரைத் துடைக்க முடியுமா ?

அப்போது, தலைவாசலிலிருந்து 'அரசி' என்றழைத்துக் கொண்டே வரும் லிங்கத்தின் குரல் கேட்டது.

அரசி, எழுந்து வெளியே வந்து, '' உடனே திரும்புறேன்னு சொல்லிட்டுப் போனீங்களே '' என்று கேட்டுக் கொண்டே எதிர் கொண்டு சென்றாள்.

'' ரெண்டு ஏக்கருக்கு உரம் போடுறதுக்கு இவ்வளவு நேரம் கூட ஆகாதா ? உன்னை நினைச்சு, இடையிலே எங்கேயும் நிக்கலேயே?'' என்று சொல்லிக் கொண்டே நெருங்கி வந்த லிங்கம், '' ஏன்........ கண்ணெல்லாம் கலங்கி இருக்கு?'' என்று கேட்டான்.

'' இன்னும் வரலையான்னு கேட்டு, பாட்டி துடிச்சுப் போறாங்க.''

''நீயும் கூடவே பதைச்சுப் போயிட்டியாக்கும். எப்படித் தான் பாண்டியனுக்குப் பின்னாலே வந்து நீ பிறந்தியோ?'' என்று சொல்லிச் சத்தமில்லாமல் சிரித்தான் லிங்கம்.

'இப்படி வம்பு வழக்கு வந்திருச்சேன்னு நினைச்சுக் கவலைப்படுறாங்க. முதல்லே பாட்டியைப் பாருங்க. '' என்றாள் அரசி அவசரத்துடன்.

'' நீயும் அப்பப்ப தைரியம் சொல்லணும். ''

'' நான் எப்படிங்க சொல்றது ? அண்ணன் இன்னம் வரலைன்னு எனக்குக் கலக்கமா இருக்கு. '' என்று சொல்லி உண்மையை ஒப்புக் கொண்டாள் அரசி.

'' நல்லா இருந்திச்சு. போனவன் காரியம் இல்லாமலா தங்கி இருப்பான். இதெல்லாம் ஒரு கவலையா ? '' என்று கேட்ட லிங்கம், அரசி பின்தொடரப் பாட்டி படுத்திருந்த அறைக்குள் நுழைந்தான்.

கட்டிலின் விளிம்பில் கையை ஊன்றிப் 'பாட்டி' என்றழைத்தான்.

பாட்டி கண்களைத் திறந்தாள்.

'' நான் சொல்லுறதைக் கேளுடா லிங்கம். '' என்றாள்.

'' என்ன பாட்டி?''

'' இனிமே நீ வயலுக்குப் போறதை நிறுத்திக்கோ. யாரை யாவது பதிலா ஒரு ஆளைப் போடு. அவன் போய் பார்த்துக்கட்டும் '' என்றாள் கவலை தோய்ந்த குரலில்.

பாட்டி வேறு எதையோ கூறப் போவதாக எதிர்பார்த்த லிங்கத்துக்கு, பாட்டியின் கவலை சாதாரணமாகவே பட்டது.

''இப்படிப் பயந்து பயந்து வாழ முடியுமா பாட்டி? நாம போகாமத்தான் உருப்படியா வீடு வந்து சேருமா ? எதையெதையோ நினைச்சு மனசை அலட்டிக்கிறீங்க. நீங்க இப்படிப் படுத்திருக்கிறதைப் பார்த்துத்தான் எனக்குக் கலக்கமா இருக்கு'' என்றான் கட்டிலிலேயே உட்கார்ந்து கொண்டு.



'' இவ்வளவு காலமா—, தனியா நின்னே காடுகரையெல்லாம் கட்டியாண்டேனே ; ஒரு பயம் தெரியலையே. இப்ப ஒருமிக்க எல்லாமே திரண்டு வருதேடா ? '' என்று சொல்லி வந்த போது, பாட்டிக்கு இருமல் வந்து விட்டது.

'' பாட்டி........எது வந்து யாரை என்ன செய்யப்போகுது? நீங்க படுற கவலைதான் உங்களுக்கு இப்ப நோயா இருக்கு'' என்றான் லிங்கம்.

'' நேத்து நாட்டாமைக்காரன் வந்து சொன்னானே. அந்தப் பொன்னையா பிழைக்கிறது உறுதியா தெரியலையாமே. உன்னையும் சிக்க வச்சுப் போட்டாங்களே. நீ என்னடா செய்யப் போறே?'' என்று கேட்ட

பாட்டி பேரனின் கையைப் பிடித்துக் கொண்டாள். உள்ளிருந்த நடுக்கம் அவள் கைகளில் தெரிந்தது.

லிங்கம் சற்று நேரம் மௌனமாக இருந்தான்.

'' பாட்டி நாம எந்தத் தவறையும் செய்யலே. நடக்கிறதெல்லாம் நன்மைக்குன்னு நினைங்க. உங்க மனசிலே பதியும் படியா சொல்லனும்னு அதுக்குப் பாண்டியன் தான் வரணும். அவனும் பொழுதடையிறதுக்குள்ளே எப்படியும் வந்திடுவான் '' என்ற லிங்கம் திரும்பி அரசியை ஏறிட்டுப் பார்த்தான்.

'' அவன் சொல்லுத்தானே இப்ப என்னைக் கீழே தள்ளி இருக்கு '' என்று சொல்லிப் பெருமூச்சு விட்டாள் பாட்டி.

'' அவன் சொன்னது எப்பவும் யாரையும் கீழே தள்ளாது பாட்டி, மேலேதான் தூக்கி வைக்கும். அவனும் நானும் உடல் ரெண்டா இருக்கமே தவிர, உயிர் ஒண்ணுதான். இந்த நேரத்திலே நீங்க ஊட்டுகிற தைரியம்தான் எங்களுக்கு வெற்றியைத் தேடித் தரணும் '' என்று லிங்கம் சொல்லி வந்த போது, முன்பக்கத்திலிருந்து சந்தடி கேட்டுக் கண்களில் ' நீர் மல்க நின்று கொண்டிருந்த அரசியை ஏறிட்டுப் பார்த்து, '' யார் வர்றாங்க பாரு ?'' என்றான்.

அரசி முன்பக்கம் வந்த போது, எதிரே பரபரப்புடன் ஐயனு வந்து கொண்டிருந்தான்.

அவனைக் கண்டதும் அரசி திகைப்புடன் நின்று விட்டாள்.

அரசிக்கு மறு மணமென்று ஆனதன் பின்னர், ஒரே ஒரு தடவை அண்ணனோடு வந்து பார்த்து விட்டுப் போனவன் ஐயனு.

இன்றைக்குப் பகல் பொழுதிலேயே துணிந்து இங்கே வந்திருக்கிறான்.

குனிந்து கண்களைத் துடைத்துக் கொண்டே '' வா ஐயனு'' என்றாள் அரசி.

வந்து நின்ற பரபரப்பில், இங்கு எடுத்த எடுப்பில் அரசியைப் பார்த்து விட்ட திகைப்பும் கலந்து கொள்ள, சொல்ல வந்ததைச் சொல்ல இயலாதவனாய் அரசியைப் பார்த்தவாறே நின்றான் ஐயனு.

'' எல்லாரும் நல்லா இருக்காங்களா ?'' என்று மேலும் பொதுவாகக் கேட்டபோது, அரசியின் உதடுகள் துடித்தன.

ஐயனுவுக்கும் கண்களில் நீர் பொங்கி வந்தது.

காதில் விழும் முன்பாகவே கண்ணீர் சிந்தி நிற்கும் அரசியிடம், எதை, எப்படிச் சொல்லுவது? தொடர்ந்து என்ன ஆறுதலைத்தான் சொல்ல முடியும்?

'' நான் கண்ணுக்கு முன்னாலே இருக்கிறது அப்பாவுக்கும் அம்மாவுக்கும் சுமையா இருக்கா ஐயனு ? '' என்று கேட்டாள் அரசி.

அவன் தலை குனிந்து கொண்டான்.

சுமைதான். இது தானே அங்கே, அடிப்படையில் கனத்துக் கிடப்பது.

'' பாண்டியன் இன்னம் வரலையம்மா ? '' என்று கேட்ட ஐயனுவின் குரல் இறங்கிப் போயிற்று.

அதற்குள்ளாக, '' என்ன ஐயனு ?'' என்று கேட்டுக் கொண்டே லிங்கம் அங்கு வந்து விட்டான்.

ஐயனு தயங்கினான். பிறகு மெதுவான குரலில் சொன்னான்.



" அவங்க நினைச்சதை முடிச்சிட்டாங்க. "

" என்ன சொல்றே! " என்றவாறு நெருங்கி வந்தான் லிங்கம்.

" காலையிலே பொன்னையா செத்துப் போயிட்டானாம். "

லிங்கமும் திகைத்துப் போனான். பாட்டி இருந்த அறையின் பக்கமாகத் திரும்பிப் பார்த்து விட்டு, " யாரு சொன்னது உனக்கு?" என்று குரலைத் தணித்துக் கொண்டு கேட்டான்.

"கொல்லைப் பக்கமாக வந்து இப்பத்தான் கந்தையா சொல்லிட்டுப் போறான். எல்லாமே சொல்லி வச்ச மாதிரித்தான் நடக்கு. " என்றான் ஐயனு குமுறலை உள்ளடக்கிய குரலில்.

" வேறே என்ன சொன்னான் ? "

" காலையிலேதான் சடையனும் இங்க வந்திருக்கானாம். வந்தவுடனேயே அவனுக்கு வெறியேத்தி விட்டிருக்காங்க. எடுப்பும்—தொடுப்பும் பொருத்தமாக இருக்கு. " என்றான் ஐயனு.

"போராட்டம் ஒரு முடிவுக்கு வரும்போது எல்லாமே சேர்ந்துதான் வரும். பாண்டியனும் வரட்டும் " என்ற லிங்கம் பின்னால் நின்ற அரசியைத் திரும்பிப் பார்த்தான்.

வழக்கு, கொலை வழக்காகி விட்ட அதிர்ச்சியில் சுவரோடு சாய்ந்து விட்டாள் அரசி.

" இப்ப எல்லாருக்குமே நிம்மதியா இருக்கும். இல்லையா ஐயனு. " என்று குமுறலோடு கேட்டாள் அரசி.

" ஆட்டிப் படைக்கிறதெல்லாம் சித்தப்பன் ... கையிலே இருக்குதம்மா. இந்த வேதனையிலேதான் நான் வெந்துகிட்டிருக்கேன். இனிமே என்ன —இந்த உயிரு வேறே எதுக்குத்தான் இருக்கு?" என்றான் ஐயனு கொந்தளிப்போடு.

அப்போது வாசல் பக்கமிருந்து சலசலப்புக் கேட்டது.

லிங்கமும் ஐயனும் பரபரப்புடன் முன்பக்கம் சென்றார்கள்.

வாசலிலே ஆவேசத்தோடு சடையன் நின்று கொண்டிருந்தான். சற்றுத் தள்ளி, வேடிக்கை பார்ப்பது போல் ஒரு கும்பலும் ஒதுங்கி நின்றுகொண்டிருந்தது.

சடையன் முன்பிருந்ததைவிட ஆள் கனத்திருந்தான். மீசையும் தடித்திருந்தது.

லிங்கத்தைக் கண்டதும் அவன் சீறினான்.

" எங்கண்ணனை வெட்டுறப்ப என்னை நினைக்கலையா ? பழி வாங்கத்தான் வந்திருக்கேன்." என்று சொல்லிக் கொக்கரித்தான்.

" யாரு குற்றவாளியின்னு கோர்ட்டிலே முடிவு சொல்லுவாங்க? அதுக்குள்ளே குறுக்கே வந்து விழுந்து உன்னோட முடிவைத் தேடிக்காதே " என்றான் லிங்கம் கோபத்தினால் உடல் பதற முன்னால் வந்து.

சடையன் நின்ற இடத்திலேயே வெறியோடு சிரித்தான்.

"என்னோட முடிவையும் கணிச்சுச் சொல்ற அளவுக்கு வளந்திட்டியா ? நானும் பொன்னையா இல்லை. சடையன். " என்றான் அவன் கைகளை ஆட்டிக் கொண்டு.

" நீ யாருன்னு எங்களுக்கு நல்லாத் தெரியுமே. இதை இங்க வந்து சொல்லிக்க வேண்டிய அவசியமே இல்லையே. எதைச் செய்யணுமோ—அதைப் பாரு." என்றான் ஐயனு நிதானமாக.

" செய்யத்தான் போறேன். நான் வச்ச குறி தப்பினதில்லை. தப்பாது." என்று உறுமினான் சடையன்.

ஆவேசம் பொங்க லிங்கத்துக்கு முன்னால் படிகாலில் இறங்கினான் சடையன். லிங்கம் அவனது கையைப் பிடித்துக் கொண்டான்.

" பாக்கிறவன்— அதையேன் சொல்லிக்கிட்டு நிக்கிறே. வாயேன் முன்னாலே " என்றான் ஐயனு கோபத்தோடு.

" என் நெஞ்சு குமுறுதடா. இதுக்கு எத்தனை பேர் பலியாகப் போறீங்களோ? போறேன். செத்தவனைச் சாம்பலாக்கிப் போட்டுட்டு வாரேன்" என்று சொல்லி விட்டுத் திரும்பி நடந்தவன், நின்று மீண்டும் திரும்பிப் பார்த்து, " நான் ரெத்தத்தைக் குடிச்சே வளர்ந்தவண்டா. உங்களை விடவா போறேன்? வந்து பாத்துக்கிறேன். " என்று ஆங்காரம் தொனிக்கச் சொல்லி விட்டுப் பூமியதிரவே நடந்து சென்றான் சடையன்.

சுற்றிலும் நின்று, வாய் திறக்காமலே வேடிக்கை பார்த்து நின்ற கும்பல், அந்தப் போக்கிரியை முந்த விட்டுப் பின் தொடர்ந்து சென்றது.

இந்தக் காட்சியை ரசித்தவாறு, லிங்கமும்-ஐயனும் முற்றத்திலேயே நின்றனர்.

இதுகாறும் கண்ணெதிரில் நடந்த நாடகத்தைப் பார்த்துத் துயரத்தால் கடல் அலையெனக் கொந்தளிக்கும் உள்ளத்தோடு தலைவாசல் கதவின் மீது சாய்ந்திருந்த அரசி, பாட்டியின் நினைவு வந்தவளாக, குனிந்து கண்களைத் துடைத்துக் கொண்டே உள் பக்கம் திரும்பிப் பார்த்தாள்.

உள் நடையின் நிலைப்படியைப் பிடித்தவாறே, கண் கலங்கி நின்று கொண்டிருந்த மீனம்மாப் பாட்டி, அந்தக் கணத்தில், கால்கள் துவள, அப்படியே சரிந்து கீழே சாய்ந்தாள்.

" பாட்டி !" என்றலறிக் கொண்டே உள்ளே ஓடினாள் அரசி.

(வளரும்)

**ஆசியா 72**
**பொருட்காட்சி**
**திரைப்படம்**

புதுடில்லியில் நடைபெற்று வரும் ஆசியா 72 பொருட்காட்சியைப் பற்றித் தமிழ்நாடு அரசு, செய்தி—மக்கள் தொடர்புத் துறையின் திரைப்படப் பிரிவு திரைப்படமாக எடுத்துள்ளது. வண்ணத்தில் எடுத்துள்ள இப்படம் 'ஆசியா 72' பொருட்காட்சியைப் பார்க்க வாய்ப்பில்லாதவர்களுக்கு நல்லதொரு வாய்ப்பை அளிக்கும்.

# இளைஞர் அணியின் இலட்சியப் பணிகள்

மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்த புதுத் தாமரைப் பட்டியில் பணியாற்றும் இளைஞர் அணிக் குழுவினர் தங்களின் ஈடில்லாப் பணிகளைப் பற்றி இங்கே எடுத்துரைக்கின்றனர்.

நம் நாட்டு மக்களில் பெரும்பாலோர் கிராமத்தில்தான் வாழ்கிறார்கள். 'கிராமம்தான் நம் நாட்டின் முதுகெலும்பு' என்று கூறினார் அண்ணல் காந்தி. ஆகவே, கிராமம் முன்னேறினால்தான் நம் நாடு முன்னேறும். இந்த உண்மையை மனத்தில் வைத்துக் கிராம மக்களின் முன்னேற்றத்திற்காகப் பற்பல திட்டங்களைத் தீட்டி அவைகளைச் செயல்படுத்தி வருகிறது தமிழக அரசு.

நம் நாட்டு இளைஞர்களைக் கிராமச் சூழ்நிலைகளிலே பழக்கி, அவர்களின் சேவைகளைக் கிராம மக்களுக்காகப் பயன்படுத்தும் பொருட்டும், படித்துப் பட்டம் பெற்ற இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பினை நல்கும் பொருட்டும் தமிழக முதல்வர் கலைஞர் அவர்களால் சென்ற ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது 'இளைஞர் அணி'. அந்த அணியின் கீழ்ப் பணியாற்றும் பேறு பெற்றவர்களில் நாங்களும் சிலர்.

எங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள வேலைகளில் மிக முக்கியமானது 'முதியோர் கல்வி' கிராமத்திலுள்ள பதினைந்து வயது முதல் ஐம்பது வயதுக்குட்பட்ட எழுதப்படிக்கத் தெரியாத மக்களுக்கு எழுதப் படிக்கச் சொல்லிக் கொடுக்க வேண்டும். அதற்காகக் கிராமத்திலுள்ள எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள், தெரியாதவர்கள் பட்டியல் தயார் செய்து, அதன்படி எழுதப்படிக்கத் தெரியாதவர்களைத் தனியாகச் சந்தித்து முதியோர் கல்வி வகுப்புகளுக்கு வருவதற்கான ஏற்பாடுகள் செய்தோம்; ஒவ்வொரு நாளும் மாலை ஏழு மணி முதல் ஒன்பது மணிவரை கிராம ஊராட்சி மன்ற அலுவலகத்தில் அவர்களைக் கூட்டிவைத்து எழுதப் படிக்கச் சொல்லிக் கொடுத்து வருகிறோம். கிராம மக்களின் சொந்த வேலைகளுக்குச் சிற்சில சமயங்களில் இது தடையாக



இருந்தாலும், அவர்களிடையே இந்தத் திட்டத்திற்கு நல்ல வரவேற்புள்ளது. கிராமத்திலுள்ள இளைஞர்களை ஒன்று சேர்த்து 'இளைஞர் மன்றம்' அமைத்து அதன்மூலம் நாடு சிறக்க நல்லபல பணிகள் செய்வதுதான் எங்களது அடுத்த முக்கிய நோக்கம். அதன்படி முப்பத்துநான்கு இளைஞர்களைக் கொண்ட ஓர் 'இளைஞர் மன்றம்' அமைத்து அதன்மூலம் கிராம விளையாட்டுகள், தீண்டாமை ஒழிப்புப் பிரச்சாரம், கிராம மக்கள் ஒற்றுமை, முன்னேற்றம் இவைகளுக்கான பணிகள் செய்தல் போன்றவைகளைச் செய்து வருகிறோம்.

. இளைஞர் மன்றத்தின் சார்பில் பொங்கல்விழா முதலியவற்றை விளையாட்டுப் போட்டிகள் நடத்தி மிகவும் சிறப்பாகக் கொண்டாடுகிறோம். கிராமத்தில் சுற்றுப்புறச் சுகாதாரத்திற்காக நல்ல பல பணிகள் செய்வது எங்களுடைய மூன்றாவது முக்கிய நோக்கம். இதன்படி ஒவ்வொரு வீட்டிற்கும் ஏற்ற முறையில் மூன்று விதமான கழிவறைகள் அமைத்துப் பயன்படுத்துவது, சாக்கடைகளைச் சுகாதாரமுறைப்படி தேக்கி அவற்றைப் பயன்படுத்துவது முதலியவைகள் சம்பந்தமாக வேண்டிய அறிவுரைகள் வழங்கிவருகிறோம்.

இந்த முக்கிய வேலைகள் அல்லாது விவசாய முன்னேற்றம், கால்நடை வளர்ச்சி குடும்ப நல்வாழ்வு முதலியவற்றிற்கும் எங்களாலியன்ற ஒத்துழைப்புகளை நல்கி வருகிறோம்.

இவையல்லாது அவ்வப்போது அரசு அலுவலர்களுடன் தொடர்பு கொண்டு கிராம மக்களுக்காகப் பற்பல சேவைகளைச் செய்து வருகிறோம்.

தமிழக அரசால்நாட்டு மக்களுக்காகச் செயல்படுத்தப்படும் அனைத்துத் திட்டங்களைப்பற்றிக் கிராம மக்களுக்கு அறிவித்து அந்தத் திட்டங்களின் முழுப் பயனையும் கிராமங்களுக்குக் கிடைக்கச் செய்வதும் எங்கள் பணிகளுள் ஒன்றே!

# Ecocide




**Ecological hazards by Thermal Power Stations**

Thermal power stations using coal and set up in the country long back are not strictly pollution proof and discharge large quantities of fly ash and other effluents. Mechanical collectors provided in Thermal power stations can at best stop only 80 to 85 per cent of fly ash escaping into the air. But the recently developed Electrostatic Precipitators used along with mechanical separators can collect as much as 98 to 99 per cent of fly ash.

The extent of environmental pollution by fly ash discharge from power stations will be catastrophic to future generations, if it is not checked properly.

By 1980, about 52 million KW of electricity will be the targeted generating capacity. Out of this, about 24 million KW will be thermal. Assuming most of these power stations use coal with 30 to 45 per cent ash, then nearly 50 million tonnes of coal will be burnt in these stations, producing 15 million tonnes of ash. That will mean about 3 million tonnes of fly ash in a year, or about 8,800 tonnes a day will get into the atmosphere. Using mechanical collectors, the discharge will be reduced only to 1,325 tonnes a day and with Electrostatic Precipitators, this will be reduced to a mere 180 tonnes a day.

## but not with BHEL built power stations



Electrostatic Precipitators have:

- sustained high collecting efficiency upto 99%
- minimum operating costs
- low energy consumption
- easy maintenance and
- long durability.

Other than in Thermal Power Stations, Electrostatic Precipitators are also installed in cement and steel plants, in chemical and fertilizer industries and in producer gas plants.

BHEL-High Pressure Boiler Plant have been able to develop a highly effective design of Electrostatic Precipitators, with a wide adoptability. These are supplied as original equipments to every thermal power station designed and commissioned by BHEL. These can be supplied on replacement basis or as additions to existing power stations also.

**BHEL**

BHARAT HEAVY ELECTRICALS LTD.
(A Govt. of India Undertaking)
Unit: High Pressure Boiler Plant
TIRUCHIRAPALLI-14
Regd. Office:
5, Parliament St., New Delhi-1

# கேளுங்கள் கொடுக்கப்படும்

எங்கள் உழவர் விவாதக் குழுவில் உள்ள 56 உழவர்களின் நிலத்தில் மண் மாதிரி எடுத்து மண் பரிசோதனைக்கு அனுப்பி அதன் முடிவுகள் எங்களுக்குக் கிடைத்துள்ளன. அவைகளிலிருந்து 45 உழவர்களின் நிலம் அமிலத் தன்மை உள்ளதாகத் தெரிய வருகிறது. இந்த அமிலத் தன்மையைப் போக்கி நல்ல மகசூல் அடைய எந்த முறைகளைப் பின்பற்ற வேண்டும் என்று விரிவாகத் 'தமிழரசு' இதழில் வெளியிட வேண்டுகிறேன்.

—பி. எஸ். சங்கரநாராயணன்,
அமைப்பாளர்,
உழவர் விவாதக்குழு,
ரவண சமுத்திரம்,
நெல்லை மாவட்டம்.

மண், அமிலத் தன்மையுடையதாக இருக்குமானால், அத்தன்மையைப் போக்கச் சுண்ணும்பு (Calcium carbonate) இடவேண்டும். மண் பரிசோதனையின் முடிவில் உங்கள் நிலத்தினுடைய 'பி. எச்.' எனப்படும் அமிலகார நிலை (pH.) குறிப்பிடப்பட்டிருக்கும். அதைக் கவனித்துப் பாருங்கள். பொதுவாக 'பி.எச்.' அளவு 6·0 என்ற அளவுக்குக் குறைந்திருப்பின், நிலம் அமிலத் தன்மையுடையதாக இருக்கிறது என்பது உறுதி. 'பி.எச்.' அளவுக்கு ஏற்ப ஒவ்வொரு ஏக்கர் நிலத்திற்கும் கீழே குறிப்பிட்டுள்ள அளவில், சுண்ணும்பு இட வேண்டும் என்று பரிந்துரைக் கப்படுகிறது.

| 'பி.எச்.' அளவு. | | ஏக்கருக்கு இட வேண்டிய சுண்ணும்பின் அளவு. (கிலோ) |
|---|---|---|
| 5·9 | .. | 455 |
| 5·8 | .. | 680 |
| 5·7 | .. | 905 |
| 5·6 | .. | 1,135 |
| 5·5 | .. | 1,360 |
| 5·4 | .. | 1,590 |
| 5·3 | .. | 1,810 |
| 5·2 | .. | 2,040 |
| 5·1 | .. | 2,260 |
| 5·0 | .. | 2,495 |

மற்றும் அதற்குக் கீழே.

உங்கள் மண் பரிசோதனை முடிவில் குறிப்பிட்டுள்ள 'பி.எச்.' நிலைக்கு ஏற்ப, சுண்ணும்பு இட வேண்டிய அளவை நிர்ணயித்துக் கொண்டு, அந்த அளவில் சுண்ணும்பை நிலத்தில் இட்டு, நன்கு கலக்குமாறு உழுதுவிட வேண்டும். சுண்ணும்பு இட்ட ஒரு வாரத்திற்குப் பிறகே, நிலத்தில் நடவு செய்ய வேண்டும்.

இப்பரிந்துரை பொதுவானதேயாகும். உங்கள் நிலத்தின் அமிலத் தன்மையைப் போக்க என்ன செய்ய வேண்டும் என்பதை மண் பரிசோதனையின் முடிவில் தெரிவிக்கப்பட்டிருக்கும். எனவே, அதில் கண்டுள்ளபடி நீங்கள் செய்வதே சிறந்தது.

உங்கள் நிலம் முழு அளவில் அமிலத் தன்மை யற்றதாக ஆகும் வரை, 6 மாதங்களுக்கு ஒருமுறை வீதம், மண் பரிசோதனை செய்து, அதில் குறிப்பிடப்படும் 'பி.எச்.' அளவுக்கு ஏற்ப, சுண்ணும்பை இட்டுவரவேண்டும்.

'தமிழரசு' 1—9—72 தேதி இதழில் சோயா மொச்சையைப் 'பென்சிலின்', 'ஸ்ட்ரெப்டோமைசின்' போன்ற மருந்துகள் தயாரிக்க வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதாகக் கூறப்பட்டுள்ளது. இந்த இரு மருந்துகளும் இந்தியாவில் எங்குத் தயார் செய்யப்படுகிறது ?

—வெ. ர. ஐயப்பன், பி.ஏ.,
அமைப்பாளர்,
உழவர் ஆய்வு மன்றம்,
சுக்காம்பட்டி,
மதுரை மாவட்டம்.

'பென்சிலின்', 'ஸ்ட்ரெப்டோமைசின்' போன்ற நோய்த் தடுப்பு மருந்துகள் (Anti-biotics) இந்தியாவில் 'பிம்பிரி', 'டிராம்பே', பம்பாய் ஆகிய இடங்களில் தயாரிக்கப்படுகின்றன.

தற்போது சூரிய காந்தி பயிர் செய்ய அரசாங்கம் ஊக்குவிப்பதாகவும், அதற்கு மானியம் அளிப்பதாகவும் அறிகிறேன். இதற்கு அரசாங்கம் கொடுக்கும் மானியத் தொகை எவ்வளவு? ஏக்கருக்கு எவ்வளவு விளைச்சல் காணமுடியும்? எந்தப் பருவத்தில் பயிர் செய்ய வேண்டும் ? பொறுக்கு விதைகள் எங்குக் கிடைக்கும் ? விதைகளை விற்பனை செய்ய எங்கே கொண்டு செல்ல வேண்டும் ?

—ஆ. நா. கனகராசு,
தலைமைப் பண்டகசாலை,
பொறுப்பாளர்,
மின்வாரியம், கிருட்டிணகிரி.

தமிழ்நாடு அரசும், இந்திய அரசும், 'சூரிய காந்தி' பயிரிடுவதை ஊக்குவிக்கின்றன. செயல் விளக்கத் தளை அமைப்பவர்களுக்கு மட்டுமே முன்பு மானியம் வழங்கப்பட்டது. தற்பொழுது சூரியகாந்தி பயிரிடுவதற்குப் பின்கண்ட சலுகைகள் அளிக்கப்படுகின்றன.

1. நிலக்கடலை ஏற்றுமதி ஊக்குவிப்புத் திட்டம் நடைமுறையில் உள்ள இடங்களில் ஏக்கருக்கு 4 கிலோ விதையும், அவ்விதைகளுடன் கலப்பதறகுத் தேவையான மருந்தும் இலவசமாக அளிக்கப்படுகிறது.

2. கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் சூரியகாந்தி பயிரிடுவதற்காகக் குறுகிய காலக் கடன் வழங்க ஆவன செய்யப்பட்டுள்ளது.

மானாவாரியில் சூரியகாந்தி பயிரிட்டால் ஏக்கருக்குச் சராசரியாக 300 கிலோவும், இறைவையில் 600 கிலோவும் மகசூல் கிடைக்கும். செப்டம்பர்—அக்டோபர் முதல் டிசம்பர்–சனவரி வரையான பருவத்தில் மானாவாரியாகவும், சூன்முதல் செப்டம்பர் வரையான பருவத்திலும், பிப்ரவரி—மார்ச்சு முதல் மே—சூன் வரையான பருவத்திலும் இறைவையாகவும் சூரியகாந்தியைப் பயிரிடலாம். பொறுக்குவிதைகள் பெற உங்கள் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் பணியாற்றும் துணை வேளாண்மை அலுவலர் (வளர்ச்சி) அவர்களின் உதவியை நாடுங்கள். உங்களுக்குக் கிடைக்கும் சூரியகாந்தி




பிலிப்ஸ், HRC-16 எகானமி லாண்டர்னை அறிமுகப் படுத்துகிறது. HPL 125 W MV லாம்புக்கேற்ற சிக்கனமான ஃபிட்டிங்.

சிறியதும், அதிக நடமாட்டமுமில்லாத தெருக்களில் இனி நீங்கள் செலவைப் பெருக்கும் லாம்ப் ஃபிட்டிங்குகளை உபயோகிக்கத்தேவையில்லை. HRC-16 உங்களுக்குத் தெருப்பாதுகாப்பை மலிவாகக் கிடைக்க வழி செய்கிறது.

HRC-16 ஒரு கச்சிதமான ஃபிட்டிங்காகும். இதன் உள்ளேயே பலாஸ்ட் யூனிட் மற்றும் தெருவை நோக்கி ஒளியைப் பாயவைக்கும் சிறந்த ரிஃப்ளெக்டர் இவற்றின் இணைப்பு உள்ளது. இப்போதுள்ள தெரு விளக்கின் பிராக்கெட்களிலேயே இதை எளிதில் பொருத்தலாம்.

ஹை ட்ரான்ஸ்பேரென்ஸி மற்றும் அக்ரிலிக் கவருடன் சேர்ந்தோ அல்லது தனியாகவோ HRC-16 கிடைக்கும்.

# சிறந்த ஒரு லாம்ப் வேண்டுமா?
# பிலிப்ஸ் வாங்குங்கள்



PHL 3562

**பிலிப்ஸ்**

PHILIPS

பிலிப்ஸ் இந்தியா லிமிடெட்
கல்கத்தா • பம்பாய் • புதுடில்லி • சென்னை

ம்கசூலை ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களின் மூலமாகவோ அல்லது தனிப்பட்ட வியாபாரிகள் மூலமாகவோ விற்பனை செய்யலாம். அல்லது நீங்களே சூரியகாந்தி விதையை நாட்டுச் செக்கு அல்லது 'எக்ஸ் பெல்லர்' ஆலை, அல்லது 'ரோட்டரி' ஆலையில் இட்டு எண்ணெய் எடுத்து, எண்ணெய் ஆக விற்பனை செய்யலாம். பிண்ணாக்கைக் கால்நடைகளுக்குத் தீவனமாகப் பயன்படுத்தலாம்.

எங்கள் பகுதியில் மழை சரியில்லாததால் (கிணற்றில் தண்ணீர் இல்லாததால்) சம்பாப் பட்டத்திற்கு முன் கூட்டியே நாற்று விடவில்லை. தற்சமயம் தொடர்ந்து மழை பெய்திருப்பதால் கிணற்றில் ஓரளவு தண்ணீர் ஊறிக் கொண்டிருக்கிறது. மானாவாரியாக நெல் விதைக்கலாம் என்று சொல்கிறார்கள். எனவே, தற்சமயம் என்ன நெல் விதைக்கலாம்? ஐ. ஆர். 8 போடலாமா? ஐ. ஆர். 20 போடலாமா? ஐ. ஆர். 8 குளிர் தாங்கும் சக்தியில்லாததால் மகசூல் குறையும் எனச் செப்டம்பர் 16-ஆம் தேதி 'தமிழரசு' இதழில் வெளியாகியுள்ளது. எங்கள் பகுதியில் ஐ. ஆர். 8, ஐ. ஆர். 20, ஆடுதுறை 27, ஐ. ஆர். 22 முதலிய நெல் ரகங்கள் உள்ளன. இதில் எதை மானாவாரியாகப் போடலாம்? இதில் சொல்லப் படாத வேறு வகைதான் போட வேண்டும் என்று நீங்கள் கூறுவீர்களேயானால், அதை எங்கு எழுதிப் பெறுவது? உடனடியாகக் கிடைக்குமா? அப்படி மானாவாரியாகப் போடும் ரகத்தின் கட்டுக்கோப்புச் சாகுபடி முறைகளைத் தெரிவிக்கவும்? இக்கேள்விக்கு நவம்பர் 1-ஆம் தேதி இதழிலேயேவிடையை எதிர்பார்க்கிறோம்.

—துரை முருகேசன்,
மாவுத்தன்பட்டி,
நிலக்கோட்டை வட்டம்,
மதுரை மாவட்டம்.

'தமிழரசு' இதழில் வெளியிடப்படவிருக்கிற கட்டுரைகள் சுமார் ஒரு மாதத்திற்கு முன் கூட்டியே எழுதப்பட்டு, அச்சகத்திற்கு அனுப்பப்பட்டு விடுகின்றன. எனவே, தாங்கள் கேட்டுள்ளபடி நவம்பர் 1-ஆம் தேதி இதழில் தங்கள் கேள்விக்கு விடை அளிக்க இயலாமைக்கு வருந்துகிறோம். தாங்கள் 24—10—1972 அன்று கடிதம் எழுதி, 1—11—1972 இதழில் வெளியிட வேண்டுமென்று கேட்பது முடியக் கூடிய செயலா என்பதைத் தயவு செய்து எண்ணிப் பார்த்தால், எங்கள் மேல் தவறு இல்லை என்பது தெளிவாகும். எனவே, இனிமேலாவது முன் கூட்டியே எழுதுங்கள். நூற்றுக்கணக்கான உழவர் பெருமக்களிடமிருந்து தொடர்ந்து கேள்விகள் வந்து கொண்டே இருப்பதால், அவைகளில் முக்கியமானவற்றையும், அவசரமானவற்றையும் எடுத்துக் கொண்டு விடையளிக்க வேண்டியுள்ளது. தாங்கள் மொத்தம் 10 கேள்விகள் கேட்டிருக்கிறீர்கள். எனவே, எல்லாக் கேள்விகளுக்கும் உடன் விடை அளிக்க இயலவில்லை. ஆயினும் தொடர்ந்து உங்கள் கேள்விகளுக்கு விடையளிக்கவிருக்கின்றோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தாங்கள் குறிப்பிட்டுள்ள ரகங்களில் ஐ. ஆர். 8 மட்டுமே மானாவாரியாகப் பயிரிடுவதற்கு ஏற்றது. ஆனால் ஐ. ஆர். 8 ரகத்தை மானாவாரியாகச் சாகுபடி செய்ய சூலை, ஆகஸ்டு மாதங்களில் விதைப்பதுதான் சிறந்தது. ஆகஸ்டு மாதத்தில் 'கோ.31' என்னும் 'ஒட்டு மானாவாரி சம்பா' ரகத்தையும் விதைக்கலாம். ஆனால், மானாவாரியாக நெல் விதைக்க நவம்பர் மாதம் ஏற்றதல்ல. நவம்பர் மாதத்தில் மானாவாரியாக விதைப்பதற்கு ஏற்ற ரகமும் இல்லை. எனவே, காலம் கடந்து விட்டதால் மானாவாரியாக நெல் சாகுபடி செய்யும் முயற்சி பயனளிக்காது.

தற்பொழுது தமிழ்நாடெங்கும் நல்ல மழை பெய்ததன் காரணமாகத் தங்கள் பகுதிக் கிணறுகளில் தண்ணீர் நிறைய ஊறும் என்று நம்புகிறோம். போதிய தண்ணீர் கிடைக்குமானால், நவம்பர் 30-ஆம் தேதிக்குள் அன்னபூர்ணா (கல்சர்—28) என்னும் ரகத்தை நாற்று விடலாம். இதன் வயது 95 நாட்களேயாகும். 'அன்னபூர்ணா' குறுகிய கால வயதுடையதாக இருப்பதால், தண்ணீர் பற்றாக் குறையுள்ள இடங்களுக்கு மிகவும் ஏற்றது. இந்த ரகத்தை உடனடியாக விதைப்பதற்கும், தங்களால் இயலாதென்று எண்ணுகின்றோம். இந்த ரக விதை உங்கள் ஊராட்சி ஒன்றிய வேளாண்மைக் கிடங்கில் கிடைக்குமா என்பதும் எங்களுக்குத் தெரியாது. இவ்விவரம் எதிர்காலத்திலாவது தங்களுக்குப் பயன்படும் என்று கருதியே தெரிவிக்கின்றோம்.

தண்ணீர் வசதி இருக்குமானால் டிசம்பர் கடைசியில் அல்லது சனவரியில் ஐ. ஆர். 8 ரகத்தை நாற்று விட்டு, நடவு செய்யுங்கள். இதன் வயது 135 நாட்களே. ஐ. ஆர். 8 ஓரளவு தண்ணீர் பற்றாக் குறையையும் தாங்கிக் கொள்ளும். தங்கள் கிணற்றுப் பாசனத்திற்கு ஐ. ஆர். 8 மிகவும் ஏற்றதாக இருக்கும். எனவே, டிசம்பர் கடைசியில் அல்லது சனவரி முதலில் ஐ. ஆர். 8 நாற்றுவிட்டுச் சாகுபடி செய்வதே பயன்தரும் செயலாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எனது வீட்டுத் தோட்டத்தில் மல்லிகைக் கொடி பயிரிட்டுள்ளேன். அது நன்றாக வளராமல், இலைகளில் வெள்ளைநிறம் ஏற்பட்டு, செடி சரியாக வளரவில்லை. காரணம் தெரியவில்லை? செடி நன்றாக வளர என்ன செய்ய வேண்டுமென்பதைத் தயவு செய்து வெளியிடவும்?

—பி. ராசன்,
தேரப்பாடி,
திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

## பூச்சிகளை எப்பொழுது தடுப்பது?

பயிர்களின் மேலே காணப்படக் கூடிய பூச்சிகளைப் பொறுத்தமட்டில், அவை பயிர்களில் தோன்றிய பிறகு கூட மருந்து தெளித்துக் கட்டுப்படுத்தலாம். ஆனால் பயிர்களின் உள்ளே தோன்றி தீங்கு விளைவிக்கக் கூடிய பூச்சிகளுக்கு-அவை எச்சமயத்தில் பயிர்களின் உள்ளே செல்லக் கூடுமோ, அச்சமயங்களில்-முன் தடுப்பாக மருந்தைத் தெளிப்பது நல்லது. இதனாலேயே 2 அல்லது 3 முறை மருந்து தெளிக்குமாறு பரிந்துரைக்கப்படுகிறது. அதுபோலவே, கண்களுக்கு எளிதில் புலப்படாத பூச்சிகளைக் கட்டுப்படுத்தவும் முன்கூட்டியே மருந்து தெளிப்பது சிறந்தது. மாவு போன்ற பொருளால் மூடப்பட்ட பூச்சிகளுக்கு வீரியம் மிகுந்த மருந்துகளை பூச்சிகளின்மேல் நன்கு படும்படி தெளிக்க வேண்டும்.

மல்லிகைக் கொடியின் இலைகளில் முதலில் வெள்ளை நிறம் ஏற்பட்டு, பிறகு பழுப்பு நிறமாக மாறி உதிர்ந்துவிடுமானல், இது சிவப்புச் சிலந்திப் பூச்சியின் தாக்குதலால் ஏற்பட்டிருக்கக் கூடும். சிவப்புச் சிலந்தியின் சேதத்தைத் தடுக்க 'ட்ரைத்தியான்' என்ற மருந்தில் 1·5 மில்லி லிட்டரை 1 லிட்டர் தண்ணீரில் கலந்து வாரமொருமுறை வீதம் 3 முறை தெளிக்க வேண்டும்.

மல்லிகைக் கொடியிலுள்ள இலைகளின் 2 பக்கங்களிலும் வெள்ளைநிறக் கொப்புளங்கள் காணப்பட்டு, பிறகு கருகி விட்டால், இது இலைக் கொப்புளம் உண்டாக்கும் சிலந்திப் பூச்சியால் தாக்கப்பட்ட அறிகுறியாகும். இதைத் தடுக்கக் 'கரையும் கந்தகம்' அல்லது 'தயோவிட்' என்னும் மருந்தில் 10 கிராமை 4.5 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும்.

'மெட்டாசிஸ்டாக்ஸ்' என்ற மருந்தில் 1 மில்லி லிட்டரை 1 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளித்தும் இப்பூச்சியைக் கட்டுப்படுத்தலாம்.

எனவே, பூச்சி எது என்பதை நன்கு கவனித்து அதற்கேற்ற மருந்தைத் தெளியுங்கள்.

**பூச்சிகளை எவ்வாறு கண்டு பிடிப்பது?**

சில பூச்சிகள் கண்களுக்கு எளிதில் தென்படும். அவை பயிர்களின் மேலேயே காணப்படும். (உ-ம்) இலைப் புழுக்கள், வெட்டுக் கிளிகள், நாவாய்ப் பூச்சிகள்.

சில பூச்சிகள் சாதாரணமாக கண்களுக்குத் தெரியாது. பயிர்களின் தோகையைத் தட்டிப் பார்த்தால் தான் தெரியும். பயிர்களின் தோகையைத் தட்டும் பொழுது பூச்சிகள் பறந்து செல்லும். அப்பொழுதுதான் பூச்சிகள் கண்களுக்குத் தெரியும். (உ-ம்) தத்துப் பூச்சி, நெற்பேன்.

சில பூச்சிகளைக் கூர்ந்து நோக்கினல் மட்டுமே தெரியும். (உ-ம்) 'பல்காரிட்' தத்துப் பூச்சி.

சில பூச்சிகளை சேதத்தின் அறிகுறியின் மூலமாகவே அறிந்து கொள்ள முடியும். (உ-ம்) குருத்துப் பூச்சி, ஆனைக் கொம்பன். இவ்வகைப் பூச்சிகளை அறிய பயிர்களின் தண்டுகளைப் பிளந்துபார்க்க வேண்டும்.

வர்களைச் சிவப்பு எறும்புகள் கடிக்கும். வலி, பொறுக்க முடியாதபடி இருக்கும். கடித்த இடம் வீக்கமாகவும், சிவந்தும் காணப்படும். சில சமயம் மாமரத்தின் கீழே, மண்ணிலும் இவை மேய்ந்து கொண்டு இருக்கும்.

சிவப்பு எறும்புகளை அழிக்க பி.எச்.சி. 5 சதத்தூளைத் தூவ வேண்டும். அல்லது பி.எச்.சி. 50 சதத் தண்ணீரில் கரையும் தூளைத் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும்,

**சோயா மொச்சை விவரம் கண்டு மனம் மகிழ்ந்தேன். நீங்கள் குறிப்பிட்ட காலத்தில் மட்டும் தான் பயிரிடலாமா? வேறு காலங்களிலும் பயிரிடலாமா? அதனுடைய விதை பேக்டீரியல் கல்ச்சர், திபா முதலியன சேலம் மாவட்டத்தில் எங்குக் கிடைக்கும் என்பதைத் தயவு செய்து தெரிவிக்கவும்?**

—எஸ்.பி. தங்கவேலு,
சாந்தி நகர்,
பொத்தனூர் (அஞ்சல்),
சேலம் மாவட்டம்.

**தமிழ்நாடு அரசு வேளாண்மைத் துறையினல் வெளியிடப்பட்ட 'வேளாண்மைக் குறிப்புகள்' என்ற கையேட்டை எவ்விடத்தில் பெறலாம்? விலை என்ன?**

—சிவகிரி இரா. மீனாட்சி சுந்தரம்,
நந்தனம், சென்னை.

"வேளாண்மைக் குறிப்புகள்" என்ற கையேட்டைப் பின்கண்ட முகவரியில் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.

மாவட்ட வேளாண்மை அலுவலர் (செய்தி),
வேளாண்மைத் தகவல் செய்தி நிலையம்,
வேளாண்மைத்துறை இயக்குநர் அலுவலகம்,
சேப்பாக்கம், சென்னை-5.

வேளாண்மைக் குறிப்புகளில் 2 தொகுதிகள் உள்ளன. இவ்விரண்டு தொகுதிகளும் சேர்ந்து ஒரு ரூபாய் விலைக்கு விற்கப்பட்டு வருகிறது.

**எங்கள் தோட்டத்தில் உள்ள மாமரங்களில் 'முசுடு' என்னும் சிவப்புப் பூச்சி அதிகமாக உள்ளது. கட்டை எறும்பு போல் உள்ளது. இலைகளில் கூடு கட்டிக் கொண்டுள்ளது. மாமரங்களில் மாங்காய் காய்த்தால், அறுப்பது சிரமமாக உள்ளது. மரத்தின் கிட்டே போக முடியவில்லை. அது கடித்தால், கொளவி கொட்டியதுபோல் வலி ஏற்படுகிறது. இதர மரங்களிலும் உள்ளது. அதைப் போக்க என்ன செய்ய வேண்டும்?**

—ஆர். கந்தசாமி,
நியூஸ் ஏஜெண்ட்,
ஆண்டிமடம் (அஞ்சல்),
திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

தாங்கள் குறிப்பிட்டுள்ள 'முசுடு', 'சிவப்பு எறும்பு' (Red ant) (Oecophylla smaragdina) எனப்படுகிறது. இவை மாமரங்களில் கூடுகட்டிக் கொண்டு வாழ்கின்றன. காய்கள் அறுக்கவோ, அல்லது மாவிலை ஒடிக்கவோ மரத்தில் ஏறுகின்ற

'தமிழரசு' இதழில் குறிப்பிட்டுள்ள பருவத்தில் மட்டும் பெரும் மகசூல் கிடைக்கும். காய் கறிக்காகச் சிறு அளவில் பயிரிட விரும்பினல் எப்பொழுது வேண்டுமானலும் பயிரிடலாம். சோயாமொச்சையின் விதை 'பேக்டீரியல் கல்ச்சர்' ஆகியவை பெற உங்கள் ஊராட்சி ஒன்றியத் துணைவேளாண்மை அலுவலர் (வளர்ச்சி) அவர்களையோ அல்லது சேலத்தில் உள்ள மாவட்ட வேளாண்மை அலுவலர் அவர்களையோ நாடுதல் நல்லது. அவைகள் சேலத்தில் கிடைக்காவிட்டால், கோயம்புத்தூரில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தைச் சார்ந்த தகவல் தொடர்பு நிலைய விற்பனை பிரிவில் இருந்து பெற்றுக் கொள்ளலாம். 'திபா' என்பது அமெரிக்காவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. நமது நாட்டில் அது விற்பனைக்கு இன்னும் வந்ததாகத் தெரியவில்லை. இதற்குப் பதிலாக 'பேக்டீரியல் கல்ச்சர்' பயன்படுத்துவதன் மூலமாகவே அதிக மகசூல் பெற முடியும்.

# சிறுதொழில் சிறக்க...

தமிழ்நாடு அரசால் நிறுவப்பட்ட நிருவாகச் சீர்திருத்தக் குழு, தமிழகத்தில் புதிய சிறு தொழில்களைத் தொடங்குவதற்குத் தடையாக உள்ள சில சிக்கல்கள் குறித்து ஆராய்ந்து, தமிழக முதல்வர் கலைஞர் அவர்களிடமும், தமிழ்நாடு தொழில்-சட்ட அமைச்சர் திரு மாதவன் அவர்களிடமும் ஓர் அறிக்கையினை அளித்துள்ளது.

பொதுவாக, முதலீட்டுக்குத் தக்கபடி, முழு அளவு வேலை வாய்ப்புகளை உருவாக்கிப் பொருளாதார வளர்ச்சிக்குப் பெரிதும் உதவுவன சிறுதொழில்கள். எனவே, பொருளாதாரச் செழுமைக்கு உயிரூட்டமளிக்கும் சிறு தொழில்களின் வளர்ச்சிக்குத் தமிழ்நாடு அரசு முதன்மையளித்து, அண்மைக் காலத்தில் சிறு தொழில் வளர்ச்சியைப் பெரிதும் விரிவுபடுத்தியுள்ளது.

தொழில் வளர்ச்சிக்குச் சில தடைக்கற்கள் உள்ளன என்பதும், அவை நீக்கப்பட்டால் சிறு தொழில்கள் விரைந்தும், சிறந்தும் வளரும் என்பதும் சிறு தொழில் வளர்ச்சி பற்றி இக்குழு நிகழ்த்திய ஆய்வின் விளைவாகத் தெளிவாகியுள்ளது. சிறு தொழில்களுக்குப் பாதுகாப்பும் சுகாதாரச் சூழலும் ஏற்படுத்திக் கொடுப்பதோடு, தொடர்புடைய அரசுத் துறைகள், தொழில்கள் தொடங்குபவர்களுக்கு விரைந்து ஊக்கமும் ஒத்துழைப்பும் நல்கிடவேண்டும். புதிதாகச் சிறுதொழில் தொடங்கிடுவோர் சந்தித்துத் தீர வேண்டிய சில் தடைகள் உள்ளன என்றும் இக்குழு கருதுகிறது.

1. தொழில் துறை, தொழிற்சாலைகள், நகரமைப்புத்துறை, நலத்துறை, உள்ளாட்சித் துறை ஆகிய துறைகளுடன் தொடர்பு கொள்ள வேண்டிய நிலை-அதனால் ஏற்படும் கால தாமதம்.

2. அலுவலர்கள் பெரும்பாலும், பழைய பத்தாம்பசலிக் கொள்கைகளையும், நடைமுறைகளையுமே பின்பற்றுகின்றனர். தற்கால வளர்ச்சிக்கு ஏற்றபடி நடைமுறைகளில் முற்போக்கு இல்லை.

3. அனுமதி வழங்கும் அதிகாரம், சிறுதொழில் தொடங்கும் சூழ்நிலையையும் பிறவற்றையும் நேரடியாகத் தெரிந்துகொள்ளும் கீழ்மட்ட அலுவலர்களிடம் இல்லாமல், உயர் மட்டத்தில் இருப்பதால் கால விரயம் ஏற்படுகிறது.

4. ஒருங்கிணைப்பின்றி இந்தத் துறைகள் தனியாகவே செயல்படுகின்றன.

இப்படிப் பல்வேறு துறைகளையும் அணுகி, அனுமதிக்குக் காத்துக் கிடக்கும் நிலை நீங்க வேண்டும். தொழில் தொடங்குவதற்கான அனுமதிக்குரிய விண்ணப்பங்களைத் தொழில் துறை உதவி இயக்குநரிடம் வழங்குவதே போதும் என்ற நிலையோடு, அந்த அனுமதியை விரைவில் பெறுவதற்கும், உதவி இயக்குநரே பிறஅலுவலர்களுடன் தொடர்பு கொண்டு விரைவாக எல்லாம் நடைபெற உதவிடும் நிலை இருக்க வேண்டும்.

தொழிலுக்காக வரும் விண்ணப்பங்களை ஆய்ந்து தக்க முடிவுகளை விரைந்து எடுக்கும் வகையில், தொழில், நலத்துறை, தொழிற்சாலை, உள்ளாட்சி ஆகிய துறைகளின் மாவட்ட அலுவலர்களுக்கு எத்தகைய

சிறுதொழில் பற்றிய நிருவாகச் சீர்திருத்தக் குழுவின் அறிக்கையை முதல்வர் கலைஞரிடம் குழு. உறுப்பினர் திரு. ஏ. ஆர். சுப்பையா எம்.எல்.ஏ. அவர்கள் அளிக்கிறார்கள்.



அதிகாரங்கள் எல்லாம் வழங்கப்பட வேண்டும் என்பதையும் குழு தெரிவித்துள்ளது.

அனுமதி வழங்குவதை விரைவுபடுத்துவதற்கு, மாவட்ட ஆட்சித் தலைவரைத் தலைவராகவும், தொழில் உதவி இயக்குநரை உறுப்புச் செயலாளராகவும், ( Member secretary ) சம்பந்தப்பட்ட மாவட்ட அதிகாரிகளை உறுப்பினர்களாகவும் கொண்ட ஓர் இணைப்புக் குழு அமைக்கப்பட வேண்டும் என்றும் குழு கருத்துத் தெரிவித்துள்ளது. தொழில்கள் வளர்ச்சி பற்றி ஒவ்வொரு காலக் கட்டத்திலும் தொழில் வணிகத் துறை இயக்குநர் மதிப்பீடு செய்ய வேண்டும்.

காலந் தாழ்த்தாமல் அனுமதி வழங்கும் வகையில் நகராட்சிச் சட்டங்களில் திருத்தம் செய்யப்பட வேண்டும். தடையாக இருக்கும் பழைய சட்டங்களைப் பட்டியல் போட்டுக் காட்டி அச்சட்டங்கள் திருத்தப்பட வேண்டும் என்றும் குழு கோரியுள்ளது. சில காரியங்களை இரண்டு துறைகள் தலையிட்டுத் தடைவிதிக்கும் நிலைமையை மாற்றுவதற்காக, அத்தகைய இரட்டைத் தலையீட்டினை நீக்கி, ஒரே துறையினரே அதைச் செய்து முடிக்கும் வகையில் திருத்தங்கள் தேவை என்பதையும் வலியுறுத்தியுள்ளார். இரட்டைத் தலையீட்டால் தடைப்படும் செயல்கள் எவை என்பதையும் குழு குறிப்பிட்டுள்ளது.

இந்த மாற்றங்கள் யாவும் செய்யப்படுமானால், சிறுதொழில் வளர்ச்சி தடையின்றி விரைந்து வளர்வதற்கு, தக்க சூழ்நிலை அமைத்து, அரசுத் துறைகள் தொழில்களைத் தடைப்படுத்தும் நிலைமாறி உரிமையுடன் தொழில்கள் ஓங்கி வளரும் நல்ல சூழ்நிலை அமையும் என்று நிருவாகச் சீர்திருத்தக் குழு கருதுகிறது.

—சாமி பழ

## காஃபியின் பெருமை!

* காஃபி ஏற்றுமதி மூலம் கடந்த ஆண்டில் மட்டும் நாட்டுக்கு 25 கோடி ரூபாய் வருமானம் கிடைத்துள்ளது.
* 1947-48-ல் நமது நாட்டில் காஃபி உற்பத்தி 16,054 டன் ஆக இருந்தது.
* 1971-72-ல் இது 1,10,300 டன்னாக அதிகரித்துள்ளது.
* 1947-48-ல் காஃபி ஏற்றுமதி 2,275 டன்னாக இருந்தது. இப்போது, ஆண்டுக்குச் சராசரி 35,000 டன்னாக அதிகரித்துள்ளது.
* இந்தியாவில் இப்போது ஆண்டுக்கு 40,000 டன் காஃபி உபயோகிக்கப்படுகிறது.
* இந்தியாவில் மொத்தம் 1,36,453 எக்டர் நிலப்பரப்பில் காஃபி பயிரிடப்படுகிறது.
* நாட்டில் மொத்தம் 50,581 காஃபித் தோட்டங்கள் உள்ளன.
* இந்தியாவில் பெரும்பாலும் தென்னக மாவட்டங்களிலேயே காஃபி உற்பத்தி செய்யப்படுகிறது. காஃபி விளைவதற்கேற்ற தட்ப வெப்பநிலை இங்கே தான் காணப்படுகிறது.

## சேமிக்கப் பழகுங்கள்!

''அறுவடை செய்யும் காலம் முதல் சேமித்து வைக்கும் காலம் வரையான இடைக்காலத்தில், 9·33 சத உணவு தானியங்கள் சேதம் அடைகின்றன'' என்று இந்திய அரசாங்கத்தின் உணவு - வேளாண்மை அமைச்சகத்தால் அமைக்கப்பட்ட நிபுணர் குழு தெரிவித்துள்ளது. 1964-65-ஆம் ஆண்டில் உற்பத்தியான 873 இலட்சம் டன் உணவு தானியங்களில், 73 இலட்சம் டன் உணவு தானியங்கள் மேற்கூறிய வகையில் சேதம் அடைந்ததாக அக்குழு அறிவித்துள்ளது. ஆகவே, அறுவடை செய்யும் காலம் முதல் சேமித்து வைக்கும் காலம் வரையான இடைக் காலத்தில், மொத்த உற்பத்தியில் ஏறத்தாழ பத்தில் ஒரு பங்கு பாழாகிறது.

மொத்தம் உற்பத்தியாகும் நெல்லில் மட்டுமே இவ்வகையில் 38 இலட்சம் டன்கள் சேதமாகின்றன.

வீட்டு எலிகள் மட்டுமே 19 இலட்சம் டன்னுக்கும் அதிகமான உணவு தானியங்களைத் தின்றுவிடுகின்றன.

சேமிப்பில் மட்டுமே 46 இலட்சம் டன் சேதம் ஏற்படுகிறது. இதில் 20 இலட்சம் டன் தானியங்களைப் பூச்சிகள் தின்றுவிடுகின்றன.

அறுவடைக்குப் பிறகு களத்து மேட்டில் மட்டுமே 13 இலட்சம் டன் சேதமாகிறது.

எனவே, உற்பத்தி செய்வதற்குக் காட்டும் ஆர்வத்தைச் சேமிப்பதிலும் காட்டுதல் சிறந்தது.




# அழகுமிகு ஆசிய வணிகப் பொருட்காட்சி

ஆர். நாகராசன்
இயக்குநர்
செய்தி-மக்கள் தொடர்புத் துறை
தமிழ்நாடு அரசு



தமிழக அரங்கத்திற்கு வருகை புரிந்த தலைமை அமைச்சர் திருமதி இந்திராகாந்தி அவர்களுக்கு, அரங்கத்தின் சிறப்பினை விளக்கிச் சொல்கிறார் தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு. ஆர். நாகராசன் அவர்கள்





நவம்பர் 3-ம் தேதி

47 நாடுகள் நம்மோடு கூட்டுச் சேர்ந்து நடத்தும் அகில உலக ஆசிய வணிகப் பொருட்காட்சிவிழாவை இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி அவர்கள் துவக்கி வைத்தார்கள். எழிலும், பொலிவும் பெற்ற இந்த விழாவில் தமிழகத்து ரோஜா மாலை பாரதப் பிரதமரை வரவேற்றது. நமது தேசியக்கொடியை ஏற்றிய பின்பு உலக நாடுகளின் நிறுவனத்தின் கொடி ஏற்றப்பட்டு, அதைத் தொடர்ந்து இந்த வணிகப் பொருட்காட்சியில் பங்கேற்கும் 47 நாடுகளின் கொடிகளும் ஏற்றப்பட்டு, இந்திய தேசிய கீதத்தோடு—வானத்தில் வெண் புருக்களும், வண்ண வண்ண பலூன்களும் பறக்கவிடப்பட்டு, விழா தொடங்கியது.

வளர்ச்சியுற்றுவரும் நாடுகளுக்கிடையே வாணிபத்துறையில் புதிய வாய்ப்புக்களை ஏற்படுத்தவும், இந்நாடுகளுக்கிடையே உள்ள மூலப் பொருட்களையும், தொழில் நுட்பத்தையும் பயன்படுத்தி, புதிய பொருளாதாரக் கூட்டுறவோடு ஒட்டிய தொழில் வணிக வளர்ச்சி பெருகிடவும், தேசிய வருமானம் அதிகரிக்கவும், இந்த வணிகப் பொருட்காட்சி பயன்படும் என்ற நோக்கத்திலே 'ஆசியா 72' ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.









இந்த விழாவினைத் தொடக்கி வைத்த இந்தியப் பிரதமர், பழைய சாம்ராஜ்யங்கள் மறைந்த போதிலும் இன்னும் ஆசிய நாடுகள் பலம் பொருந்திய நாடுகளின் விளையாட்டு மைதானமாகவே இருந்து வருகின்றது என்றும், கண்டங்களில் எல்லாம் மிகப் பெரிய இந்த ஆசியாக் கண்டம், உலக மக்கள் தொகையில் பாதிக்குமேல் உள்ள நாடுகளைக் கொண்ட இவை மிகத் தொன்மையான கலாச்சாரத்தையும், நாகரிகத்தையும் உலகுக்குத் தந்தவைகள். சமயங்கள் எல்லாம் தோன்றியதும் இந்த நாடுகளில் தான். இருந்தபோதிலும் பல சித்தாந்தங்கள் அவர்களுடைய ரத்தத்திலே பரிசோதிக்கப்பட்டு, இன்னும் சுரண்டல்களிலிருந்து அவர்கள் மீட்கப்படவில்லை" என்று தெளிவாகவும், எளிமையாகவும் கூறினார்கள்.

இந்த வணிகக் கண்காட்சியின் நோக்கமாவது; இதில் பங்கேற்கும் நாடுகளை ஒருங்கிணைந்து ஒவ்வொரு நாட்டிலும் ஏற்பட்டுள்ள பொருளாதார முன்னேற்றத்தையும், தொழில் துறையிலும், தொழில் நுட்பத்துறையிலும், அத்தோடு இணைந்து செயல்படுகின்ற விஞ்ஞான வளர்ச்சியையும், ஏற்பட்டுள்ள மாறுதல்களையும் பகிர்ந்து பயன்படச் செய்ய வேண்டும் என்பதுதான்.






பம் என்பதே பிறருடைய
காகவும், நம்முடைய
காகவும் என்பதுதான்.
ணிகப் பொருட்காட்சியில்
தும் நாடுகள் இயற்கையி
சிறந்த சாதனங்களேயும்,
ழில்களுக்கு அடிப்படை
மூலப் பொருட்களேயும்
ருப்பதோடு, உற்பத்
ன்றியமையாதது என்று
க்கூடிய மக்கள் சக்தியை
கப் பெற்றுள்ள நாடுகள்.
டுகளுக்கு இடையேயுள்ள
ம், வளமும் வளர்ச்சியும்
தால், அதனுல் ஏற்படு
பயன் இந்த நாடுகளுக்
பொருளாதார நிலேயை
வதோடு மக்களுடைய
கத் தரத்தையும், தேசிய
த்தையும் வலிவு பெறச்
என்பது மிகத் தெளி
ண்மை.

வணிகப் பொருட்காட்சி
பெற்று நடக்கின்ற இவ்
இந்தியச் சுதந்திரத்தின்
விழா ஆண்டாகும்.
ாய்ப்பைப் பயன்படுத்திக்
டு இந்தியாவில் உள்ள
மாநிலங்களும், தனி
றைத் தொழில் வளர்ச்சி
ங்களும் இந்த 25 வருட
ற்றத்தை, பொருளாதார
யை, தொழில் வளர்ச்
தொழில் நுட்ப அபிவிருத்
ஏனைய நாடுகளுக்கும்
அதனுல் பயன்பெறும்
ல் பங்கேற்று இருப்பது
சிறப்பானதாகும்.

லி மாநகரத்தில் மதுரா
தியின் இடப்புறம் 140
நிலப்பரப்பில் அமைந்
ந்த மிகப்பெரிய வணிகப்
காட்சி, வெளிநாடு
ய பொருட்காட்சி மண்ட
ஒருபுறமும், அதையொட்
நீல நிற செயற்கை ஏரி
த ஏரிக் கரையிலே கலே
நடத்துவதற்கு என்
றந்த வெளி அரங்கும்,
ங்குளிர்க் காலமாதலால்
க்கப்பட்ட திரை அரங்
அதையொட்டி அமைந்
ஆடை அலங்கார நிறு
, நாடுகளின் கூட்டு மண்
பங்கேற்கும் நாடுகளின்

கூட்டுத் தொழில் மண்டபமும் அமைந்த பாரதப்பிரதமரின் நேரு மண்டபமும் கண்கொள்ளாக் காட்சிகள்.

இதோ! வணிகப் பொருட்காட்சியின் முதல் நுழைவு வாயில். அங்கே நாம் செல்வதாகச் சற்றுக் கற்பனே செய்து கொள்வோம். உயரமாக ஒளியிட்டு அழைப்பது தமிழகத்தின் ஏற்றமிகு எழில் மண்டபம். 60 அடி உயரத்தில் தமிழ்நாடு என்று ஆங்கிலத்திலும், தமிழிலும் எழுதப்பட்ட மின்சாரப் பெயர் தாங்கி நிற்கின்ற காட்சி வெகு தொலேவில் இருப்பவர்களுக்கும் எடுப்பாகத் தெரிகின்றது. பொருட்காட்சி மண்டபத்தின் நுழைவு வாயிலில் முதலாவது வரவேற்பது, இராஜஸ்தான் மாநிலத்தின் சித்திரச் சிறப்புகளோடு கூடிய மண்டபம். அதைத் தொடர்ந்து ஆந்திரம், பஞ்சாப், வங்கம், கேரளம், உத்திரப் பிரதேசம், மராட்டியம், ஒரிஸ்ஸா, குஜராத், பீகார் ஆகிய மண்டபங்களேத் தாண்டி, கோவா மண்டபத்தையும் கடந்து, வலது புறம் திரும்பினுல் எதிர்கொண்டு அழைப்பது மைசூரும், தமிழகமும்தான். தமிழகத்தைச் சுற்றி அமைக்கப்பட்டுள்ள மாநிலங்களின் பொருட்காட்சிகள் மைசூரும், மத்தியப் பிரதேசமும், அரியாருவம், இமாசலப் பிரதேசமும், டில்லி நிர்வாகமும் ஆகும். நாடுகள் ஒருபுறமும், நம் நாட்டில் உள்ள மாநிலங்கள் மற்ருெரு புறமும், நாட்டுக்குப் பொதுவான வணிகப் பொருட்களுக்கான மண்டபங்கள் வேருெரு புறமும், இப்படி வாணிபத் துறையில் போட்டியிட்டுக் கொண்டு பொருட்களேத் தன்னகத்தே தாங்கி நிற்கும் காட்சியினேக் காண ஒரு மனிதனுக்கு மூன்று நாட்கள் தேவை. சீரும், சிறப்போடு, சிந்தனேயைச் செலவழித்துக் காண வேண்டுமானுல் ஐந்து நாட்கள் தேவை. வியாபார நோக்கத்தோடு இவற்றையெல்லாம் சுற்றி வர வேண்டும் என்ருல் குறைந்தது 10 நாட்கள் தேவை. இல்லே விளேயாட்டாகவே பார்த்துவிட்டு வரலாம் என்ருல் ஒரு நாள் போதும்.

தமிழ்நாட்டுப் பொருட்காட்சி மண்டபத்திற்குள் நுழைகிருேம். மண்டபத்தின் இருபுறமும் உயிர் யானேக் குட்டிகள்போல் தோற்றமளிக்கும் கல் யானேகள். படிகளில் ஏறியவுடன் பளிச்சென்று பார்வைக்குப்படுவது தில்லே நடராஜனின் நர்த்தனம். நுழைபவர்கள் யாவரும் ஒரு நிமிடம் நின்று சிந்தித்து ரசித்த பின்புதான் அடுத்த அடியை எடுத்து வைக்க முடியும்—அத்தகைய கம்பீரமுடன்

மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் பேராசிரியர் அன்பழகன் அவர்கள் தமிழக அரங்கைப் பார்வையிடுகிருர்.







தமிழகத்தின் கலையையும், பண்பாட்டையும் உள் அடக்கியது அந்த அற்புதச் சிலை. இடது பக்கம் உள்ள நுழைவு வாயில் எண்ணூரிலே இருக்கும் 'அசோக் லயலண்ட்ஸின்', மறு பதிப்பு.

அங்கே உற்பத்தியாகின்ற ஊர்திகளும், அவை ஓட்டிய சாதனங்களும் அடுக்கடுக்காக வைக்கப்பட்டுள்ளன. அதை அடுத்து மோட்டார் சைக்கிள் தொழில் சாதனங்கள், அதைக் கடந்து சென்ருல் சுழல்கிறது ஒரு எழில் மிகுந்த மோட்டார் கார். இது சென்னைக்கடுத்த வண்டலூர் தொழிற்சாலையில் உற்பத்தியாகும் சிறிய கார். இதையடுத்து அதே தொழிற்சாலையில் உற்பத்தியாகின்ற ஸ்டான்டர்ட் வேன். பின்பு அம்பத்தூரில் உற்பத்தியாகும் உறுதி மிக்க சைக்கிள்கள். விருத்தாசலத்தில் உற்பத்தியாகும் வெண் மண்பாண்டங்கள் (ceramics). அடுத்து இயங்கிக் கொண்டிருக்கும் "டெக்ஸ்டூல்ஸ்" இப்படித் தனி நிறுவனங்களின் சாதனைகளைக் கண்டபின்பு, ஏறு நடைபோட்டு வட்ட வடிவமான முதல் மாடிக்குச் சென்ருல் எதிர் கொண்டழைப்பது "திருவாரூர்த் தேர்". மென்மையாகவும் ஒலிக்கின்ற இனிமையாகவும் நாதசுர இசைக்கிடையே மண்டபத்தின் இருபுறமும் ஏழு அடி உயரக் குத்து விளக்குகள் எதிர் கொண்டழைக்க, உள்ளே நுழைந்தவுடன் ஒரே வியப்பு. காரணம் அங்கே வைக்கப்பட்டுள்ள பொருட்களின் நேர்த்தியும், அழகும் தமிழகத்தின் கலாச் சாரமே உருண்டோடி வந்து, பரந்து சிதறிக் கிடப்பது போல் எங்குப் பார்த்தாலும் எழில் மிக்க ஓவியங்களும், சிற்பங்களும் வண்ணக் கைத்தறி ஆடையும், காஞ்சிபுரம் பட்டும், இன்னும் தமிழகத்திலே தயாராகும் எண்ணற்ற கைவினைப் பொருட்களும் கலந்து வைக்கப்பட்டுள்ள காட்சி. பல பல வண்ண மலர்களைத் தூவியது போன்ற ஒரு காட்சி. இதைப் பார்ப்பவர்களுக்கெல்லாம் அவைகளைத் தொட்டுப் பார்க்க வேண்டும் என்ற உணர்ச்சி. கண்ட காட்சியையே திரும்பித் திரும்பிக் காண வேண்டும் என்ற

நோக்கத்தில் மேலும் தொடர்ந்து நடக்க முடியாத காட்சி. சிறிது தூரம் தாண்டிச் சென்ருல் எங்கே நாம் மதுரை மாநகர் வந்து விட்டோமோ என்ற உணர்ச்சி. காரணம் மதுரை மீனுட்சி அம்மனின் கோயில் மண்டபச் சிற்பங்களை எல்லாம் ஒருங்கிணைத்து 16 அடி அகலமும், 5 அடி உயரமும் உள்ள சித்திரமாக எழுதிய ஓவியர் (சில்பி)யின் கைவண்ணம். சுற்றுலாத் துறையினர் தொகுத்தளித்துள்ள ஓவியங்களையும், பெரிய புகைப்படங்களையும், பின்னணியாகக் கொண்டு மறுபடியும் நாம் ஏற்றுமதி செய்யும் பொருட்களைக் காண முடிகிறது. தோல்களால் செய்யப்பட்ட பொருட்களும், கிண்டி தொழிற்கூடத்தில் தயாராகும் யந்திரச் சாமான்களும், வேளாண்மைத் துறையினரால் வைக்கப்பட்டுள்ள முந்திரியும், ஏலக்காயும், கிராம்பும், சந்தனமும், தேக்கும், அதை அடுத்து, நெடுங்கடல் கொண்ட தமிழகத்தின் மீன் வளத்தை விளக்குகின்ற மின்சார விசைப்படகுகளும், இடையிடையே தமிழகச் சமுதாயத்திற்குத் தமிழ்நாடு அரசு ஆற்றுகின்ற சமுதாயப்பணிகளை விளக்கும் விளக்கப்படங்களும், புகைப்படங்களும், கடந்த 25 ஆண்டுக்காலத்தில் தமிழகத்தில் ஏற்பட்டுள்ள பொருளாதாரத் தொழில் வளர்ச்சியை அப்படியே கண் முன் கொண்டு வந்து காட்டுகின்ற காட்சிகளாகும்.

'ஆசியா 72', ஓர் அற்புதமான வாய்ப்பு: இந்த நாட்டிலே முதன் முதலாகப் பெரும் அளவில் நடத்தப்படுகின்ற முதல் முயற்சி. இதனுல் ஏற்படுகின்ற வெற்றிகளும், பயன்களும் நம் நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் மிகப் பெரிய வளர்ச்சிமாற்றம் ஏற்படுத்தும் என்பதைக் கண்டவர்க்கும், கேட்டவர்க்கும் வியப்பேதுமில்லை.













# ரூபாய் 10 கோடி வருவாய்!

ஆசியா-72
ல்லியில் நடைபெறும் தமிழ்நாடு அரங்கு
ருட்காட்சியில் பெற்றதன் மூலம் ரூ. 10 கோடி
த வாய் வருமென எதிர்பார்க்கப்படு
து.

ங்குள்ள தமிழ்நாடு கைத்தறி அரங்
தில் மட்டும் தினம் 5 ஆயிரம் ரூபாய்க்கு
ற்பனை ஆகிறது. பரத நாட்டிய நட
த்தின்போது அணிந்து கொள்ளும்
ரித்தன்மை வாய்ந்த பட்டுச் சேலைகளைக்
கத்தறி நிறுவனத்தார் தயார் செய்து
ஊர்வசி", "மாதவி" என்கிற பெயர்
ளில் விற்பனைக்குக் கொணர்ந்துள்ள
ார். இவைகளுக்கு டில்லியிலேயே
ிகுந்த தேவை ஏற்பட்டது. அத்துடன்
ந்து கோடி ரூபாய் மதிப்புள்ள கைத்
தறித் துணிகளை வாங்குவதற்கு வெளி
நாடுகள் ஒப்பந்தம் செய்துள்ளன.

இதே போன்ற கைவண்ணப் பொருட்கள், டெக்ஸ்டைல் உற்பத்திப் பொருட்கள் போன்றவற்றிற்குப் பல லட்சக் கணக்கில் ஒப்பந்தம் ஆகியுள்ளன. ஆக இவையனைத்தும் சேர்ந்து சுமார் 10 கோடி ரூபாயளவில் அந்நியச் செலாவணி சம்பாதித்துத் தருமென எதிர்பார்க்கப்படுகிறது.

இது வணிகப் பொருட்காட்சியாதலால் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி வாய்ப்புள்ள பொருட்களே (எடுத்துக் காட்டாகக் கைத்தறித் துணிகள், நுட்ப வேலைப்பாடு அமைந்த கைவண்ணப் பொருட்கள், வாழைப்பழம், முந்திரி, தேயிலை, காபி போன்ற பொருட்கள்) காட்சிக்காக வைக்கப்பட்டுள்ளன. இதனை "ஸ்டேட்ஸ் மென்" போன்ற நாளிதழ்கள் பாராட்டியுள்ளன. "தமிழ்நாடு, மராட்டியம் ஆகிய இரு மாநிலங்கள்தான் இந்த வணிகப் பொருட்காட்சியின் தத்துவத்தைப் புரிந்து கொண்டுள்ளன" என்று அந்த ஆங்கில நாளிதழ் குறிப்பிட்டுள்ளது.



# கலைமணம் கமழும் காட்சியரங்கம்

தமிழ்நாட்டின் உற்பத்திப் பொருட்களை எடுத்துக் காட்டுவதோடு, தமிழ்நாட்டின் கலை, கலாச்சாரம், பண்பாடு ஆகியவற்றையும் அனைவரும் கண்டறியும் வண்ணமாகவும் நமது அரங்கம் அமைந்துள்ளது.



கலைகளுக்காக ஆசியா-72-ல் மூன்று கலையரங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஒன்று 'அம்சத்துவனி' என்ற திறந்த வெளிக்காட்சி அரங்கம். மற்றொன்று "சாகுந்தலம்" என்ற நடனக் கலையரங்கம். இந்த அரங்கங்களில் தென்னாட்டுக் கலைகளான பரத நாட்டியம், நாதசுவரம், கர்நாடக இசை ஆகியவை அவ்வப்போது நடத்தப் பெறுகின்றன. மூன்றாவது அரங்கம், கிராமிய அரங்கம். இந்தியாவின் கிராமியச் சூழ்நிலையை இங்கு உருவாக்கியிருக்கின்றனர். கிராமங்களில் உள்ள குடிசைகள்; உழவுக் கருவிகள், உணவுண்ணும் பாத்திரங்கள்; கிராமங்களிலுள்ள அய்யனார் சிலை போன்ற படைப்புகள் ஆகியவை இங்கு இடம்பெற்றுள்ளன. அத்துடன் எல்லா மாநிலங்களின் கிராமிய நடனங்களும் நடத்தப்படுகின்றன.

2—12—72 அன்று, மதுரை சோமு அவர்களின் இன்னிசை நடைபெற்றது. 5—12—72 அன்று, சேக் சின்னமவுலானாவின் நாதசுவர இசையும், 16—12—72 அன்று, மதுரை சேதுராமன்—பொன்னுசாமி சகோதரர்களின் நாதசுவர இசையும் நடைபெற்றன. சரசாலயா குழுவினரின் பரதநாட்டியம் 11—12—72 அன்று இடம் பெற்றது.







# நெடிதுயர்க தாயகமே!

தாயகத்தின் தலைநகராம் தில்லியிலே வளம்பெற்று
நாயகமாய் விளங்கிநின்று நலஞ்சேர்க்கும் ஆசியத்தின்

மூன்றும் பொருட்காட்சி முதல்தரமாய் முகிழ்த்ததனைச்
சான்றோர்கள், பொறியியலார் போற்றிமிகச் சாற்றிடுவார்!

நூற்றிருப தேக்கரிலே நாற்பத்தேழ் நாடுகளும்
ஏற்றமுறு இந்தியாவில் இலங்குகின்ற மாநிலங்கள்

தனியாரின், அரசினரின் தலைநிமிர்ந்த தொழில்துறைகள்
இனிதாக ஓரிடத்தில் இணைந்திருக்கும் இயல்பதனால்

ஒருகுடையின் கீழாக உலகெல்லாம் ஒருங்கிணையப்
பெருமைமிகும் அமைதியினைப் பேணிவரும் தாயகத்தில்

வங்கத்தின் கைதூக்கி மாண்புற்ற இவ்வாண்டில்
சிங்கநிகர் காட்சியிது திரண்டதுவும் நேரன்றோ?

துணிமணிகள் அழகொளிரத் தொகுத்துரைத்தல் நோக்கமென
அணிபெறும்இக் காட்சியிலே ஆடைகளை எழிலாக

உடுத்தொளிரும் உலகத்தின் மாதரெலாம் நோக்கிடலாம்!
தொடுத்துரைக்க ஒண்ணாத தோகையர்தம் பண்பாடு















நாளெல்லாம் கண்டிடலாம், நன்கினிமை நுகர்ந்திடலாம்!
ஆளெல்லாம் தொழில்தோய்ந்தே ஆற்றலுற விரைவாக

ஓடுகிற தொடர்வண்டி, மின்கலத்தால் ஊர்கின்ற
ஆடுகிற பிள்ளைகட்காம் அழகான சிறுவண்டி

கொண்டிலங்கும் ஜப்பானைக் காணக்கண் கொள்ளாது!
எண்டிசையும் தோள்புடைத்த இயல்பேபோல் அகன்றோங்கும்

உருசியத்தின் அரங்கினிலும், ஒளிருகிற கலைமணக்க
வருநாட்டோர் நடித்திலங்கும் 'அம்சத்வனி' மண்டபமும்,

கலைமணத்தில் தொழில்மணமும் கலந்தளிக்கும் மாநிலங்கள்
நிலைபெற்ற கூடங்கள் நிறைந்திருக்கும் திடலினிலே

கலையாலே கண்பறித்த கைவண்ணம் காட்டிவிட்டே
அலையலையாய் வளர்ந்துவரும் அருந்தொழிலும் எடுத்துரைக்கத்

தென்னகத்தின் புகழ்பாடும் கூடத்தைத் துன்னிடிலே
மன்னுகிற குன்றான யானையது மாலையிட

மெய்சிலிர்த்தேன்: உள்ளோங்கும் பண்பாட்டின் வியன்பொருளால்
மெய்யுணர்ந்தேன்! பண்பாடும் தொழிலியலும் மேலோங்க

வேண்டுமெனும் நல்லுணர்வு தூண்டிடவே வெளிவந்தேன்!
நீண்டபெரும் தமிழ்நாடே, நெடிதுயர்க, தாயகமே!

மணவை ப. கீரன்





# பொருட்காட்சிச் செய்திகள்!

தலைமை அமைச்சர் திருமதி இந்திரா
காந்தி அவர்கள் 30—11—72 அன்று
தமிழ்நாடு அரங்கத்தைச் சுற்றிப் பார்வை
யிட்டார். அவருக்கு ரோஜாப்பூ மாலை
அணிவித்து, சந்தனம், கல்கண்டு
வழங்கித் தமிழ் மணம் கமழ வரவேற்பளிக்
கப்பட்டது. தலைமை அமைச்சரை அரங்
கத்தின் பல்வேறு பிரிவுகளுக்கும் அழைத்
துச் சென்றார், செய்தி—மக்கள் தொடர்புத்
துறை இயக்குநர் திரு. நாகராசன்
அவர்கள்.

ஒவ்வொரு அரங்கமாக ஆர்வத்துடன்
பார்வையிட்ட பிரதமரைப் பரவசப்படுத்
தியது செந்நெல்மணிகளால் தயாரிக்கப்
பட்ட தேர். அதனைத் தொட்டுப் பார்த்த
தலைமை அமைச்சர், ,, இதனை நூலினால்
கோத்தா தைத்துள்ளார்கள்?,, என்று
கேட்டார். நெல்மணிகள் ஒட்டப்பட்டுள்
ளன என்று அவருக்குத் தெரிவிக்கப்பட்
டது. அரங்கம் மிகவும் நன்றாக அமைந்
துள்ளதாகத் திருமதி இந்திரா காந்தி
அவர்கள் பாராட்டினார்.

தலைமை அமைச்சருக்குத் தமிழ்நாடு
அரங்கத்தின் சார்பில் காஞ்சிப் பட்டுப்
புடவையினை அன்பளிப்பாக வழங்கினார்
செய்தி—மக்கள் தொடர்பு இயக்குநர்.

3-ஆவது ஆசிய அனைத்து நாட்டு வணி
கப் பொருட்காட்சியான இந்த ஆசியா-72
பொருட்காட்சியில் பங்கு பெற்றுள்ள
தமிழ்நாடு அரங்கம், தமிழ்நாடு அரசால்
நிறுவப்பட்ட குழுவின் மேற்பார்வையின்
கீழ் அமைக்கப்பட்டதாகும். இந்தக் குழு
வின் தலைவர், தமிழ்நாடு அரசின் கல்வித்
துறைச் செயலாளர் திரு திரவியம்
அவர்கள்; உறுப்பினர்கள், செய்தி, மக்கள்
தொடர்புத்துறை இயக்குநரும், தொழில்—
வணிகத்துறை இயக்குநரும் ஆவார்கள்.
தமிழக அரசுத் தலைமைச் செயலாளர்
இதில் மிகுந்த அக்கறை காட்டினார்
என்பதும் அவரது சீரிய மேற்பார்வை,
அரங்கம் சிறப்பாக அமைய வழிகாட்டி
யாக இருந்தது என்பதும் குறிப்பிடத்
தக்கவை.



இதன் நிருவாகப் பொறுப்பு, செய்தி, மக்கள் தொடர்புத் துறை இயக்குநரிடம் இந்த ஆண்டு சனவரித் திங்களில் ஒப் படைக்கப்பட்டது. இந்த அரங்கப் பொது அமைப்பினை 'டிசைன்' செய்தவர் (ஆர்க்கிடெக்ட்) திரு எஸ். முருகேசன். அந்த அமைப்பின்படி அரங்கத்தைத் தமிழகப் பொதுப்பணித் துறையினர் உருவாக்கினர். முழுவதும் இரும்புத் தகடுகள், தூண்களாலான இந்தப் பணி சென்னையில் பொதுப்பணித் துறைத் தொழிற்கூடத்தில் செய்யப்பட்டு டெல்லிக்கு ரெயில் மூலம் எடுத்துச் செல்லப்பட்டது. இந்தப் பணி 1972 ஜூலைத் திங்களில் தொடங்கப்பெற்று அக்டோபர் திங்களில் முடிவுற்றது. அரங்கத்தின் உட்புற அலங்காரத்தைத் திரு விரேந்திரகண்ணா மேற்கொண்டார்.

இப் பொருட்காட்சியிலுள்ள பல்வேறு அரங்கங்களில் தமிழ்நாடு அரங்கத்தில் மட்டும்தான் அரசுத் துறைகளுடன் தனியார் துறைகளுக்கும் சமவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. டி. வி. எஸ். நிறு வனத்தைத் தவிரத் தமிழகத்தினைச் சேர்ந்த பெரிய நிறுவனங்கள் அனைத்தும் இதில் பங்கு பெற்றுள்ளன.

தமிழ்நாடு அரங்கம், தரைப்பகுதியை யும் சேர்த்து இருதட்டுகள் கொண்டது. தரைப் பகுதியில் தனியார் துறைகளுக்கு இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. மாடியில் அரசுத் துறைகள் இடம் பெற்றுள்ளன.









தமிழ்நாடு அரங்கத்தின் நுழைவாயிலை அலங்கரிப்பது 3 அடி உயரமுள்ள இரு கல் யானைகள். அதைத் தாண்டியதும் தேர் தொம்பைகள் இருபுறமும் அழகாகத் தொங்குகின்றன. அதையடுத்து, 6 அடி உயரமுள்ள நடராசர் சிலை.

நமது அரங்கத்தில் தரையில் நெல்லை மாவட்டம் குலசேகரப்பட்டணத்தில் செய்யப்பட்ட சணப்பைக் கம்பளமும், மேல் கூரைக்கு வந்தவாசியில் தயாரிக்கப்பட்ட பாயும் வேயப்பட்டுள்ளது. இந்த அமைப்பே குடிசைத் தொழிலுக்கு முக்கியத்துவம் அளித்துள்ளதைச் சிறப்பாக எடுத்துக் காட்டுகிறது.

கீழ்த்தட்டில் தனியார் துறையினரின் பிரிவுகளில் ஊசி முதல் ராட்சத மண் வாரி வரை தமிழகத்தின் தொழில் முன்னேற்றத்தினைக் காணலாம். ஸ்டாண்டர்டு மோட்டார் துறையினரின் "காசெல்" என்ற காரும், அசோக் லேலண்ட் நிறுவனத்தின் ரூபாய் மூன்றரை லட்சம் மதிப்புள்ள மண்வாரி இயந்திரமும், ஒன்றரை லட்சம் ரூபாய் மதிப்புள்ள சுற்றுலா ஊர்தியும், டி. ஐ. சைக்கிள் நிறுவனத்தின் ஏற்றுமதியாகும் சைக்கிளின் மாதிரியும், ஊட்டியை அடுத்த கெட்டியைச் சேர்ந்த ஊசி உற்பத்தித் தொழிற்கூடத்தின் பல்வேறு வகையான ஊசிகளும் (தையல் ஊசி, மருத்துவ ஊசி முதலியன) இன்னும் பல பொருட்களும் இடம் பெற்றிருக்கின்றன.

லட்சுமி தொழிற்கூடத்தினர் வைத்திருந்த இட்லி மாவு அரைவை இயந்திரத்தை வடநாட்டவரும் வெளிநாட்டவரும் வெகு வியப்புடன் பார்வையிட்டனர். அங்கேயே சுமார் ஆயிரம் இயந்திரங்கள் விற்பனையாகி விட்டன. டி. ஐ. சைக்கிள் நிறுவனத்தினர் ஒரு சலுகையை அறிவித்திருந்தனர். அவர்களது சைக்கிளுக்கு அங்கு 'ஆர்டர்' கொடுத்தால் ஒரு சீட்டுத் தருகிறார்கள். அதனைக் கொடுத்து சைக்கிள் வாங்கினால், சாதாரண விலையைவிட ரூபாய் அறுபது குறைவாகத் தந்தால் போதுமானது.

மாடியிலுள்ள அரசினர் துறைகளில் கண்ணையும் கருத்தையும் ஈர்க்கும் பொருட்கள் ஏராளம். தொழில் துறையினர் வைத்திருந்த ஆறு அடி உயர வெண்கலக் குத்துவிளக்கும், தந்தத்தினால் செய்த சிற்பங்களும், காகிதக் கூழினால் தயாரித்த சிலை உருவங்களும் பாராட்டும் வகையிலிருந்தன. தந்தத்தினால் செய்த சிவன்-பார்வதி சிலையினை செக்கோசுலோவாகிய நாட்டினர் ஒருவர், ரூபாய் 6,000-க்கு விலைக்கு வாங்கினார்.

வனவளத் துறையினர் வைத்திருந்த 5 அடி நீளமுள்ள யானைத் தந்தம் பார்வையாளர்களைக் கவர்ந்தது. டான்சியினர் விரைவில் விற்பனைக்கு அளிக்கயிருக்கும் "மொபத்" ஊர்தியும் கம்பீரமாகக் காட்சி அளித்தது. தோலினால்

ஆன டைகள், இடைவார்கள், கைப் பைகள், பீங்கான் கோப்பைகள், தட்டுக்கள், அலங்காரப் பொம்மைகள், மீன்வளத் துறையினரின் முத்துக்கள், சங்கு வளையல்கள், மாலைகள், மோதிரங்கள் இப்படி மனத்தைக் கவர்ந்த பொருட்களைப் பற்றி சொல்லிக் கொண்டே போகலாம்.

உற்பத்திப் பொருட்களுடன் தமிழக அரசின் சீர்மிகு திட்டங்கள் பற்றிய விளக்கங்களும் நமது படங்களும், முக்கிய அரங்கில் இடம் பெற்றிருந்தன. மாண்புமிகு முதல்வர் கலைஞர் வகுத்த திட்டங்களான பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதித் திட்டம், கண் சிகிச்சை முகாம் நிதித்திட்டம், இளைஞர் அணித் திட்டம் ஆகியவை. தமிழ் நாட்டிலுள்ள சுற்றுலாப் பகுதிகளைக் காட்டும் படங்களும் இங்கு இடம் பெற்றிருந்தன.

ஆசியா-72, பொருட்காட்சியினைச் சமீபத்தில் சுற்றிப் பார்த்துவிட்டுச் சென்னைக்கு வந்த ஜெர்மன் நாட்டுப் பொறியாளர் திரு. ரோத்தர் தமிழ்நாடு அரங்கத்தை மிகவும் பாராட்டினார். வெளி நாட்டு அரங்கங்களுக்கு ஈடாக மிகவும் சிறப்பான முறையில் தமிழ்நாடு அரங்கம் உள்ளதென அவர் பூரிப்புடன் தெரிவித்தார். மிகவும் முன்யோசனையுடன் தமிழ் நாட்டு அரங்கினைத் தரை மட்டத்திலிருந்து சுமார் $2\frac{1}{2}$ அடி உயரத்தில் கட்டியதைப் பற்றிப் பெரிதும் வியப்புத் தெரிவித்தார்

தமிழ் நாட்டின் கலையினையும், கலாச் சாரத்தையும் தொழில் வண்ணத்தையும் கலந்து, கண்டோர் களிக்கும் வண்ணம் அளிக்கும் தமிழ்நாடு அரங்கத்தினை நாள் தோறும் ஆயிரக்கணக்கான மக்கள் கண்டு பாராட்டியுள்ளனர். இந்திய மக்களை மட்டுமின்றி, வெளிநாட்டவரின் கண்ணையும் கருத்தையும் கவர்ந்த அரங்கம் தமிழ்நாடு அரங்கம் என்றால் மிகையாகாது!



தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் திரு பி. சபாநாயகம் ஐ.ஏ.எஸ். அவர்களும், கல்வித்துறைச் செயலாளர் திரு க. திரவியம் அவர்களும் தமிழக அரங்கைப் பார்வையிடுகின்றனர்.

## சியா 72. அஞ்சல் தலை

மூன்றாவது ஆசிய அனைத்து நாட்டுப் பொருட்காட்சி, நவம்பர் 3-ஆம் நாளன்று புதுதில்லியில் துவங்கியதையொட்டி இந்திய அஞ்சல் துறை இரண்டு சிறப்பு அஞ்சல் தலைகளை வெளியிட்டுள்ளது. இந்த அஞ்சல் தலைகள் முறையே 20 காசுக்கும், ரூபாய் 1·45க்கும் விற்கப்பட்டன. இரண்டு அஞ்சல் தலைகளும் ஆரஞ்சு, கருப்பு வண்ணங்களில் அச்சிடப்பட்டுள்ளன. 20 காசு விலை கொண்ட அஞ்சல் தலையில் ஆசிய அனைத்து நாட்டு வணிகப் பொருட்காட்சியின் சின்னம் காணப்படும். ரூபாய் 1·45 விலை கொண்ட அஞ்சல் தலையில், புத்தர் சிலையின் கை ஒன்று [illegible] பெற்றுள்ளது.

asia72



# வண்ணத்தில் ஓர் உலகம்

ஆசியா-72 பொருட் காட்சியில் இடம் பெற்றுள்ள துணி அரங்கில் நவம்பர் 3-ஆம் நாளன்று பிரமிப் பூட்டும் ஆடை அணிவகுப்பு நடை பெற்றது. முந்நூறுபேர் அமர்ந்து பார்க்கக்கூடிய இந்த அரங்கினில் கட்டழகிகள் 16 பேர் நாள்தோறும் இரண்டு முறை மேடையில் தோன்றி ஆடை அணிவகுப்பு நடத்தி வருகிறார்கள். இந்தக் கண் கவரும் அணிவகுப்பு, பொருட் காட்சியில் தொடர்ந்து நடை பெறும். நாடு காணாத புதுமை இது.

நாற்பது நிமிடங்கள் நடைபெறும் அணிவகுப்பில் இந்தியாவில் தயாரிக்கப்படும் கைத்தறி, பருத்தி, பட்டு, கம்பளம், செயற்கை இழை ஆடைகளை அணிந்து அழகு நங்கையர் பவனி வரும் காட்சி கண்ணுக்கு இனியது. வெவ்வேறு வயது வரம்பையும், பொருளாதாரப் பிரிவுகளையும் சேர்ந்த மக்களுக்கேற்ற ஆடை வகைகளை இவர்கள் உடுத்துக் காட்டுகின்றனர்.

இந்த ஆடை அணிவகுப்பு நீரின் மீது மிதந்தவாறு நடக்கிறது என்றே கூறலாம். ஏனெனில், அணிவகுப்பு மேடை ஓர் அழகிய குளத்தின் மீது அமைக்கப்பட்டிருக்கிறது. மேடையின் பக்கவாட்டில் பொருத்தப்பட்டிருக்கும் கண்ணாடிகள் அணிவகுக்கும் அணங்குகளின் அழகை எல்லாக் கோணங்களிலும் படம் பிடித்துக் காட்டும். பல வண்ண விளக்குகள் மேடையை நோக்கி ஒளி வெள்ளத்தை வாரியிறைப்பதால்! இந்தக் காணற்கரிய காட்சியைக் காண்பவர்கள் மனத்தில் ஒலி-ஒளிக் காட்சியைக் காண்பது போன்ற உணர்வு ஏற்படுகிறது.

ஆடை அணிவகுப்புதான் துணி அரங்கின் ஒரே பகுதி என்று கருதி விட வேண்டாம். அறுபதாயிரம் சதுர அடி நிலப் பரப்பில் அமைந்துள்ள துணி அரங்கில் ஆறு முக்கிய துணி எற்றுமதி வளர்ச்சி நிறுவனங்களும் இந்திய அரசின் துணி வளர்ச்சி நிறுவனங்களும் தத்தம் அரங்குகளை அமைத்திருக்கின்றன.

அழகிய பல வண்ணத் துணிகளை வடிவமைத்து நெய்வது இந்தியப் பண்பாட்டின் தொன்று தொட்ட வழக்காக இருந்து வருகிறது. சிந்துச் சமவெளி நாகரிகத்தின் காலந் தொட்டு இன்றைய டெரிலின் யுகம் வரையில், காலத்தால் அழியாத நமது செல்வப் பண்பாடு இது.





சென்னையிலிருந்தும், ஆந்திரப் பிரதேசத்திலிருந்தும் வந்துள்ள பருத்தி ஆடைகள், அரங்கில் தனியானதோர் இடத்தைப் பிடித்துக் கொண்டிருக்கின்றன. வெப்ப மண்டல நாடுகளில் உள்ளவர்கள் கோடைகாலத்திலும், ஐரோப்பியர்கள் வசந்த காலத்திலும் அணிந்து கொள்வதற்கு ஏற்றவை இந்த ஆடைகள். இந்த ஆடைகளை அலங்கரித்து வைத்த ஒருவர் கூறுகிறார்: ''ஏகப்பட்ட துணி வகைகளை இங்குக் காட்சியாக வைத்து வெளிநாட்டுப் பார்வையாளர்களைத் திணறடிக்க விரும்புகிறோம்; இந்தத் துணியை வாங்குவதா அல்லது அதை வாங்குவதா என்று அவர்கள் திக்குமுக்காடிப் போய்விட வேண்டும்''.

மனிதனுக்கு உடையாகத் தைப்பதைத் தவிர வேறு பல செயல்களுக்கும் துணிகள் உபயோகமாகின்றன என்பதை இந்த அரங்கு எடுத்துரைக்கிறது. வீடுகளை அலங்கரிப்பதற்கு உதவும் திரைகள், தரை விரிப்புகள், படுக்கை விரிப்புகள் போன்ற பற்பல துணி வகைகளும் துணி அரங்கில் காணப்படுகின்றன.

துணி அரங்கின் மற்றொரு பிரிவில் இந்தியத் துணிகளின் வரலாறு கவினுற எடுத்துக் கூறப்படுகிறது. இந்தியாவில் முதன் முதலில் துணி ஆலை ஏற்பட்டது பற்றியும், துணி ஆலைத் தொழிலில் துணிந்து ஈடுபட்ட தொழிலதிபர்கள் பற்றியும் கதர்த் தத்துவம் பற்றியும், நவீன சேர்க்கை இழைத் துணிகள் பற்றியும், இப்பகுதியில் படங்களின் [illegible]ம் தெளிவாக விளக்கப்பட்டிருக்கிறது.








துணிகளைக் காட்சிப் பொருட்களாக வைத்திருக்கும் அரங்கில் வண்ணத்துக்கும், இந்தியக் கைவினை நுணுக்கத்துக்கும் முதலிடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அரங்கத்தின் முதற் பிரிவில் கண்ணாடி உத்தரம் பொருத்தப்பட்டுத் துணிகளுக்குப் பன்மடங்கு அலங்காரம் ஏற்பட வகை செய்யப்பட்டிருக்கிறது. அரங்கத்தின் உட்பகுதியில் உள்ள சிறிய தடாகத்தில் துள்ளி விளையாடும் பல வண்ண மீன்கள், இந்தியர்களுக்கு ''வண்ண ஆசையை'' ஏற்படுத்தியது இயற்கையே என்ற உண்மையை அரங்கத்திற்கு வருவோருக்கு உணர்த்திக்கொண்டிருக்கின்றன. அரங்கத்தை உருவாக்கிய கலைஞர்கள், வண்ண ஜாலக் காட்சியை அமைத்துப் பெரு வெற்றி கண்டிருக்கிறார்கள் என்ற உண்மையினை அரங்கத்துக்கு வரும் பார்வையாளர்கள் உணர்ந்து கொள்வார்கள். அரங்கின் சுவர்கள் அனைத்தும் பால் வண்ண நிறத்தில் காணப்படுகின்றன.

தேசிய வடிவமைப்புக் கழகத்தைச் சேர்ந்த நிலேந்து ஷாவும், ஈஷு பட்டேலும் வேறு சில இளம் கலைஞர்களும் இந்த அரங்கை வடிவமைத்தனர். ''அரங்கத்தை வடிவமைப்பதில் நாங்கள் அவ்வளவாகக் கவனம் செலுத்தவில்லை; நமது துணிகளின் வடிவமைப்பு, நிறம், ரகம் ஆகியவை பற்றி, உலகுக்கு எடுத்துணர்த்துவது பற்றியே அதிக கவனம் செலுத்தியிருக்கிறோம்'' என்று அவர்கள் கூறுகின்றனர்.

துணி அரங்கைச் சுற்றிப் பார்ப்பவர்கள் அடிமேல் அடியெடுத்து வைத்தால் மட்டும் போதாது. வழி மீது விழியும் இருக்க வேண்டும். ஏனென்றால் அதி அற்புதமாக அலங்கரித்து வைக்கப்பட்டிருக்கும் ஆடைகளின் வண்ணக் குழம்புத் தோற்றம் மனத்தைக் கிறங்க வைத்து நிலை தடுமாறச் செய்துவிடும். வண்ண வண்ண ஆடைகள் போர்த்திய பொம்மைகளும், பிற அமைப்புகளும், மேலும் கீழும் போய்வரும் வகையில் அமைக்கப்பட்டிருக்கின்றன.

துணி அரங்கில், பட்டு, பருத்தி, கம்பளி, நவீன சேர்க்கை இழைத் துணிகள் ஆகிய நான்கு முக்கியத் துணிவகைகள் இடம் பெற்றிருக்கின்றன. கைத்தறியிலும், நூற்பாலைகளிலும் தயாரிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான துணி வகைகளினின்றும் கவனமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவை இவை. நாடெங்கிலுமுள்ள துணி ஆலைகள் தங்களது மிகச் சிறந்த படைப்புக்களைக் காட்சிப் பொருட்களாக வைத்திருக்கின்றன. அரங்கில் இடம் பெற்றிருக்கும் தைக்கப்பட்ட ஆடை வகைகள், ''இந்திய ஆடைகளை உடுத்து அழகுற விளங்குங்கள்'' என்று காண்போருக்கு அழைப்பு விடுத்துக் கொண்டிருக்கின்றன.

காஷ்மீரிலும், இமாசலப் பிரதேசத்திலுமுள்ள கைவினைஞர்கள் தயாரித்த கம்பளத் துணிகளும், அஸ்ஸாம், பீகார், வங்காளம் ஆகிய இடங்களில் நெய்யப்பட்ட கச்சாப் பட்டுத் துணிகளும், உத்தரப் பிரதேசக் கலைஞர்களின் திறமை மிக்க விரல்கள் பட்டு மிளிர்ந்து கொண்டிருக்கும் ஆடைகளும் கண்ணுக்கு விருந்தளித்துக் கொண்டிருக்கின்றன.

# முதல்வரின் கண் சிகிச்சை முகாம் நிதி

## நன்கொடை வழங்கியோர் பட்டியல்

| | ரூ. | காசு. |
|---|---|---|
| முன் இதழ்த் தொடர்ச்சி | 38,49,558 | 84 |
| **30—10—72** | | |
| நிருவாக இயக்குநர், ஸ்ரீவில்லிப்புத்தூர் கூட்டுறவு நூற்பாலைகள் லிமிடெட், ஸ்ரீவில்லிப்புத்தூர். | 2,000 | 00 |
| **31—10—72** | | |
| மாவட்டக் கூட்டுறவுத் தணிக்கை அலுவலர், சேலம்-1. | 100 | 00 |
| செல்வன் ஆர். பாரி, மேற்பார்வை, திரு எம். ராஜலிங்கம், அன்னை இல்லம், 113, சண்முகம் நகர், தாத்தகாபட்டி, சேலம்-6. | 101 | 00 |
| **1—11—72** | | |
| திரு வி. இராமலிங்கம், துணைப்பதிவாளர், மேட்டூர், இருப்பு சேலம். | 200 | 00 |
| திரு எம். அகமது, ஐ.ஏ.எஸ்., சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர். | 185 | 00 |
| **3—11—72** | | |
| மாவட்டக் கூட்டுறவுத் தணிக்கை அலுவலர், சேலம்-1. | 100 | 00 |
| ஷெ | 100 | 00 |
| இராமநாதபுர மாவட்ட ஆட்சித் தலைவர். | 9,349 | 15 |
| **6—11—72** | | |
| கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர். | 8,421 | 00 |
| மாவட்டக் கூட்டுறவுத் தணிக்கை அலுவலர், சேலம்-1. | 100 | 00 |
| தமிழ்நாடு மின்வாரியப் பொறியாளர் சங்கம், சென்னை-2. | 2,000 | 00 |
| வடசென்னையில் 5—11—72 அன்று நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் கிடைத்த தொகை (முதல்வர் அலுவலகம் மூலமாக). | 4 | 00 |

| | ரூ. | காசு. |
|---|---|---|
| **7—11—72** | | |
| மாவட்டக் கூட்டுறவுத் தணிக்கை அலுவலர், சேலம். | 50 | 00 |
| **9—11—72** | | |
| சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர். | 50 | 00 |
| திரு ஜி. பெருமாள், எம்.ஏ., முதல்வர், அறிஞர் அண்ணா அரசினர் கல்லூரி, செய்யாறு. | 321 | 00 |
| திரு எம். முனுசாமி, பி. ஏ., ஆணையர், ஊராட்சி ஒன்றியம், கீழ்வேளூர், தஞ்சை மாவட்டம். | 35 | 00 |
| திரு எல்.எம். மேனேசஸ், ஐ.ஏ.எஸ்., பால் உற்பத்தி, பால்பண்ணை வளர்ச்சி, ஆணையர், பொறுப்பு, சென்னை-51. | 150 | 00 |
| **10—11—72** | | |
| இளைஞர் மன்றம், 91-வது வட்டம், சென்னை-4. | 50 | 00 |
| தலைவர், வேளாண்மையாளர், சங்கம், மணக்கால் (கிராமம்), லால்குடி வட்டம், திருச்சி. | 50 | 00 |
| **13—11—72** | | |
| சேலம் மாவட்ட ஆட்சியாளர் .. | 43,137 | 00 |
| திரு சி. கே. ரகுநாத், பி. இ., கோட்ட மின் பொறியாளர், சிவகங்கை. | 35 | 25 |
| செங்கற்பட்டு மாவட்ட ஆட்சியாளர். | 60 | 00 |
| உதவிப் பதிவாளர், மேட்டூர் .. | 150 | 00 |
| மாயூரம் கூட்டுறவு நில அடமான வங்கி, மாயூரம். | 100 | 00 |
| நிருவாக இயக்குநர், மதுராந்தகம், கூட்டுறவுச் சர்க்கரை ஆலை லிமிடெட். | 10,001 | 00 |

# அமிர்தாஞ்சன் லிமிடெட்

## 75 வருடங்களுக்கு மேல் குடும்பங்களில் பயன்பட்டு வரும் நம்பகமான மருந்துகளைத் தயாரிப்பவர்கள்

- **அமிர்தாஞ்சன் பெய்ன் பாம்**
  தலைவலி, வாய்வுபிடிப்பு வலி, சுளுக்கு, தீவிரமான ஜலதோஷம், இருமல், தசைவலி முதலியவற்றிற்கு
- **அமிர்தாஞ்சன் கிரைப் மிக்ஸ்சர்**
  குழந்தையின் ஜீரணக் கோளாறு, பல் முளைக்கும் பொழுது ஏற்படும் உபாதைகள் முதலியவற்றிற்கு
- **அமிர்தாஞ்சன் டெர்மல் ஆயின்ட்மென்ட்**
  சொறி, சிரங்கு, படை, முதலிய சரும உபாதைகளுக்கு
- **அமிர்தாஞ்சன் இன்ஹேலர்**
  மூக்கடைப்பு, சளி, மூக்கொழுகல், தும்மல், தலைபாரம் முதலியவற்றிற்கு
- **அனோலியம் கோல்ட் ரப்**
  ஜலதோஷம், இருமலிலிருந்து நிவாரணம் பெற வீரியமுள்ள சக்தி வாய்ந்த மருந்து
- **ஸலோஃபென் வலி நிவாரண மாத்திரை**
  தலைவலி, ஃபுளூ, உடல்வலி, பல்வலி முதலிய வற்றிற்கு

இந்தியாவிலும்
வெளிநாடுகளிலும்
புகழ் பெற்றவை




அமிர்தாஞ்சன்
லிமிடெட்
சென்னை-4

FDSAM-1759TM

| | | |
|---|---|---|
| திரு சீனிவாசன், ஆணையாளர், ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியம். | 50 | 00 |
| திரு எஸ். திருமலையப்பன், பி.ஏ., பி.எல்., பொது மேலாளர், சேலம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை லிமிடெட், மோகனூர். | 5,000 | 00 |

14—11—72

| | | |
|---|---|---|
| மாவட்டக் கூட்டுறவுத் தணிக்கை அலுவலர், சேலம்-1. | 250 | 00 |
| ஷை | 250 | 00 |
| மாவட்ட ஆட்சியாளர், தருமபுரி. | 13,676 | 00 |

15—11—72

| | | |
|---|---|---|
| சென்னை மாவட்ட ஆட்சியாளர், | 115 | 00 |
| கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை), திண்டுக்கல். | 15 | 00 |

16—11—72

| | | |
|---|---|---|
| உதவிப் பதிவாளர், மேட்டூர் .. | 35 | 00 |
| திரு கே. ஆர். மாணிக்கம், எம்.ஏ., எல்.டி., முதல்வர், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, சென்னை-15. | 174 | 00 |


**தமிழரசு**

**சந்தா**

**ஓர் ஆண்டு ரூ. 10-00**

**அரையாண்டு ரூ. 5-00**

**தனி இதழ் 40 காசு.**

**விவரங்களுக்கு :**

நிருவாகி,
தமிழரசு அலுவலகம்,
அரசினர் தோட்டம், சென்னை-2.


| | | |
|---|---|---|
| மாவட்டக் கூட்டுறவுத் தணிக்கை அலுவலர், சேலம்-1, | 125 | 00 |

17—11—72

| | | |
|---|---|---|
| துணைப் பதிவாளர், தென்காசி .. | 500 | 00 |
| செயலாளர், திண்டுக்கல் நகரக் கூட்டுறவு வங்கி, திண்டுக்கல். | 50 | 00 |
| உதவிப் பதிவாளர், மேட்டூர் .. | 100 | 00 |
| சென்னை மாவட்ட ஆட்சியாளர், சென்னை. | 275 | 00 |
| தலைவர், மன்னார்குடி நகரக் கூட்டுறவு வீடு கட்டும் சங்கம் லிமிடெட், மன்னார்குடி. | 101 | 00 |
| திரு எஸ். செயராமன், கருவூல அலுவலர், டி.ஓ. காஞ்சிபுரம். | 11 | 55 |

20—11—72

| | | |
|---|---|---|
| மின்வாரிய ஊழியர் மாநாட்டில் வசூல் ஆகியது. | 25 | 00 |

21—11—72

| | | |
|---|---|---|
| சென்னை மாவட்ட ஆட்சியாளர், சென்னை. | 50 | 00 |
| ஆவணப் பதிவுத் துறைத் தலைமை ஆய்வாளர், சென்னை. | 95 | 00 |
| நிருவாக இயக்குநர், காமாட்சியம்மன் கூட்டுறவு நூற்பு ஆலை, காஞ்சிபுரம். | 5,001 | 00 |
| ஆணையாளர், ஊராட்சி ஒன்றியம், காஞ்சிபுரம். | 3,525 | 00 |
| ஜூனியர் சேம்பர், காஞ்சிபுரம் | 101 | 00 |
| காஞ்சிபுரத்தில் வசூலாகியது .. | 83,251 | 00 |
| செல்வி ஜே. பத்மினி, உத்திரமேரூர். | 51 | 00 |
| செல்வி ஜே. பத்மஜா, உத்திரமேரூர். | 51 | 00 |
| காஞ்சியில் நடைபெற்ற விழாவில் வசூலானது. | 2 | 00 |
| மொத்தம் ரூ. | 40,39,287 | 79 |

# தந்தையின் ஆனந்தக் கண்ணீர்

மணப்பெண் கோலத்தில் கமலா தந்தையின் ஆசீர்வாதத்திற்காக வணங்கி நிற்கும் நேரம்...தந்தையின் கண்களில் நீர் மல்கியது...

ஆனந்தக் கண்ணீர்!... மகளின் மணம் வெற்றிகரமாக முடிந்ததை எண்ணி வடிக்கின்ற மகிழ்ச்சிக் கண்ணீர்!

18 ஆண்டுகளுக்கு முன்பு, கமலா பிறந்த சமயத்திலும் அவர் கண்ணீர்தான் வடித்தார்! பெண் பிறந்து விட்டதே. அவள் எதிர் காலத்தை எப்படி நன்கு அமைக்கப்போகிறோம் என்ற கவலைக் கண்ணீர் அது... நண்பர் ஒருவர் யோசனையின் மீது அவர் கமலாவிற்காக ஒரு திருமண என்டோமென்ட் பாலிசி எடுத்தார். அப்பாலிசி மூலம் கிடைத்த பணத்தில் கமலாவின் கல்யாணத்தை வெற்றிகரமாக முடித்து இன்று ஆனந்தக் கண்ணீர் வடிக்கிறார்.

உங்கள் மகளின் எதிர்கால நன்மைக்கு நீங்களும் ஒரு திருமண என்டோமெண்ட் பாலிசி எடுங்கள்,

**ஆயுள் இன்சூரன்சு போல ஆதரவு தருவது எதுவுமே இல்லை.**



EP-LIC-25-72

# வெண்பாப் போட்டி

## 46. 'காற்று' எனத்தொடங்கி 'மழை' எனமுடித்தல்

''காற்று''ப் பயலுக்குக் ''கார்மேக'' மாமகளை
நேற்று மணமுடித்தாள் நீள்கடலும்—ஆற்றல்
ககனத்து வீதியில் கல்மலையில் மோத
மகளழுதாள் கண்ணீர் மழை.

—சி. பாலச்சந்திரன், தஞ்சை.

காற்றுக் கடிந்தடிக்கின் நம்சென்னைச் சேரியில்
கீற்றுப் பறந்தோடும் கீழ்வீட்டில்— ஊற்றோடும்;
நேற்றுவரை இந்தநிலை ; நேர்த்தியாம் மூன்றடுக்கில்
ஊற்றட்டும் இன்று மழை.

—ஆ. செல்லபாண்டியன், செய்யாறு.

காற்றுப் புகாதபடி கட்டியணைத் தன்புவளர்
ஊற்றுப் பெருக உளமகிழ்ந்து—போற்றுமெழிற்
காதலராய் வாழ்வதனால் கண்டெடுக்கும் தண்குழலி
ஓதுஞ்சொல் இன்ப மழை.

—பூங்குழலி, பொருளூர்.

காற்றே உயிரானாய் ! கானக் குழலூதி
ஆற்றரிய துன்பம் அளித்திட்டாய்க்—கூற்றுவனாய் !
முல்லைக் கொடிபூத்தும் மோப்புடையார் ஏன்மறந்தார் ?
வல்லார்க்கேன் கண்ணீர் மழை !

—சிவ. கிருட்டிணன், கணியூர்.

காற்றுமூச் சானால் கருவில் உயிர்வளர்க்கும் ;
காற்றே புயலானால் காலனும் !—காற்றவள்
வண்ண மலர்தொட்டால் வான்மணக்கும் : கார்தொட்டால்
மண்மணக்கப் பெய்யும் மழை !

—சா. கந்தசாமி, நெல்லை-5.

காற்று பதரோட்டும் ; காயும் பகலோனின்
சீற்று பனியோட்டும் ; கேள்நோக்கித்—தூற்றல்
புகழோட்டும் ; தீமை பொறுப்பின், நீர்வார்த்து
மகிழ்வூட்டும் என்றும் மழை !

—ந. வடிவு, களக்காடு.

காற்றா யலைந்து கடுகாகத் தேய்ந்தாலும்
ஆற்றாதா ருண்டாமோ ? தாய்மொழியே !—மாற்றார்
உடலீயும் வாழ்வும் உலுத்தரின்பார் வைக்குக்
கடலுக்குள் பெய்த மழை.

—புலவர் அ. தங்கவேலு, வாணாபுரம்.

காற்று மருத்துவச்சி ; கார்முகிலே தாயாவாள் ;
போற்றுகின்ற தந்தையோ பொங்குகடல்—ஏற்றமிகு
விண்வெளியில் பேறடைந்து வீடுவரும் நன்மகவே
மண்குளிரப் பெய்யும் மழை.

—க. அருள்மொழி, காரைக்குடி.

காற்றென்றால் தென்றல் ; கலைப்பெருக்கம் காணுகின்ற
ஊற்றென்றால் செந்தமிழர் உள்ளந்தான்—போற்றுகின்ற
சீலத் தமிழுக்குச் செய்கின்ற தீமுயற்சி
பாலையில் பெய்யும் மழை.

—சாந்தகுமார், மதுரை.

---

பரிசு பெற்ற வெண்பா எழுதியவர்:
திரு சி. பாலச்சந்திரன்,
மானோஜியப்பா வீதி,
தஞ்சாவூர்.

# வெண்பாப் போட்டி

காற்றில் பறந்த கழிவிலை கோபுரத்தே
வீற்றிருப்பின் வெற்றிமிக்க வீரமோ ?—ஆற்றலற்றோர்
கூட்டமாகக் கூடியே கூவுகின்ற கூச்சலெல்லாம்
காட்டில் பொழிந்த மழை.

—தி. சிவசுப்பிரமணியன், திருநெல்வேலி-6.

காற்றும் கதிரொளியும் கார்முகில்சூழ் வான்வெளியும்
போற்றும் புவிக்குடைமை யானதுபோல்—சோற்றினையும்
உண்ணத் தடையின்றி ஊர்ப்பொதுவில் வைத்திட்டால்
மண்ணில்பெய் யாதோ மழை ?

— சண்முக. தாயுமானவன், பொன்மலை.

காற்று முனைத்தமிழின் கற்புடமை சாகுமென்ற
மாற்றுக் குறையா மரகதமே !—சாற்றமுதே !
பொய்யற்ற வாழ்வுப் புனிதமே ! நீயன்றோ
' பெய்யெனப் பெய்யும் மழை ! '

— சோ. தமிழரசு, கல்லல்.

காற்றுவந்து மோதுகையில் கார்மேகம் ஒன்றாகித்
தோற்றுவிக்கும் மாமழையை ; அஃதின்றேல்—ஆற்றலினால்
விண்ணேறி, மேகத்தின் மேற்பனியைப் பெய்திந்த
மண்மீதில் காண்போம் மழை.

— சு. கிருட்டிணன், திருப்பூர்.

காற்றுச் சிறிதின்றிக் காசினியில் மக்களினம்
நாற்றிசையும் வாழ்வதுண்டோ நாளுந்தான்—ஏற்றமுடன்
அன்னமும் நீரும் அனைவரும் பெற்றிங்கு
மன்னுதற்கு வேண்டும் மழை.

— ப. குப்புசாமி, பொன்மலை.

காற்றெனும் காளை கருமேகப் பெண்ணணங்கின்
தோற்றத்தில் தன்னெஞ்சைத் தோயவிட்டே ;—ஏற்றதொரு
விண்ணிடத்தே மஞ்சவளின் வேய்தோள் முயங்குங்கால்
மண்ணிடத்தே பெய்யும் மழை !

— ந. செனார்த்தனன், அரக்கோணம்.

காற்றுவரும் தென்றலெனக், காதலரோ வாரார்காண்
தேற்றிடவே யாருமின்றித் தேம்புகிறேன் !—சாற்றக்கேள் !
காய்நிலவைக் காண்பதிலை ; கண்ணுறக்கம் கொள்வதில்லை !
ஓய்வதிலை கண்ணீர் மழை.

— புலவர் வ. சிவசங்கரன், கானக்கோயில்பேட்டை.

காற்றுக் கவின்யாப்பாய்க் கைக்கருத்துக் கார்முகிலாய்
ஏற்றும் உணர்ச்சி எழில்துளியாய்ப்—போற்றுதற்(கு)
ஆர்க்கும் புகழ்வயலாய் அம்புவிக்கே நேருள்ளம்
வார்க்கும் கவிதை மழை.

— இரும்பொறை, கானடுகாத்தான் .

காற்றுமழை வெய்யில் கடுங்குளிரில் பாடுபடும்
பாட்டாளி தன்னைப் பணம்படைத்த—கூட்டத்தார்,
ஏய்க்கும்நிலை நீடித்தால் என்றேனும் பெய்துலகை
மாய்க்கும் புதுமை மழை.

— சி. மு. சிவலிங்கம், மதுரை 12.

காற்றுவந்து முத்தமிடக் கார்மேகம் பெய்வதுதான்
நேற்றுவரை நேர்ந்ததுகாண் ! இற்றைநாள்—ஆற்றலினால்
வையகத்தே மாந்தர் வகுத்த அறிவியலே
பெய்யென்றால் பெய்யும் மழை.

— புலவர் ந. அ. அண்ணாமலை, நந்தம்.

' காற்றாய் வருவேன் கலங்காதே ! என்றுரைத்த
மாற்றறியா மன்னவனின் மாற்றத்தின்—மாற்றத்தால்
வண்டுருவ வேல்விழியாள் வாட்டம் மிகப்பெற்றுக்
கொண்டாளே கண்ணில் மழை.

— புலவர் சுப்பிரமணியன், திருப்பத்தூர.

காற்றழிக்கும் வாழை ; கனலழிக்கும் காட்டுமரம்
தோற்றழிக்கும் நாட்டைத் துணிவின்மை—ஏற்றழிக்கும்
தொக்கவலி மன்னவனைத் துன்பத்தால் ஆற்றாத
மக்களுக்குக் கண்ணீர் மழை.

— காந்திமதி கோபாலகிருட்டிணன், அரியமங்கலம்.

காற்றடித்த பக்கமெல்லாம் சாயும் கருமுகில்போல்
சோற்றுக்காய்க் கொள்கையில் சோரமேன் ?—நாற்றிசையும்
போற்றுகின்ற நற்கொள்கை போற்றிநீ வாழ்ந்திடலே
ஆற்றும் அமுத மழை !

— புலவர் அ. சுந்தரேசன், மேட்டுப்பாளையம்.

காற்றுயிராய் வாழ்வோர்நற் கல்விநெறி கண்ணைகப்
போற்றிநறுந் தொண்டு புரிந்துபுகழ்—ஏற்றோர்
உளம்புகல ஓயா துழைப்பின் உலகம்
வளம்பெருகப் பெய்யும் மழை.

— மு. சின்னுசாமி, வடுகம.

காற்றில் மிதந்துவரும் கானம் ! கவிநெஞ்சின்
ஊற்றில் உடைப்பெடுக்கும் ஒண்டமிழ் !—சோற்றால்
மடையடைத்த மண்ணில் வரப்பெடுத்த நஞ்சை
மடையுடைக்கப் போதும் மழை.

— கே. டி. அரசு, கொளக்குடி.

காற்றும் பொதுவே கனமழை யும்பொதுவே
போற்றும் நிலமும் பொதுவானால்—கோற்றொடியாய் !
கூலம் பெருகிக் கொலைத்தொழிலும் போயொழிய
ஞாலத்தே பெய்யும் மழை.

— சுப்பிரமணியன், மன்னார்குடி.

# வெண்பாப் போட்டி

ாற்றுத் திரைதிரும்பும் காலம் வருமெனவே
ஆற்றியிருந் தானவள் அன்பத்தான்—நேற்று
லம்பெறவே கண்ணொளி நல்கிடஇன் றில்லை
லர்க்கண்ணிக் கண்ணீர் மழை.

— புலவர் கரு. சுப்பையா, கல்லூரணி.

ாற்றின் உறுதுணையும், காணும் புலிப்பொறையும்,
ஆற்றலுறு கற்பின் அருஞ்சிறப்பும் ; —போற்றலுற்றே
செய்யதமிழ் போலமைந்தாள் சீர்சால் கணவற்குப்
பெய்யெனப் பெய்யும் மழை '.

— வித்துவான் நா. சிவராம முத்துக்குமரவேல், தேனி.

ாற்று குளிர்ந்துவரும் ; கார்மேகம் சூழ்ந்துவரும் ;
ஆற்றில் புதுவெள்ளம் அள்ளிவரும் ; —நாற்று
நடுகின்ற காலமது ; நல்லுழவர் ஏற்ற
மடையவே பெய்யும் மழை.

— வை. இரத்தினசாமி, தேத்தாகுடி வடக்கு.

ாற்று வருங்கால் கவின்சோலை தள்ளாடும் ;
ற்றுப் பெருக்கினால் ஊர்செழிக்கும்—மாற்றிங்குத்
நாளாப் புயல்வறுமை தானெழுந்தால் ஏழையர் கண்
மாளாது பெய்யும் மழை.

— வே. இளம்பரிதி, சிலம்பகம்.

ாற்று வருங்கால் கலகலக்கும் வாழ்குடிசை !
ஆற்றொண்ணாத் துன்பம் அடுக்கடுக்காம் !—ஏற்ற
தமிழரசால் தாழ்குடிசை மாறிற்றென் செய்யும்
மமதை பிடித்த மழை.

— மலை. மா. ஆறுமுகம், மணிமங்கலம்.

காற்றில் தலையசைத்துக் காண்போர் களிப்புறவே
நாற்றம் மிகக்கமழும் நாண்மலரே—ஏற்ற
வனமெங்கும் வான்மரங்கள் வைத்திட்டால் நாட்டில்
மனமகிழப் பெய்யும் மழை.

— புலவர் மு. நம்மாழ்வார், கோயம்புத்தூர்-1.

காற்றுக் கருமுகிலைக் கூட்டக் கதிரொளியால்
ஆற்றுநீரும், ஆர்ப்பரிக்கும் ஆழியும்—ஊற்றெனப்
பொங்கியெழும் நீர்நிலையும், பூமிவிட்டே ஆவியாய்
மங்களமாய்ப் பெய்யும் மழை.

— க. ச. சூசை, போச்சம்பள்ளி.

காற்றிலே தென்றல் ! கருத்திலே வள்ளுவம் !
ற்றில் கவிதை உயிரூற்று—நாற்றிசையும்
' அண்ணா 'வென் றன்பால் அழைத்திட்ட தெய்வத்தை
எண்ணுங்கால் கண்ணீர் மழை !

— புலவர் ச. மருதமுத்து, உடுமலை.

காற்று வரும்பொழுது காத்திருந்து நெற்களத்தில்
தூற்றிப் பதர்நீக்கித் தூய்மையே—போற்றிவரும்
ஏர்உழவர் ஏழையின் ஏக்கத்தைப் போக்குதற்குச்
சீராக வேண்டும் மழை.

— அ. பழனிச்சாமி, சேலம்-6.

காற்று வெயில்சுமக்கும் ; காவில் எழில்சுமக்கும் ;
மாற்றமின்றி எங்கும் மணஞ்சுமக்கும் ;—சீற்றமது
கொண்டால் புயலாம் ; குளிர்சுமந்து பெய்யவைக்கும்
விண்முகிலி னின்று மழை.

— புலவர் ப. தேவகுரு, தேவதானப்பட்டி.

காற்றுடன் மின்னல் கடிதாகி மேல்வானில்
ஏற்றமுற ஓங்கும் இடியோசை—நாற்றிசையும்
விண்ணிலே கார்முகில் வீழ்குடைபோல் தாழ்ந்திட்டால்
மண்ணிலே பெய்யும் மழை.

— பழ. கந்தசாமி, பழனி.

காற்றோ உயிர்களைக் காப்பது, கண்ணியக்
கூற்றோ குறைகளைக் கொல்வது—போற்றிடும்
தன்னல மற்றோரைத் தாங்கத்தான் பெய்யுமே
மன்னுயிர் காக்கும் மழை.

— கா. மு. கண்ணாயிரம், புல்லரம்பாக்கம.

காற்றுப் புயல்போல் கயவர் செயுங்கொடுமை
மாற்றக் கலைஞர் மலைபோன்ற—ஆற்றலினைக்
காட்டித் தடுத்தமைதி காண்பார்தம் நற்பணியின்
மாட்சிக்கே ஒப்பாம் மழை.

— வி. மு. உலகநாதன், சென்னை-17.

காற்றும் நுழையாக் கடுமைமிகு காவலும்
தோற்றதே என்குழந்தாய் ! தோளுயர்த்திக்—கூற்றும்
பகைவென்று மீள்கென்ற பைந்தமிழ்த்தாய் அன்பை
வகையுடனே வாழ்த்தும் மழை.

— பாரதி சங்கு, அமராவதி நகர்.

காற்றுச் சுகம்நாடிச் சென்னைக் கடற்கரையில்
ஆற்றுவெள்ளம் போல்திரளும் அன்பரெல்லாம்—ஏற்றமழை
இல்லையே என்றுழவர் ஏக்கமுறும் காலத்தும்
தொல்லையென வேண்டார் மழை.

— மா. கா. குருசாமி, அபிராமம்.

காற்றுங் கடலுங் கனலுங் கதிரொளியும்
போற்றும் இடமும் புனலுந்தான்—ஆற்றலில்
பொன்றினும் பொன்றாதே பைந்தமிழ்ப் பாவலர்தம்
நன்றாய நற்பா மழை.

— புலவர் வெ. வா. நடராசன், சென்னை-5.





நாட்டின்
முன்னேற்றத்திலும்
வளமையிலும்
எமது பங்கு



TANSI
டான்ஸி



தொழில் நுட்பத் துறைகளில் உங்கள்
தேவைகளை பணிவுடன் பூர்த்தி செய்கிறது

- மலிவானது
- உத்திரவாதமானது
- வார்ப்பட வேலைகளுக்கும், கட்டுமான கட்டமைப்புகளுக்கும், கருவி மற்றும் உருமாற்றத்திற்கும் மர சாமான்களுக்கும் "டான்ஸி" தொழிற் பட்டறைகளுடன் தொடர்பு கொள்ளுங்கள்

விவரங்களுக்கு அணுகவும் :

நிருவாக இயக்குனர்
தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம்
(தமிழ்நாடு அரசு நிறுவனம்)
35/2, உட்ஸ் ரோடு, சென்னை-2

# பருத்தி விவசாயிகள் கவனிக்கவும்.



5 A/152 (760)

உங்கள் பயிரை சார் உறுஞ்சி நாசம் விளைவிக்கும் பூச்சிகளிலிருந்து

பாதுகாக்க **மெடாஸிஸ்டாக்ஸ்**

கடித்து மென்று பயிருக்கு தீங்கிழைக்கும் பூச்சிகளை

**:.பாலிடால்**

சிறந்த முறையில் கட்டுப்படுத்துகிறது.

காய்ப் புழுக்-

களுக்கு ஏற்றது விசேஷ பூச்சி மருந்து

**மெடாஸிட்காம்பி**

அடைப்புகளுடன் இணைக்கப்பட்டிருக்கும் உபயோகிக்கும் முறை
களின் படி ..பாலிடால், மெடாஸிஸ்டாக்ஸ்,
மெடாஸிட்காம்பி மருந்துகளை என்றும் உபயோகியுங்கள்.

பருத்திப் பயிரைத்தாக்கும் பூச்சிகளி-
னால் ஏற்படும் நஷ்டத்திற்கு முடிவு
காணவும். பண விரயத்தை தவிர்க்க

BAYER ® பாயரின் தரமான பூச்சி மருந்துகள்

## மாணவர் அரங்கம்

## செந்தமிழ்ச் செம்மல்கள்

# ஆபிரகாம் பண்டிதர்

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தஞ்சையில் இருந்து தமிழிசை வளர்த்த அறிஞர் பெருமக்களுள் ஒருவர் ஆபிரகாம் பண்டிதர்.

திருநெல்வேலி மாவட்டம் சாம்பவர் வடகரையில் 1859-ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் இரண்டாம் நாள் முத்துசாமி என்பவரின் மகனாகப் பிறந்தார் ஆபிரகாம். இளமையிலேயே பல கலைகளையும் பயிலும் திறனுடையவராக இருந்தார் இவர். இசைக் கலையிலும் ஓவியக்கலையிலும் மிகுந்த ஆர்வம் காட்டி வந்தார். பள்ளி ஆசிரியராக வேண்டும் என்ற எண்ணத்தினால் திண்டுக்கல்லுக்குச் சென்று அங்கேயிருந்த ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் சேர்ந்து படித்தார். இங்குப் படிக்கும்பொழுது தக்க சித்த மருத்துவர் ஒருவரிடம் மருத்துவமும், சிறந்த இசையாசிரியர் ஒருவரிடம் இசையினையும் நன்கு பயின்றார்.

ஆபிரகாம் ஆசிரியர் பயிற்சித் தேர்வில் முதன்மையாகத் தேறினார். இவருடைய திறமையினை நன்குணர்ந்த இவருடைய பள்ளித் தலைமையாசிரியர் தம் பள்ளியில் இவரை ஓர் ஆசிரியராக அமர்த்திக் கொண்டார். அப்பொழுது ஆபிரகாமுக்கு வயதுபதினேழு. இளமையிலேயே இவர் மாணவர்களிடம் மிகுந்த நன்மதிப்பைப் பெற்றிருந்தார்.

ஒரு சமயம், ஆபிரகாம் பண்டிதருடைய மாணவர் ஒருவரின் தந்தை தமது சொந்த ஊரான ஆனைமலைப்பட்டிக்கு இவரை அழைத்துச் சென்றார். ஆனைமலைப்பட்டியை அடுத்து இருப்பது சுருளிமலை.

சுருளிமலையில் கருணானந்த சித்தர் என்பவர் இருந்தார். அந்தக் கருணானந்தச் சித்தரைச் சுருளிமலையில் சந்தித்த ஆபிரகாம் பண்டிதர் அவரது மாணவரானார். அதனால் மருந்து முறைகளை ஆபிரகாம் பண்டிதர் கற்றுக் கொண்டார். சிறந்த சித்த மருத்துவர் என்ற பெயருமெடுத்தார்.

ஆபிரகாம் பண்டிதருக்கு 1882-ஆம் ஆண்டில் திருமணம் நடைபெற்றது. ஞானவடிவு பொன்னம்மாள் என்ற ஆசிரியையை மணந்து கொண்டார். திருமணமான பின்னர் ஆபிரகாம் திண்டுக்கல்லை விட்டுத் தஞ்சைக்குக் குடியேறினார்.

தஞ்சாவூரில் சில ஆண்டுகள் ஆசிரியர் தொழிலில் ஈடுபட்ட ஆபிரகாம் பண்டிதர் மருத்துவத் தொழிலில் மிகுந்த அக்கறை காட்டினார். தமது ஆசான் பெயரை வைத்துக் 'கருணானந்தர் சஞ்சீவி மருந்துகள்' என்று புகழ்மிக்க மருந்துகளைச் செய்து விற்பனை செய்தார்.

ஆபிரகாம் பண்டிதர் புகழை நாட்டுக்கு நன்குணர்த்தியது "கருணாமிருத சாகரம்" என்ற இசைத் தமிழ் நூலாகும்.

'கருணாமிருத சாகரம்' நூல் 1,346 பக்கங்களை உடையது. இசைத் தமிழில் உள்ள நுண்ணிய கருத்துக்களையும் இந்நூல் விவரிக்கின்றது. இந்நூலை ஆபிரகாம் பண்டிதர் கருணானந்த முனிவருக்குக் காணிக்கையாக்கியிருந்தார்.

1916-ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்களில் தஞ்சாவூரில் இசை மாநாடு நடைபெற்றது. இம்மாநாட்டில் இசை பற்றிய ஐயப்பாடுகளையும் வழக்கில் இல்லாத பண்களையும் இசைப் பாடல்களையும் தமது புதல்விகளான மரகத வல்லி, கனக வல்லி ஆகியோரின் துணையோடு வாய்ப்பாட்டிலும் வீணையிலும் ஆபிரகாம் பண்டிதர் பாடிக் காட்டி மெய்ப்பித்தார்.

கிருத்தவர் எனக் கருதப்படும் ஆபிரகாம் பண்டிதர் சைவத் திருமுறைகளைக் கற்பதிலும் ஈடுபாடு கொண்டிருந்தார்.

தமிழின் முதன்மையைப் பற்றி இவர் எழுதியுள்ளவை ஆராய்ச்சி அறிஞர்களுக்கு விருந்தாகும். 'தமிழே உல

மொழி' என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டிருந்தவர் ஆபிரகாம் பண்டிதர். 'பிரணவ மந்திரம்' என்று தலைப்பிட்டு முதன்மையான ஆதாரங்களை விளக்கியுள்ளார்.

'ஓம்' என்ற மந்திரச் சொல் தமிழுக்கே உரியது என்பதை விளக்கி ஆபிரகாம் பண்டிதர் எழுதியுள்ள விளக்கம் கற்றறிந்த மக்களால் புகழப்படுவதும் காலத்தால் அழியாததும் ஆகும்.

ஆபிரகாம் பண்டிதர் நிலை நாட்டிய தமிழிசை பற்றிய கருத்துக்களை பரோடா சமஸ்தானத்தின் திவானாக இருந்த வி. பி.மாதவராவ் என்பவர் மிகவும் பாராட்டியுள்ளார்.



ஆபிரகாம் பண்டிதரின் கருணாமிருத சாகரத்திற்குத் திருப்பாதிரிப்புலியூர் சிவசண்முக மெஞ்ஞான சிவாச்சாரியார் என்னும் ஞானியாரடிகளும், சாமிவேதாசலம் என்னும் மறைமலையடிகளாரும் வழங்கியுள்ள முன்னுரைகளே தனி நூலாக அச்சிடும் தகுதியை உடையனவாகும்.

'ராவ் சாகேப்' என்ற சிறப்புப் பட்டத்தைப்பெற்றிருந்த ஆபிரகாம் பண்டிதர் இசைத் தமிழுக்கு ஆற்றியுள்ள பணிகளை எட்டயாபுரம் மன்னர் பாராட்டிச் சிறப்பித்திருக்கிறார்.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழிசைக்கு அருந்தொண்டாற்றியவர்களுள் தலையானவர் ஆவார் ஆபிரகாம் பண்டிதர்.

—நம்பியின் தம்பி.

---

# பனிக்கட்டித் தீவுகள்

நிலப்பரப்புகள் எல்லாத் திசைகளிலும் கடலால் சூழப்பட்டுத் தீவுகளாக இருப்பது போல துருவப் பகுதிகளிலும், உயர்ந்த அட்சரேகையிலுள்ள இடங்களிலும் பல நூறு ஆண்டுக் காலமாக நிலையாக இருந்து வரும் பனிக்கட்டித் தீவுகள் உள்ளன. இப் பனிக்கட்டித் தீவுகள் முற்றிலும் பனிக்கட்டியாலானவை. கடலின் நடுவே எக்காலத்திலும் மிதந்து கொண்டிருக்க வல்லன. கடலில் மிதக்கும் பிற பனிக்கட்டிப் பாறைகளிலிருந்தும் இவற்றை எளிதில் வேறுபடுத்தி அறியலாம். கடலில் மிதக்கும் பனிக்கட்டிப் பாறைகள் எளிதில் உடைந்து விடுவனவாகும். மேலும் அவை ஒழுங்கற்ற பலவிதமான உருவங்களைக் கொண்டிருக்கும். அப்பாறைகளின் பெரும்பகுதி கடல் நீரினுள் அமிழ்ந்திருக்கும். எனவே உடையாதிருக்கும் பனிக்கட்டித் தீவுகள் குறிப்பிடத்தக்கன.

பனிக் கட்டித் தீவுகள் ஒரு சில சதுர மைல் பரப்பிலிருந்து 300 சதுர மைல் பரப்பினைக் கொண்டனவாக உள்ளன. கடலில் மிதக்கும் இத்தீவுகள் 20 அடி முதல் 200 அடி வரையான குறுக்குயரத்தைக் கொண்டுள்ளன. ஆங்காங்கே சிறிய சிறிய குன்றுகளை ஒத்த பனிக்கட்டிப் பாறைகளும், அதனிடையே நெளிந்து வளைந்து வழிந்தோடும் தெள்ளிய நீரோடைகளும் காணப்படும். வேனிற் காலங்களில் இந்நீரோடைகளில் நீர்ப் பெருக்கெடுத்தோடும். கடலில் மிதந்தபடியே நிற்கும் இத்தீவுகள், சிற்சில சமயங்களில் காற்றாலும், கடல் நீரோட்டங்களாலும் இங்குமங்குமாக அலைக்கப்பட்டு இழுத்துச் செல்லப்படுகின்றன. சில தீவுகளில் பாறைத் துண்டங்களும், தூசி துகள்களும், தாவர விலங்கின எச்சங்களும் காணப்படுகின்றன. இவற்றைக் கொண்டு இத்தீவுகள் ஒரு காலத்தில் நிலப்பரப்பை ஒட்டி இருந்திருக்குமா என்பது பற்றி அறிஞர்கள் ஆராய்ச்சி நடத்துகின்றனர்.

பனிக்கட்டித் தீவுகள் கிரீன்லாந்திலும், கனடாவை அடுத்த தீவுக் கூட்டங்களிடையேயும் மிகுதியாகக் காணப்படுகின்றன. இவற்றில் சில 100 அடிக்கும் மேலான குறுக்குயரத்தைக் கொண்டுள்ளன. இவ்வாறான பருமனுடைய தீவுகள் பல நூற்றுக்கணக்கான ஆண்டுகளாகத் தக்க பருவ நிலையுடன் கூடி வளர்ந்தனவாகும்; அல்லது இவை பனியூழிக் காலத்தில் (Ice Age) தோன்றிய பெரும் பனிக்கட்டிகளின் கரைந்து மீந்த பகுதிகளாகவும் இருக்கலாம். இத்தீவுகளில் சிற்சில சமயங்களில் கப்பல்கள் மோதி உடைந்து விடுவதால் துருவப் பகுதிகளில் இவை போக்குவரத்திற்குத் தடையாக உள்ளன. எனவே முன்கூட்டியே பனிக்கட்டித் தீவுகள், பனிப் பாறைகள் ஆகியவற்றின் நகர்ச்சியையும், அவை செல்லும் திக்கையும், இருக்குமிடத்தையும் கண்டுபிடித்து மாலுமிகளுக்கு எச்சரிக்கின்றனர். இத்தீவுகள் வானிலை ஆராய்ச்சி, புவி பௌதிக ஆராய்ச்சி, கடல் ஆராய்ச்சி, புவி மின்காந்த அலை பற்றிய ஆராய்ச்சி, புவி ஈர்ப்பு விசை பற்றிய ஆராய்ச்சி, போன்ற ஆராய்ச்சிகளை நடத்த ஏற்ற இடங்களாக உள்ளன. மற்றும் துருவ பகுதிகளில் உள்ள கனிப்பொருள் வளத்தினைப் பற்றி ஆராய்ச்சி நடத்தவும் இத்தீவுகள் பயன்படுகின்றன. இத்தீவுகளில், மக்களும் குடியேற வாய்ப்புண்டு.

இரா. இராமசாமி,
ஆய்வு மாணாக்கன்,
ஞாலவியல் துறை,
மாநிலக் கல்லூரி, சென்னை-5.

# அஞ்சல் தலையில் அன்னைத் தமிழகம்!



நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்த எட்டயாபுரத்தில் சின்னச்சாமி அய்யருக்கும் இலட்சுமி அம்மாளுக்கும் 11—12—1882-ல் மகனுகப் பிறந்த சுப்பையா, தன்னுடைய ஏழாவது வயதிலேயே கவிமழை பொழியத் தொடங்கினுர். பதினேரு வயதடைந்த பால கவி சுப்பையாவை எட்டயா புரம் சமஸ்தானப் புலவர்கள் சோதித்து வியந்து 'பாரதி' என்ற பட்டத்தினை சூட்டிப் பாராட்டினுர்கள்.

நெல்லை இந்துக் கல்லூரி உயர்நிலைப் பள்ளியில் பாலகவி சுப்பையா ஐந்தாம் படிவம் வரை படித்தார். அங்கு அவர் ஒரு சிறந்த மாணவராகத் திகழ்ந்தார். பாலகவி சுப்பையா தன் இளம் வயதிலேயே பெற் ரேரை இழந்தார். பின்னர் காசிக்குச் சென்று அங்குத் தன் அத்தையின்அரவணைப்பில்வளர்ந் தார். அவர் காசியிலே வாழ்ந்த காலத்தில் இந்தி மொழியிலும், சமஸ்கிருதத்திலும் தேர்ச்சி பெற்றுப் புகுமுக வகுப்பில் சிறப்புடன் தேர்ச்சி பெற்ருர். இன்று மகாகவி பாரதியார் என்ற வுடன் நமது கண்முன் தோற்ற மளிக்கும் பாரதியாரின் பஞ்ச கச்சம், வால்விட்ட தலைப்பாகை, வெட்டரிவாள் மீசை ஆகியன அங்குதான் பழக்கத்திற்குவந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்த கீழ்க்கடையத்தில் வாழ்ந்த செல்லப்ப அய்யரின் புதல்வி செல்லம்மாளுக்கும், பாலகவிக்கும் நடைபெற்ற இளம் வயது மணம் பற்றிப் பாரதியாரே அவர் கவிதை களில் அழகாகப் பாடியிருக்கிருர்.

கவிஞர் காசியிலிருந்து தென் னிந்தியாவுக்குத் திரும்பினுர். எட்டயாபுரம் மன்னருக்குத் தோழராக விளங்கினுர். எனினும் சமஸ்தான வேலையில் அவருக்கு விருப்பமில்லாததால், மதுரைக்கு வந்து, மதுரை சேதுபதி உயர் நிலைப்பள்ளியில்தமிழாசிரியராகச் சில காலம் பணியாற்றினுர். கவிஞரின் 'தன்மை இரக்கம்' என்ற முதல் பாடல், மதுரை யிலிருந்து வெளிவந்த 'விவேக பாநு'வில் வெளிவந்தது. கவிஞருக்குப் பத்திரிகைத் துறை யில் ஆர்வம் மிகமிகப் பள்ளிக் கூட வேலையில் விருப்பம் குறைந்து, இறுதியாக, பள்ளி ஆசிரியர் வேலைக்கே முழுக்குப் போட்டுவிட்டுச் சென்னையில் 'சுதேசமித்திரன்' நாளிதழில் உதவி ஆசிரியர்ப் பொறுப்பேற் றுப் பணிபுரிந்தார். பின்னர், 'சக்கரவர்த்தினி' என்ற திங்களிதழின் ஆசிரியப் பொறுப் பேற்ருர்.

1905-ல் நடைபெற்ற வங்கப் பிரிவினை எதிர்ப்புக் கிளர்ச்சி, பாரதியாரின் வாழ்க்கையில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தியது என்ருல் அது மிகையாகாது. பிரிவினை எதிர்ப்புக் கிளர்ச்சி யிலும் சமூக சீர்திருத்தத்திலும் பாரதி தீவிரமாக ஈடுபட்டார். அந்நியர் ஆட்சியின் கீழ் இந்தியா அனுபவிக்கவேண்டியிருந்த இழி நிலைமை, பாரதியாரின் தேச உணர்ச்சிக்கனலை மூட்டி விட் டது.பாரதியார் தீவிரப் புரட்சி யாளராகவே மாறி விட்டார்.

1906-ல் காசியில் நடைபெற்ற இந்திய தேசியக் காங்கிரஸ் மாநாட்டிற்குப் பாரதியார் சென்று திரும்பினுர். அவர் சென்னைக்கு வந்ததும், காங்கிரஸ் தீவிரவாதிகளின் கருத்துப் பத் திரிகையான 'இந்தியா'வின் பொறுப்பாசிரியராகவும், ஆங்கில வாரப் பத்திரிகையான 'பால பாரதி' யின் ஆசிரியராகவும் பொறுப்பேற்று, மக்களின் உரிமை வேட்கையை வளர்க்க உதவும் வீராவேசக் கட்டுரை கள், கவிதைகள் பலவற்றை எழுதி வெளியிட்டார். இந்தக் காலத்தில்தான் பாரதியாருக்கு வ. உ. சிதம்பரனுர், சர்க்கரைச் செட்டியார் போன்ற பல தீவிர தேசியவாதிகளின் தொடர்பு கிடைத்தது—தொடர்பு கிளைத்து வளர்ந்தது.

தென்னிந்தியாவில் விடுதலை இயக்கம் உச்சக் கட்டத்தை எய்தியது. பிரிட்டிஷாரின் கண் ணேட்டம் பாரதியாரின் நட வடிக்கைகளின் மீது விழுந்தது. அவர், தன் பணி பிரிட்டிஷாரின் அடக்குமுறையால் இடையறு பட்டுப் போகாமல் தொடர்ந்து நடைபெற வேண்டுமே எனும் ஆர்வத்துடிப்பால் புதுச்சேரிக்குச் சென்ருர். அங்கிருந்து கொண்டே தொடர்ந்து தம் பணியைச்செய்துவந்தார். பாரதி யாரின் 'இந்தியா' பத்திரிகை, பிரிட்டிஷாரைப் படாதபாடு படுத்திவைத்தது. அதன் பயனுக, அந்தப் பத்திரிகை இந்தியா விற்குள் வரக்கூடாது என்று தடைவிதிக்கப்பெற்றது. இதனுல் பத்திரிகை தொடர்ந்து நடை பெற முடியாமல் நிற்க வேண் டியதாயிற்று. பாரதிதாசன் அரவிந்தர், வ. வே. சு. அய்யர் ஆகியோருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு பாரதிக்குக் கிடைத்தது. என்ருலும், புதுச் சேரியில் அரசியல் நடவடிக் கைகளில் ஏற்பட்ட மந்த நிலைமை பாரதியாருக்குச் சலிப் பையும், ஒருவித ஏமாற்ற உணர்வையும் உண்டாக்கியது. இலக்கியச் சேவையில் பாரதியார் சற்றுத் தீவிரமாக ஈடுபடும் வாய்ப்பு உருவாயிற்று. சிறந்த பல கவிதைகளையும், 'பாஞ்சாலி சபதம்', 'குயில் பாட்டு'ப் போன்ற சிறந்த நூல்களையும் எழுதினுர். இவருடைய



மாணுக்கராகவிருந்த பாரதிதாசன் தமிழகத்தில் கவிதைத் துறையில், தனக்கு ஒரு பரம்பரையைத்தோற்றுவித்தார்.

முழுக்க, அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடாமலேயே இருந்துவிட அவரால் முடியவில்லை. தமிழகத்திற்குப் புறப்பட்டு வந்து கொண்டிருந்தார். கடலூர் அருகே பிரிட்டிஷார் அவரைக் கைது செய்து 34 நாட்கள் காவலில் வைத்திருந்துவிட்டுப் பின்னர் 'வழக்கில்லை' என்று கூறிவிடுதலை செய்தார்கள்.

பின்னர் பாரதியார் கீழ்க்கடையத்திற்கு வந்தார். திருவனந்தபுரம், எட்டயாபுரம், காரைக்குடி கானுடுகாத்தான் முதலிய பலவேறு ஊர்களுக்கும் அவ்வப்போது சென்று வந்தார். வை.சு. சண்முகம் செட்டியார், சொ. முருகப்பா, ராய. சொக்கலிங்கம் போன்ற செட்டிநாட்டுப் பிரமுகர்களின் தொடர்பும், செட்டிநாட்டு வரவேற்பும் ஓரளவு பொருளுதவியும் பாரதியாருக்குக் கிடைத்தன.

பாரதியாருக்குக் கிராமச் சூழலில் சலிப்பு ஏற்பட்டது. 1919-ல் சென்னைக்குச் சென்ருர். ராஜாஜியின் வீட்டில் காந்தியடிகளைச் சந்தித்தார். 1920-ல் மீண்டும் 'சுதேசமித்திரன்' துணை ஆசிரியரானுர். பல்வேறு உலகவிஷயங்களைப் பற்றி அவர் ஏராளமான கட்டுரைகளையும், கவிதைகளையும்எழுதிக்குவித்தார். இலக்கிய வானில் எழில்மிகும் ஒரு முழுநிலவாகவே விளங்கினுர்.

1921-ஆம் ஆண்டு ஜூலை, திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயில் யானை மகாகவியை வளைத்துப் பிடித்துத் தரையிலே அடித்தது. அவர் மூர்ச்சையடைந்து யானையின் காலடியிலே கிடந்தார். அச் செய்தியறிந்த குவளைக்கண்ணன், மகாகவியைக் காப்பாற்றிச் சிகிச்சையளித்தார். அதிர்ச்சியால் ஏற்பட்ட நோயினின்றும் அவர் விடுதலை பெற்ருர். ஆனுல், வயிற்று நோய்க் கடுமையினின்றும் அவர் மீளமுடியவில்லை. 1921 செப்டம்பர் 11-ஆம் நாள் தமிழகக் கவிதை வானில் ஒளிவீசி நின்ற அந்த முழுநிலவு வீழ்ந்து மறைந்தது.

இந்தியத் தபால்-தந்தித் துறை 11—9—1960-ஆம் நாளில் மகாகவி பாரதியாரின் திருவுருவம் பொறித்த 15 காசு விலையுள்ள அஞ்சல் தலையை வெளியிட்டுச் சிறப்புச் செய்தது.

—சாமி பழ

# கால்நடைகளுக்கு வரும் நோயும் நோய்த் தடுப்பும்

மாடு, ஆடு, பன்றி ஆகிய கால்நடைகளையும், மனிதனையும் தாக்கும் ஒரு தொற்று நோய் "ப்ருஸெல்லோசில்". தமிழ் நாட்டில் இந்நோய் கால்நடைகளை எந்த அளவிற்குப் பாதித்திருக்கிறது என்று அறியவும், இந்நோயினைத் தடுக்கும் முறைகளைப் பற்றி ஆராய்ந்தறியவும் தமிழ் நாடு கால்நடை மருத்துவ ஆராய்ச்சிக் குழுவினர் முயற்சித்தனர்.

## ப்ருஸெல்லோசில்

கருச் சிதைவு, கன்று போட்ட பின் உறுப்புத் தங்கிவிடுவது (Retention of Placenia) ஆகியவை இந்நோயின் முக்கிய அறிகுறிகள். இந் நோயால் பாதிக்கப்பட்ட கால்நடைகள் தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ மலட்டுத் தன்மை அடையக் கூடும். இக் கால்நடைகளுக்குப் பிறக்கும் கன்றுகள் செத்துப் பிறக்கலாம். அல்லது அவை நலிந்து காணப்படலாம். எனவே கால்நடைப் பண்ணைகளில் இந்நோய் தோன்றினுல் பேரிழப்பு ஏற்படும்.

### தடுப்பு முறைகள்

இந் நோயினுல் அவதியுறும் கால்நடைகளைக் குணப்படுத்த முற்றிலும் பயனளிக்கும் சிகிச்சை இதுவரை கண்டுபிடிக்கப்படாததால், வருமுன் காப்பதே நல்லது. அதற்குக் கீழ்க் கண்ட முறைகளை விவசாயிகள் கடைப்பிடிக்கலாம்.

(1) மாட்டுத் தொழுவம் சுற்றுப்புறம் ஆகியவற்றை டெட்டால், பினைல் போன்ற கிருமி நாசினிகள் கலந்த நீரால் நன்ருகக் கழுவிவிட வேண்டும்.

(2) மாட்டுத் தொழுவத்தின் தரை எப்போதும் உலர்ந்திருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டும்.

(3) ஏதேனும் ஒரு மாட்டிற்கு இந்நோய் கண்டிருந்தால், அதை உடனடியாக அப்புறப்படுத்தித் தனியாக வைத்துப் பராமரிக்க வேண்டும்.

(4) மாடுகளை நேரடியாகக் காளை சேர்ப்பதை விடுத்து, அரசு கால்நடை மருத்துவ மனைக்குக் கொண்டு சென்று செயற்கைக் கருத்தரிப்புச் செய்வது நல்லது.

(5) புதிய பசுக்களை வாங்கும்போது இந்நோய்ப் பாதிக்கப்படாத இடங்களிலிருந்து வாங்க வேண்டும்.

(6) கிடேரிக் கன்றுகளுக்கு 6 அல்லது 8 மாதம் நிறைந்ததும் அருகிலுள்ள கால்நடை உதவி மருத்துவர் மூலமாக, "ப்ருஸெல்லோசில்" தடுப்பு ஊசி போட்டுக்கொள்ள வேண்டும்.

(7) பால் கறக்கும் முன்பு மடியையும், அதைச் சுற்றியுள்ள பகுதியையும் டெட்டால் மருந்தால் நன்ருகக் கழுவ வேண்டும்.

### மனிதர்க்கும் இது பரவும்

இந் நோய் கண்ட மாடுகளுடனும், மற்றையக் கால்நடைகளுடனும் நெருங்கிய தொடர்பு

உடையோர் இந் நோயால் பீடிக்கப்பட்டு, அவதியுறுகின்றனர். இந் நோயால் பாதிக்கப்பட்டுள்ள மாடுகளின் பாலைக் காய்ச்சாமல் அருந்துவோருக்கும் இந்த நோய் பரவ ஏதுவாகும். ஆகவே, இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ள பசுவின் பாலை மட்டுமல்ல, எந்தப் பசுவின் பாலையும் நன்றாகக் காய்ச்சி அருந்துவதால் மனிதர்களுக்கு இந்நோய் பரவுவதைத் தடுக்க முடியும்.

## அடைப்பான்

கால்நடைகளைத் தாக்கும் கொடிய நோய்களில் அடைப்பான் நோய் முக்கிய இடம் வகிக்கிறது. பசில்லஸ் அந்த்ரசிஸ் ( Bacillus Anthracis ) என்னும் மிக நுண்ணிய கிருமியால் உண்டாகும் இந்த நோய், மனிதர்களுக்குப் பரவக் கூடியது. பெரும்பாலும் ஆடு, மாடுகளே இந்நோயால் பெரிதும் அவதியுறுகின்றன. அடைப்பான் நோயால் பாதிக்கப்படும் கால்நடைகள் பெரும்பாலும் பிழைப்பதில்லை. சிகிச்சைக்குப் போதிய அவகாசம் இருப்பதில்லை. காலையில் மேய்ச்சலுக்குப் போகும் கால்நடைகள் மாலையில் அல்லது மறுநாள் அதிகாலையில் திடீரென இறந்து விடும். சென்னை கால்நடை மருத்துவ ஆராய்ச்சிக் குழு, கால்நடைகளுக்கு இந்நோய் பரவும் முறைகளையும், தடுப்பு முறைகளையும் கண்டறிய ஆராய்ச்சிகள் நடத்தியது.

### நோய் எப்படிப் பரவுகிறது ?

நோய்க் கிருமிகள் நிலத்தில் சூரிய வெளிச்சத்தினுல் பாதிக்கப்படாமல் ஸ்போர் ( Spore ) வடிவில் பல ஆண்டுகள் நிலத்தில் காணப்படுகின்றன. இந் நிலத்தில் கால்நடைகள் மேய்ச்சலுக்கு வரும்போது ஸ்போர்டுகளோடு கூடிய பசும் புற் பூண்டுகளை உட்கொள்வதால், ஸ்போர்கள் உட்சென்று அடைப்பான் நோயை உண்டுபண்ணுகின்றன. மேலும் இந் நோயால் இறந்த கால்நடைகளின் எலும்புகளைக் கொண்டு தயாரித்த உரத்தினுலும் எலும்புத் தூளினுலும் இந் நோய் பரவுவதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

### நோயின் அறிகுறிகள்

அடைப்பான் நோயால் அவதியுறும் கால்நடைகள், இறக்கு முன் கடுமையான வயிற்று வலியால் அவதிப்பட்டுத் துள்ளிக் குதித்துச் சாகும். இறந்த பின் வயிறு உப்பிக் காணப்படும். ஆசன வாயிலும், ஏனைய இடங்களிலும் இரத்தம் கருமையான நிறத்தில் வரும்.

### தடுப்பு முறைகள்

இறந்த கால்நடைகளைத் தவறுதலாக அறுப்பதனுலும், கழிவுகளையும், உடலையும் சரியான முறையில் அப்புறப்படுத்தாமல் இருப்பதானுலும் அடைப்பான் நோய் எளிதில் பரவுகிறது. அடைப்பான் நோய் கண்டு இறந்த கால்நடைகளைத் தோல் உரிக்காமல் கழிவுப் பொருட்களோடு எரித்த பின்னர், இரத்தம் பட்ட இடங்களில் கிருமி நாசினியைத் தெளிக்க வேண்டும். அல்லது ஊருக்கு அப்பால் 6 அடி ஆழமுள்ள குழி தோண்டி, உடலைச் சுண்ணும்பு சேர்த்துப் புதைக்க வேண்டும். மற்றக் கால்நடைகளுக்கும் காலம் கடத்தாமல் தடுப்பு ஊசி போட்டுக் கொள்ள வேண்டுவது மிகவும் அவசியமாகும்.

அடைப்பான் நோய்க்கான தடுப்பு ஊசி மருந்துகள், இராணிப்பேட்டையிலுள்ள கால்நடை தொற்றுநோய்த் தடுப்பு நிலையத்தில் தயாரிக்கப்படுகின்றன. எனவே அருகாமையிலுள்ள கால்நடை மருத்துவரை அணுகிக் கால்நடைகளுக்குத் தடுப்பு ஊசி போட்டு, இக் கொடிய நோயினின்றும், கால்நடைகளைக் காப்பாற்றிக்கொள்ள முற்படுவோம்.

**(சென்னை கால்நடை மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சித்துறை கொடுத்துள்ள தகவல்களிலிருந்து தொகுக்கப்பட்டவை.)**

## நேருவும் புதிய இந்தியாவும்

''நேருவும் புதிய இந்தியாவும்'' என்ற நடமாடும் பொருட்காட்சி ஆசியா-72 பொருட்காட்சியில் அமைக்கப்பட்டுள்ளது. இந்தப் பொருட்காட்சி முதல் முறையாக 1965-ல் நியூயார்க் நகரில் அமைக்கப்பட்டது. பின்னர் இது 13 நாடுகளின் தலைநகரங்களில் அமைக்கப்பட்டு, இப்போது முதல் தடவையாக இந்தியாவுக்குக் கொண்டுவரப்படுகிறது.

இந்தப் பொருட்காட்சி, பண்டித ஜவஹர்லால் நேரு இறந்த ஆறு தினங்களுக்குள்ளாகத் திட்டமிடப்பட்டு அமைக்கப்பட்டது. ஆனுல் கடந்த ஏழு ஆண்டுகளில் இந்தப் பொருட் காட்சியில் மேலும் பல பகுதிகள் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

நாட்டின் விடுதலை நாள் வெள்ளிவிழாக் கொண்டாடப் படும் இந்த ஆண்டில் ஆசியா-72 கண் காட்சி அமைக்கப்பட்டிருப்பதால், நாட்டுக்கு அருந் தொண்டாற்றிய அந்த உத்தமரைப் பற்றிய கண்காட்சியை ஆசியா-72 கண்காட்சியிலேயே அமைப்பதுதான் ஏற்றது என்று கருதப்படுகிறது. ஆசியா-72 கண்காட்சி அதிகாரிகள், இந்தியாவின் கலாச்சாரம், வளர்ச்சிப்பணிகள் வெளிநாட்டுக் கொள்கைகள் போன்றவற்றை விளக்கும் அம்சங்களையும் ''நேருவும் புதிய இந்தியாவும்'' கண்காட்சியில் சேர்த்திருக்கிருர்கள். இந்தப் பொருட்காட்சியில் நேருவின் ஒலிப்பதிவு செய்யப்பட்ட பேச்சுகள் ஒலிபரப்பப்படுகிறது. செய்திப் படங்களும் திரையிடப்படுகின்றன.

''நேருவும் புதிய இந்தியாவும்'' பொருட் காட்சி, 10,000 சதுர அடி நிலப்பரப்பில், சுமார் 10 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டிருக்கும் சிறப்பு அரங்கில் அமைக்கப்பட்டிருக்கிறது. நாள்தோறும் சுமார் 40,000 பேர் இந்தப் பொருட்காட்சியைக் கண்டார்கள். பொருட்காட்சி அமைக்கப்பட்டிருக்கும் அரங்கினை நாட்டின் மிகச் சிறந்த கட்டடக் கலைஞர்கள் அழகு நயத்துடன் வடிவமைத்திருக்கிருர்கள்.

இந்தப் பொருட் காட்சி நியூயார்க் நகரில் அமைக்கப்பட்டபோது நாள்தோறும் 10,000 முதல் 12,000 பேர் இதனைக் காணத் திரண்டு வந்தனர். நேரு பற்றிய இந்தப் பொருட் காட்சி ஆசியா-72 பொருட் காட்சி முடிவடைந்த பின்னரும் அதே இடத்தில் நிரந்தரமாக நடைபெற்றுவரும்.

# குட்டிக் கதைகள்

'பூங்கொடி'

இராமகிருஷ்ண பரம அம்சரைப் பற்றி உங்களுக்குத் தெரியுமா? அவர் மக்களுக்காகப் பல நல்ல வழிமுறைகளைக் கூறியிருக்கிறார். வாழ்க்கை எப்படி அமைய வேண்டும் என்றெல்லாம் அவர் சொல்லியிருக்கிறார். பெரிய பெரிய கருத்துக்களை யெல்லாம் மிக எளிய இனிய கதைகளின் மூலம் விளக்கி, மக்களைக் கவர்ந்திருக்கிறார். அவர் சொன்ன குட்டிக் கதைகள் குதூகல மூட்டுவனவாகும். இதோ அவர் சொன்ன அருமையான கதைகள்:

ஒருவன் கிணறு வெட்ட ஆரம்பித்தான். இருபது அடி ஆழம் வரை மிகவும் சிரமப்பட்டுத் தோண்டிப் பார்த்தான். நீர் வரும் அறிகுறியே தென்படவில்லை. அதனால் அவன் மனமுடைந்தான். பிறகு வேறொரு இடத்தில் கிணறு தோண்ட ஆரம்பித்தான். இப்போது முன்னைவிட அதிக ஆழம் அவன் தோண்டினான். உழைப்புத்தான் வீணானதே தவிரத் தண்ணீர் இருப்பதற்கான தடயமே இல்லை. இதனால் மிகவும் ஆத்திரமடைந்த அவன் இன்னொர் இடத்தில் கிணறு வெட்ட ஆரம்பித்தான். அங்கும் அவனுக்கு ஏமாற்றமே கிடைத்தது. கடைசியில் வெறுப்படைந்த அவன், கிணறுவெட்டும் எண்ணத்தையே விட்டுவிட்டான்!

இப்படி அவன் இந்த மூன்று இடங்களிலும் சிரமப்பட்டு வெட்டிய ஆழத்தைக் கணக்கிட்டுப் பார்த்தால், சுமார் நூறு அடி இருக்கும். இவன் முதலிலேயே இடம் விட்டு இடம் வெட்டாதிருந்தால், தண்ணீர் நிச்சயம் கிடைத்திருக்கும். மனத்திலே உறுதி இல்லாமல், முயற்சியும் இல்லாமல் செய்த செயலுக்குக் கிடைத்த பலன் என்ன? ஏமாற்றம் தான்! 'முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்!' என்பதற்கிணங்க அவன் பாடுபட்டிருந்தால், கைமேல் பலனை அடைந்திருப்பான். அவசரமும், ஆத்திரமும் உள்ளவர்களுக்கு எப்போதுமே பலன் கிடைக்காது. ஆகவே, இவன் நம்பிக்கைக் குறைவினாலே பயன் பெறாமல் போனான்.

ஒரு நாள் பல மீனவப் பெண்கள் சேர்ந்துகொண்டு சந்தைக்குச் சென்றார்கள். அங்குத் தாங்கள் கொண்டு வந்த மீன்களை விற்று விட்டுத் திரும்பிக்கொண்டிருந்தார்கள். அப்போது இருள் சூழ்ந்து கொண்டிருந்தது. மழையும் பிடித்துக்கொண்டது.

மீனவப் பெண்கள் மழையில் நன்றாக நனைந்து விட்டார்கள். அவர்களால் மேலும் நடந்து போக முடியவில்லை. இரவு நேரம் வேறு. போகும் வழியில் ஒரு பூக்காரர் வீடு இருந்தது. அந்தக் குடிசையில் போய் எல்லாரும் ஒதுங்கினார்கள். அந்தப் பூ வியாபாரி மிகவும் நல்லவர். அவர், குளிரில் நடுங்கும் மீனவப் பெண்களைப் பார்த்துப் பரிதாபப்பட்டார். தம் குடிசையில் உள்ள ஓர் இடத்தில் அவர்கள் படுத்துக் கொள்ள உதவி செய்தார்.

அந்த அறையில் நிறையப் பூக்கூடைகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. அவற்றிலிருந்து பூக்களின் நறுமணம் 'கமகம' வென வீசிக் கொண்டிருந்தது. அந்த அருமையான வாசனை மீனவப் பெண்களுக்குப் பிடிக்கவில்லை! அவர்கள் இடைவிடாமல் மீன் நாற்றத்தையே அனுபவித்துக் கொண்டிருந்தவர்களாதலால், பூ மணம் அவர்களுக்குப் பிடிக்க வில்லை போலிருக்கிறது! அதனால் அவர்களுக்குத் தூக்கம் வரவில்லை. பூ மணம், அவர்களைத் தூங்கவிடாமல், தூக்கத்தைக் கெடுத்துவிட்டதாம்!

அவர்களில் ஒரு கிழவி ஒரு யோசனை சொன்னாள். ''இந்தப் பூக்கூடை வாசனை நம்மைத் தூங்கவிடாது. ஆகவே, நாம் தூங்க வேண்டுமானால் அதற்கு ஒரு வழி இருக்கிறது'' என்று புதிர் போட்டாள். ''என்ன? என்ன?'' என்று அனைவரும் கிழவியைச் சொல்லும்படி வற்புறுத்தினர்.

''நம்முடைய மீன் கூடைகளை நமது முகங்களுக்கு முன்னே வைத்துக் கொண்டால், அவற்றி வந்து கொண்டிருக்கும். அதற்கு முன் பூ வாசனை செல்லாக்காசாகி விடும்'' என்றாள் கிழவி.

''ஆமாம். இதுவே நல்ல யோசனை!'' என்று அனைவரும் தங்கள் தங்கள் மீன் கூடைகளை முகத்துக்கு முன்னே வைத்துக் கொண்டு படுத்துக் கொண்டார்கள். பிறகு அவர்களுக்கு நிம்மதியான தூக்கம் வந்ததாம்!

இதிலிருந்து என்ன தெரிகிறது?

ஒவ்வொருவருக்கும் எதில் அதிகப் பழக்கமிருக்கிறதோ, அதிலேயே அவர்கள் முழுத் திருப்தியுடையவர்களாய் இருப்பார்கள்.

* * *

ஒரு துறவி பாதையின் ஓரத்திலே, மிகுந்த பக்தியுடன் கண்களை மூடி உட்கார்ந்து கொண்டிருந்தார். அவ்வழியே ஒரு திருடன் வந்துகொண்டிருந்தான். அவன் அந்தத் துறவியைப் பார்த்துவிட்டு, ''இங்குக் கண் மூடித் தூங்கும் இவன் ஒரு பக்காத் திருடன், நேற்றிரவு பல வீடுகளில் திருடியிருப்பான். அதனால் தூக்கம் இன்றிக் களைத்து வந்து இப்போது இங்கே உட்கார்ந்தபடியே தூங்குகிறான் போலிருக்கிறது! இங்கே இருந்தால் நம்மையும் காவலர் பிடித்துக் கொள்வார்கள்!'' என்று அங்கு நில்லாமல் ஓடி விட்டான்.

பிறகு, அந்த வழியே ஒரு குடிகாரன் வந்தான். அவன் துறவியைப் பார்த்தான். ''அம்மாடியோ! இவன் ஒரு குடுவை நிறையக் கள்ளைக் குடித்துவிட்டு, இப்படி மயங்கிச் சாக்கடையோரத்தில் சாய்ந்து கிடக்கிறான். நான் கூடத்தான் குடித்திருக்கிறேன். இவனைப்போலவா மயங்கிக் கீழே விழுந்து கிடக்கிறேன்? நான் இவனைப்போல உறுதியில்லாமல் இப்படித் தெருவிலே வீழ்ந்து விட மாட்டேன்'' என்று பெருமையாக எண்ணிக் கொண்டு அவரை ஏளனமாகப் பார்த்துக்கொண்டே சென்றான்.



கடைசியாக, ஒரு துறவி அந்த வழியே வந்தார். கண்களை மூடி அமைதியாக உட்கார்ந்திருக்கும் துறவியைப் பார்த்தார். உடனே வந்தவர் அவரது காலடியில் விழுந்து வணங்கினார். தம்மை விட அவர் ஒரு சிறந்த துறவி என்று எண்ணி அவரை வழி பட்டுச் சென்றார்.

இதனால், நமக்குத் தெரியும் உண்மை என்ன? மனிதன் எந்தப் பொருளையும், அவன் அவன் இயல்புக்குத் தக்கபடிதான் மதித்துக் கொள்வான்.

* * *

ஒரு கிராமத்திலே ஒரு மடம் இருந்தது. அதில் பல துறவிகள் வசித்துவந்தார்கள். அவர்கள் நாள்தோறும் வீடு வீடாகச் சென்று உணவு கேட்பது வழக்கம். அதன்படி, அவர்களுள் ஒரு துறவி உணவுக்காகத் தெருவில் போய்க் கொண்டிருந்தார்.



அப்போது அந்தத் தெருவிலிருந்த ஒரு பணக்காரர், ஒரு ஏழையைப் பலமாக அடித்துக் கொண்டிருந்தார். துறவி மிகுந்த இரக்க குணம் உள்ளவர். அவர் மனம் உருகி, உடனே அந்தப் பணக்காரரிடம் சென்று ''ஐயா! இந்த ஏழையை அடிக்க வேண்டாம் விட்டு விடுங்கள்!'' என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டார். ஆனால் அந்த ஆணவக்காரரோ அவரைக் கோபத்துடன் பார்த்து ''உனக்கு இந்த ஏழையின் மீது அவ்வளவு இரக்கமாயிருந்தால், அவன் தாங்கிக்கொள்ள வேண்டிய அடியை நீ தாங்கிக் கொள்ளேன் பார்க்கலாம்!'' என்று சொல்லி மேலும் துறவியை அடி அடியென்று அடித்தான்.

பாவம்! துறவி அடியின் வேதனையைப் பொறுக்க முடியாமல் பேச்சு மூச்சு இல்லாமல் கீழே விழுந்துவிட்டார். அவருடைய பரிதாப நிலையைப் பார்த்த ஒருவர், மடத்துக்கு விரைந்து சென்று நடந்ததைச் சொன்னார்.

உடனே, அங்கிருந்த மற்றவர்களெல்லாரும் பதைபதைப்புடன் ஓடி வந்து, அடிபட்ட சாமியாரை மடத்துக்குத் தூக்கிக் கொண்டு வந்தனர். நெடு நேரம் வரை அவருக்கு மயக்கம் தெளியவில்லை. அதனால் எல்லாரும் வருத்தம் மிகுந்தவர்களாய்க் காணப்பட்டனர். பிறகு, துறவிக்குக் கொஞ்சம் கொஞ்சமாக நினைவு வந்தது. அவர் கண்களைத் திறந்து எல்லாரையும் பார்த்தார்.

அப்போது, அவர் அங்கிருக்கும் மற்றவர்களை யார் யாரென்று தெரிந்து கொள்கின்றாரா என்பதை அறிய விரும்பி, அவருக்கு மயக்கம் தெளிவித்த ஒருவர், அவர் முகத்தைப் பார்த்து, ''ஐயா! தங்கள் மயக்கத்தைத் தெளிவித்தவன் யாரென்று தங்களுக்குத் தெரிகிறதா?'' என்று கேட்டார்.

அதற்கு அவர் மெல்லிய குரலில், ''சகோதரனே! என்னை அடித்தவனே எனக்கு மயக்கம் தெளிவித்தான்..!'' என்று மறுமொழி கூறினார். உடனே அங்கிருந்தவர்கள் இதைக் கேட்டு வியந்தனர்.

இவர், பகைவனையும் நண்பனாகக் கருதும் உயர்ந்த எண்ணத்தை உணர்ந்து அனைவரும் பாராட்டினர். அவர் மனம் தெளிந்தவராதலால், தன்னை அடித்தவனும் நண்பனே, என்ற சமத்துவ நிலை அவருக்கு உண்டாயிற்று. 'பகைவனை நேசி'

**வெண்பாப் போட்டி-49,**

ஈற்றடி : நிலத்தை நிறைத்ததே நெல்

**முடிவு நாள் : 2—1—1973.**

பரிசு : ஓராண்டு 'தமிழரசு' அன்பளிப்பு

வெண்பா அனுப்பவேண்டிய முகவரி :

ஆசிரியர் (வெண்பாப் போட்டி),
'தமிழரசு' அலுவலகம்,
அரசினர் தோட்டம், சென்னை-2.

குறிப்பு:

அஞ்சல் அட்டையில் வரும் வெண்பாக்களே ஏற்றுக்கொள்ளப்படும்.

# கராதேன்® நீரில் கலங்கும் பொடி செம்பேன்களை அழிக்கிறது. தூள் சாம்பல் நோயைக் கட்டுப்படுத்த வல்லது.

மூன்று விவசாயப் பல்கலைக் கழகங்களின் பன்முனைப் பரிசோதனைகள், சர்வதேச ஆராய்ச்சியின் கிருபணங்களை ஆதரித்து கராதேன் ஒரு பூஞ்சண நாசினி, தூள் சாம்பல் நோயைக் கட்டுப்படுத்தவல்ல பூஞ்சண நாசினிகளில் மலைவற்றுள் உயர்ந்தது என்றும், காய்கறிப் பயிர், புகையிலை, தீரகப்பயிர், கோதுமை, பட்டாணி, திராட்சை, பருத்தி, மா, ஆப்பிள் மற்றும் பல புஷ்பச் செடிகளில் தோன்றும் செம்பேன்களைக் கட்டுப்படுத்துவதிலும் சிறந்தது என்று உறுதி கூறியுள்ளது.

துப்புரவாக நோய்களைக் கட்டுப்படுத்த பயிர்நோய், பயிர்களில் பரவும் முன்பே மருந்து பிரயோகத்தைத் தொடங்கவும்.

இண்டோபில் கெமிகல்ஸ் லிமிடெட், பம்பாய்-25.

® கராதேன் மற்றும் ஃப்ளாஸ்க் சின்னம் ரோம் அண்ட் ஹாஸ் கம்பெனி, ஃபிலடெல்ஃபியா, பா., அவர்களின் ட்ரேட் மார்க்குகள். யூ. எஸ். பேட்டண்ட் ஆபீஸிலும் இதர நாடுகளிலும் ரிஜிஸ்டர் செய்யப்பட்டது.




இண்டோகேபில் கெமிகல்ஸ்—பசுமை நிறைந்த வருங்காலத்திற்கு



# அடையாறு டு ஆசியா 72

சந்துரு வயது 5. 'துருதுரு' வென்று துடிப்பாக இயங்கும் இந்தச் சிறுவன் சென்னை அடையாற்றிலுள்ள '' கில்ட் ஆப் சர்வீஸ் '' சிறுவர் அனாதை இல்லத்தைச் சேர்ந்தவன்.

அவனையொத்த சிறார்களுக்குக் கிடைக்காத அரிய வாய்ப்பு அவனுக்குச் சென்ற திங்கள் 30-ஆம் நாள் கிட்டிற்று. அவனும் அந்த இல்லத்தைச் சேர்ந்த 6 வயது சரோஜா, 8 வயது சிட்டி பாபுவும் தமிழ்நாடு அரசு நடத்தும் தாம்பரம் அனாதை இல்லத்தைச் சேர்ந்த 5 வயது கோபாலகிருஷ்ணன், 8 வயது லதா ஆகியோரும் சென்னையிலிருந்து விமானம் மூலம் டெல்லியில் நடைபெறும் 'ஆசியா 72' பொருட் காட்சியைக் காண அழைத்துச் செல்லப்பட்டனர். கடந்த நவம்பர் 30-ஆம் நாளன்று இந்த ஏற்பாட்டினைத் தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்புத் துறை செய்து தந்தது. அவர்கள் விமானத்தில் சென்று வரவும், டெல்லியில் நான்கு நாட்கள் தங்கி 'ஆசியா 72'-னைக் கண்டு களிக்கவும், ஆன செலவினைச் செக்கசுலாவாகியா நாட்

---

இந்த இதழுடன் இலவச இணைப்பு.

## வெண்மைப் புரட்சியும் நீலப் புரட்சியும்

அடுத்த இதழுடன் இலவச இணைப்புகள்.

## ① கல்வி வளர்ப்போம்!

## ② 1973 நாட்காட்டி!

டில் பிராக் நகரிலுள்ள 'ஆர்ட்சென்டர்' என்ற கலாச்சார நிறுவனம் ஏற்றுக்கொண்டது.

இவர்களுக்கு மட்டும் ஏன் இந்தத் தனி வாய்ப்பு? 'ஆசியா 72' பொருட்காட்சியினை ஏற்பாடு செய்தவர்கள் இந்தியாவைப் பற்றி இந்தியா '72 என்ற தலைப்பில் நமது நாட்டின் 25-ஆம் ஆண்டு முன்னேற்றத்தினைப் படம் தயாரிக்க விரும்பினார்கள். அதன் பொறுப்பு செக்கசுலாவாகியாவைச் சேர்ந்த 'ஆர்ட் சென்டர்' என்ற நிறுவனத்திடமும், அகமதாபாத்தைச் சேர்ந்த 'நேஷனல் டிசைன் சென்டர்' என்ற நிறுவனத்திடமும் ஒப்படைக்கப்பட்டது. இந்த இரு நிறுவனங்களும் சேர்ந்து கூட்டாக இதனைத் தயாரித்தனர்.

இந்தப் படத்தின் படப்பிடிப்பு இந்தியத் துணைக் கண்டம் முழுவதிலும் நடைபெற்றது என்றாலும், பெரும் பகுதி, அதாவது சுமார் 60 சதவிகிதம் தமிழ் நாட்டில் நடைபெற்றது. அதுவும் குறிப்பாக மாமல்லபுரம் கடற்கரையில் பெரும்பாலானபடப் பிடிப்பு நடந்தது.

இந்தப் படத்தின் கதாநாயகன் ஒரு அனாதைச் சிறுவன். யாருமில்லாத அனாதையாகக் கடற்கரையில் திரியும் அவனை, மற்றச் சிறுவர்கள், அழைத்துச் சென்று அவன் அனாதை அல்ல, அவனைப் பராமரிக்கப் பாதுகாக்க அகன்ற பெரிய நாடும், நாட்டு மக்களும் உள்ளனர்; அதன் பண்பு, கலை, கலாச்சாரம், தொழில் வளம், இயற்கை வளம், எப்படிப்பட்டது என்பதினை எடுத்துக் காட்டுகின்றனர்.

இதில் நடிப்பதற்குத் தொழில்முறை நடிகர்களில்லாமல், உண்மையிலேயே அனாதையான சிறுவர்கள் தேவை என்று விரும்பிக் கேட்டார் செக் நாட்டு ஆர்ட் சென்டரைச் சேர்ந்த பேராசிரியர் ஜரோஸ்லாப் ஃபிரிக். அவர் விருப்பப்படி, அடையாறு, தாம்பரம் ஆகிய பகுதிகளிலுள்ள இந்த அனாதை இல்லத்திலிருந்து சில சிறுவர்-சிறுமிகளை அனுப்ப, செய்தி, மக்கள் தொடர்புத் துறை ஏற்பாடு செய்தது.

துடிப்பும் சூட்டிகையுமாகவுள்ள சந்துருவையும், இந்த 4 சிறுவர் சிறுமிகளையும் தேர்ந்தெடுத்தார் பேராசிரியர்.




**ஆசியா '72**
**தமிழக அரங்கம்**

'' தமிழ்நாடு அரங்கம், தமிழர்களின் தொன்மைச் சிறப்பு மிக்க பண்பாட்டையும், அண்மைக் காலத்தில் தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ள மனநிறைவூட்டும் தொழில் வளர்ச்சியையும் படம் பிடித்துக் காட்டுகின்றன ''.

—பருவா,
பீகார் மாநில ஆளுநர்.

• • •

'' வட நாட்டினராகிய நாங்கள் இந்தியக் கலாச்சாரத்தைச் சிறப்பாகத் தெற்கில்தான் காண முடிந்தது. தமிழ்நாடு எங்களுக்குப் பலவற்றை கொடுக்கிறது. தமிழ்நாட்டுக் கலைஞர்களின் திறமை ஈடு இணையற்றது.

—நிட்டிராஜ் சிங்,
தொழில் மற்றும் நிதி அமைச்சர்,
புது டெல்லி.

இந்தப் படம் 'ஆசியா 72' பொருட்காட்சியில் காட்டப்படுகின்றது. அதனைக் கண்டு மகிழ்வதற்குத்தான் சந்துருவும், அவனுடன் பங்கு பெற்ற இந்த சிறுவர், சிறுமியரும் டெல்லிக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். இரு அனாதை இல்லங்களின் கண்காணிப்பாளர்களும், செய்தித் துறை அலுவலர் ஒருவரும் உடன் சென்றனர்.

முப்பது நிமிடம் ஓடும் இந்தப் படத்திற்காக 33,000 அடி நீளமுள்ள படச் சுருளும் 30,000 சிலைடுகளும் பயன்படுத்தப்படுகின்றன.

புதிய யுக்தியைக் கையாண்டு இதற்கான பிரத்தியேகத் திரை அரங்கில் படம் காட்டுகின்றனர்.

ஒரே சமயத்தில் 2 திரையில் படம் ஓடுகின்றது. அந்தத்திரைகளைச் சுற்றியுள்ள திரைகளில் 16 சிலைடுகள் காட்டப்படுகின்றன. சிலைடுகளும் படம் சம்பந்தப்பட்டதாகயிருக்கும். எடுத்துக்காட்டாகப், படத்தில் நடனம் ஆடும் காட்சி வந்தால், நடனத்திற்கான சலங்கை, உடையலங்காரம் போன்றவை சிலைடுகள் மூலம் காட்டப்படும்.

இதற்காகக் காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை பல்வேறு இடங்களில் மொத்தம் 80,000 அடி நீளமுள்ள படச் சுருளில் படம் எடுத்தனர் இந்த நிறுவனத்தார்.

இந்தப் படத்தினைப் பார்க்க, ஒரு ரூபாய் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. நாள்தோறும் சுமார் ஆயிரம் பேர்கள் இதனைக் கண்டு களித்து வருகின்றனர். பொருட்காட்சி முடியும் முன் சுமார் ஒன்றரை இலட்சம் பேர் இதனைக் கண்டு களிப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

படத்தையும், பொருட்காட்சியையும் டெல்லி மாநகரைக் கண்டு களித்த சிறுவன் சந்துரு தனது நண்பர்களுடன்— ஆசிரியைகளுடன் டிசம்பர் 5-ம் நாள் சென்னை வந்து சேர்ந்தான். அவனைப் பொறுத்த வரை அடையாற்றிலிருந்து ஆசியா-72 சென்று வந்த பயணம் மறக்க முடியாத மகிழ்வான நிகழ்ச்சியாகும். இன்னும் இது போன்ற பல நிகழ்ச்சிகள் அவனது வாழ்வில் நிகழ இது ஒரு நல்ல முன்னோடியாகும்.




# கதர் கைத்தொழில் அங்காடி

## குறளகம்
சென்னை-1













**கைவண்ணப் பொருள்களின் களஞ்சியம்**

வெளிநாட்டார் போற்றும்
**பயன் பொருள் கலைக்கூடம்**

20461
20462 20463
20464 20465






# ஆசியா 72 பொருட்காட்சியால்

# நம் நாட்டுக்கு ஏற்படும் நன்மை என்ன?

நவம்பர் திங்கள் 3-ஆம் நாள் மூன்ருவது ஆசிய வணிக பொருட் காட்சியைத் தலைமையமைச்சர் திருமதி இந்திராகாந்தி துவக்கி வைத்தது, உலக வணிக வரை படத்தில் இந்தியா இடம் பெறச் செய்வதற்கான முக்கிய நடவடிக் கையாகும்.

ஆசிய, தூரக் கிழக்கு நாடு களுக்கான பொருளாதாரக் குழு மூன்று ஆண்டுக்கு ஒரு முறை இந்த வணிகப் பொருட் காட்சி யை நடத்துகிறது. வட்டாரப் பொருளாதாரக் கூட்டுறவிற்கு உதவும் ஒரு முக்கிய சாதனமாகக் கருதப்படும் இந்த வணிகப் பொருட்காட்சி, ஒரு தனி நிறு வனம் போன்றதாகும். இப்போது இந்தியாவில் நடைபெறுவது மூன்ருவது ஆசியப் வணிகப் பொருட்காட்சியாகும். இதற்கு முன்னர் இரண்டு பொருட் காட்சிகள் பேங்காங்கிலும், டெஹிரானிலும் நடைபெற்றன.

இந்தப் பொருட்காட்சியில் ஏராளமான ஆசிய நாடுகளும், ஆறு கண்டங்களிலிருந்தும் பல் வேறு நாடுகளும் வந்து கலந்து கொண்டுள்ளன. இந்நாடுகள் மொத்த உலக ஏற்றுமதி வணி கத்தில் 65 சதவீதப் பங்கினை பெற்றுள்ளனவாகும். மேலும் இவை யாவும் இந்தியாவின் முக்கிய வணிகப் பங்கு நாடு களும் ஆகும். இந்திய ஏற்று மதியில் சுமார் 55 சதவீதம் இந்நாடுகளுக்குச் செல்கின்றன. உடன் வளர்ந்து வரும் சில இலத்தீன் அமெரிக்க நாடு களும், ஆப்பிரிக்க நாடுகளும் இப் பொருட்காட்சியில் பங்கு கொண்டிருப்பது ஒரு குறிப்பிடத் தக்க செய்தியாகும்.

பொருளாதாரக் கூட்டுறவின் மூலம் அமைதியும் முன்னேற்ற மும் காண்பதே இப்பொருட் காட்சியின் குறிக்கோளாகும். இது முற்றும் பொருத்தமான ஒன்ருகும். மேலும், இந்திய விடுதலை வெள்ளி விழா ஆண் டாகிய இந்த ஆண்டின் சிறப் பினை இது மேம்படுத்துவதாக அமைந்துள்ளது.

பொருட்காட்சியில் இந்தியா, நெசவுத் தொழிலை தனது முக்கியப் பகுதியாகக் கொண்டுள் ளது. இந்தியாவில் நெசவுத் தொழில் ஒரு முக்கிய இடம் பெற்றிருப்பதோடு அல்லாமல் நமக்கு இதன் மூலம் கணிசமான அந்நியச் செலாவணியும் கிடைக் கிறது. பண்டைய பெருமை பொருந்திய இத் தொழிலின் பிரமிக்கத்தக்க பல்வேறு பகுதி பொருட் காட்சியில் இடம் பெற்றுள்ளன.

வளர்ந்துவரும் நாடுகளின் விழைவுகளைக் கருத்தில் கொண்டு இப்பொருட்காட்சியின் பலனை நாம் கணக்கிடவேண்டும். இந் நாடுகள் தமது பொருளாதாரத் தை நவீனமாக்குவதன் மூலம் சிறந்த வாழ்க்கைத் தரத்தைப் பெறும் நோக்குடன் கூடியன வாயுள்ளன. இவ்வாறு பொரு ளாதாரச் சார்புபெறும்போதே இந்நாடுகள் பெற்றிருக்கும் அரசியல் சுதந்தரம் அர்த்த முள்ள தொன்ருகிறது. இந்தப் பொருளாதார வளர்ச்சி காண் பதில் வணிகம் ஆற்றக் கூடிய பங்கு மிக இன்றியமையாத தாகும்.

பத்தாண்டின், வரவிருக்கும் ஆண்டுகளில் வளர்ந்து வரும் நாடுகள் தங்களது பொருளாதார வளர்ச்சியைப் பாதுகாத்துக் கொள்வதற்கு ஏற்றுமதித் துறையில் வளர்ச்சி செய்வது மிக அவசியமாகும். ஆனுல் விரிவடைந்து வரும் உலக ஏற்றுமதியில் முன்னேறிவரும் நாடுகளின் பங்கு அச்சுறுத்தும் வகையில் குறைந்து வருகிறது. உதாரணமாகச், சென்ற பத் தாண்டின் தொடக்க ஆண்டு களில் மொத்த உலக ஏற்றுமதி வணிகத்தில் இந்நாடுகள் 25 சதவீதப் பங்கினைப் பெற்றிருந் தன. அண்மைக்காலத்தில் இது 17 சதவீதமாகக் குறைந்து இருக்கிறது. ஆகவே; இந் நாடுகள் இறக்குமதிகளைப் பெறு வதற்கும், கடனுதவிகளைத் திருப்புவதற்கும் தேவைப்படும் அந்நியச் செலாவணிக்கான தேவை வளர்ந்து வருகின்றது.

இந்நாடுகள் தமது வளர்ச்சி அனைத்து நாட்டுப் பொருளாதார உதவிகளை இனி எதிர்பார்க்கக் கூடாது. தமக்குத் தேவையான அந்நியச் செலாவணியை இந் நாடுகளே ஈட்டிக்கொள்ள வேண்டும்.

இதற்கான வழிகளில் முக்கியமானது நாடுகள் ஒன் றுக்கு ஒன்று ஒத்துழைப்பதே யாகும். நீண்ட காலமாகவே சில குறுகிய வழியிலான கொள்கைகள் காரணமாக





# கதர் கிராமத் தொழில்கள்

கதர் கிராமத்
தொழில்களை
ஆதரிப்பது
புனிதத் தொண்டு

கதர் கிராமத்
தொழில்களை ஆதரிப்பது
கிராம மக்களுக்குச்
செய்யும் பேருதவி





கதர்- கதர்ப் பட்டு
சோப்பு, தேன்
தோல் பொருள்கள்
பனைவெல்லம்.
பனைப் பொருள்கள்
வார்ப்படங்கள்
மற்றும் பல்வேறு கைநுட்பப்
பொருள்கள் கதர் கிராமத்தொழில்
விற்பனை நிலையங்களில் கிடைக்கும்





## கதர் கிராமத் தொழில் துறை

2. சர் தேசிகாச்சாரி சாலை

சென்னை-4

சந்தர்--

வளர்ந்துவரும் நாடுகளிடையே கூட்டுறவு இல்லாமல் போயிற்று. இதனால் வளர்ந்து வரும் நாடுகள் ஒன்றையொன்று போட்டி நாடாகக் கருதி வந்தனவே யொழிய ஒன்றுக்கொன்று உதவிகள் புரிந்து முன்னேற முடியும் என்று நினைக்கவில்லை. அத்துடன் தமது தேவைகளுக்கு மேற்கத்திய நாடுகளை எதிர்நோக்கும் ஒரு மனோபாவமும் இருந்து வந்திருக்கிறது.

இந்நிலையில் வளர்ந்து வரும் நாடுகள் பலவும் பல்வேறு துறைகளிலும் அடைந்திருக்கும் வளர்ச்சியை மற்ற நாடுகள் அறிவதற்கான வாய்ப்பு இல்லாமல் போயிற்று. அதனால் தமது பொது இலக்கை அடைவதில் இந்நாடுகளிடையே ஓரளவு ஒத்துழைப்புக் காணப்பட்டது. இந்த மூன்றாவது ஆசிய வணிகப் பொருட்காட்சி வளர்ந்து வரும் நாடுகள் பல துறைகளிலும் அடைந்துள்ள முன்னேற்றத்தை மற்ற நாடுகள் அறிந்து கொள்வதற்கு ஒரு நல்ல வாய்ப்பாக அமைந்துள்ளது. ஆகவே ஒருவருக்கொருவர் ஒத்துழைப்பு வளர்வதற்கான வாய்ப்புகளும் இதன் மூலம் பெருகின்றன.

## தொழில் நுட்ப முன்னேற்றம்

இந்தக் கண்காட்சி மற்றொரு நல்ல பயனையும் அளிக்கக் கூடியதாகும். இதில் பங்கு பெறும் நாடுகளின் உயர்ந்த பட்ச தொழில் நுட்ப ஆற்றல் உலகின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. அதுபோது செய்யப்படும் விமர்சனத்தைக்கொண்டு வளர்ந்து வரும் நாடுகள் தங்களிடமுள்ள குற்றங்குறைகளையும், பலவீனத்தையும் நீக்கித் தம்மை வலுப்படுத்திக்கொள்வதற்கு ஓர் அரிய வாய்ப்புக் கிடைக்கிறது. உலகத் தொழிற் துறையில் அடையப்பட்டுள்ள முக்கிய நவீனத் தொழில்நுட்ப அம்சங்களையும்இக்கண்காட்சியின் மூலம் அறிய முடியும். வளர்ந்து வரும் நாடுகளின் ஏற்றுமதி அபிவிருத்தி முயற்சிகளுக்கு உள்ள ஒரு முக்கியத் தடை என்னவெனில் இந்நாடுகளுக்கும் முன்னேறிய நாடுகளுக்கும் தொழில் நுட்பத் துறையில் உள்ள இடைவெளியாகும். நமது பிரதமர் சரியாக வலியுறுத்தியுள்ளது போல் முன்னேறிய நாடுகளிலிருந்துதொழில் நுட்பத் திறனைப் பெறுவதோடு முன்னேறிவரும் நாடுகளிடையேயும் தொழில் நுட்பத் திறனை பரஸ்பரம் பரிமாறிக் கொள்வதன் மூலம் இந்த இடைவெளியை இட்டு நிரப்புவது

பல்வேறு துறைகளிலுமுள்ள நவீன தொழில் நுட்பத் திறனை சேர்த்து வைத்துக் காண்பதற்கான வசதியை ஏற்படுத்தித் தரும் இக்கண்காட்சி பங்கு பெறும் நாடுகளிடையே சுமுகமான தொழில் நுட்பத்திறன் போக்குவரத்துக்கு வழிகோலும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தியாவைப் பொறுத்தவரை இது மிக முக்கியமான ஓர் அம்சமாகும். இந்தியா ஒரு ஏழை நாடாக இருந்தபோதிலும் தொழில் துறையில் நன்கு முன்னேறிய ஒரு நாடுமாகும். உலகிலுள்ள முக்கியத் தொழில் நாடுகள் பதினைந்தில் இந்தியாவும் இடம் பெற்றுள்ளது. ஆராய்ச்சி அபிவிருத்தி முயற்சிகளில் ஒன்றுபட்டு முன்னேறுவதற்கான புதிய வழிகளை இந்தக் கண்காட்சி ஏற்படுத்தித் தரும்.

### ஆசியா 72 தமிழக அரங்கு

'' நான் பார்த்த அரங்குகளில் சிறந்த ஒன்றாக விளங்குகிறது. இவ்வரங்கம் அழகாக விளங்குவதுடன் காட்சிப் பொருள்களைத் துல்லியமாக விளக்கும் அருங்காட்சியாகவும் அமைந்துள்ளது. கைவினைப் பொருள்களை விளக்கும் முதல் மாடி, உள்ளங் கவருவதாக உள்ளது. மொத்தத்தில் தமிழ் நாடு அரங்கம், தமிழ் நாட்டின் பொருளாதார வளர்ச்சியை எடுத்துக் காட்டும் அட்டவணையாக விளங்குகிறது. ''

— எ. சி. பானர்ஜி
நிருவாக இயக்குநர்,
வாணிகமேம்பாட்டு
அலுவலர் குழு,
புது டெல்லி.

## கூட்டு முயற்சிகளுக்கு வாய்ப்புகள்

உலகில் ஏற்றுமதி வர்த்தகத்தை விரிவாக்க வர்த்தகக் கண்காட்சிகள் பெறும் பங்கின் முக்கியத்துவம் வளர்ந்து வருகிறது. பொருட்களின் பரிமாற்றத்திற்கு இந்தப் பொருட்காட்சிகள் வழி வகுக்குகின்றன. இவ்வகையில் 'ஆசியா 72' வணிகர்களுக்கிடையே நெருங்கிய நேரடித் தொடர்புகளை ஏற்படுத்தி வாணிபத்தை பெருக்கும் என்று நம்பப்படுகிறது. கூட்டு முயற்சிகளில் ஒத்துழைப்பு வளர்ப்பதற்கும் இந்தப் பொருட்காட்சி உதவுகிறது.

சிங்கப்பூர், எத்தியோப்பியா முதலான நாடுகளில் கூட்டு முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது. இந்தியாவும், மற்ற வளர்ந்து வரும் நாடுகளும் பல்வேறு தொழில் துறைகளிலும் அடைந்துள்ள முன்னேற்றத்தை வெளிப்படுத்திக் காண்பிக்கும் இந்த வணிகப் பொருட் காட்சி புதிய கூட்டு முயற்சிகளுக்கான அடிப்படையை வகுப்பதற்கான வாய்ப்புகள்ஏராளமாக உள்ளன.

## நேரடிப் பயன்கள்

இந்தப் பொருட்காட்சியின் மூலம் இந்தியா மூன்று முக்கியப் பயன்களை நேரடியாகப்பெறுகிறது இதன் மூலம் நம் நாட்டுக்கு ஏறத்தாழ 8 கோடி ரூபாய் அந்நியச் செலாவணி கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் அனைத்து நாட்டு வணிகப் பொருட்சங்கத்தில் இந்தியா உறுப்பினர் தகுதியைப் பெற முடியும். இதற்கு வழிவகுக்கும் வகையில் இந்தியா நிரந்தரப் பொருட்காட்சித் தகுதியினைக் காட்டியுள்ளது. இந்த அனைத்துநாட்டு சங்கத்தில் உறுப்பு நாடாவதன் மூலம் ஓர் ஆண்டில் முறையாக ஐந்து பொருட்காட்சியினையும், ஒரு பொதுப் பொருட்காட்சியினையும் நடத்துவதற்கான வாய்ப்புகள் இந்தியாவுக்குக் கிடைக்கும். இதனால் இந்தியத் தயாரிப்பாளர்களும், வணிகர்களும் உலகத் தொழில்துறையின் புதிய வளர்ச்சிகளை நன்கு அறிந்து கொள்ள முடியும். மூன்றாவதாக இப்பொருட்காட்சியின் மூலம் இந்தியாவுக்கு ஏராளமான சுற்றுலாப் பயணிகள் வருவதற்கான வாய்ப்புகள் பெருகுகின்றன. இதுநமக்கு ஏராளமான அந்நியச் செலாவணியைப் பெற்றுத் தரக்கூடிய வாய்ப்பாகும்.

இவையனைத்துதையும் விட இந்தப் பொருட்காட்சி தரும் அரும் பயன் ஒன்றுள்ளது. அது இந்தியர் தொழிற் துறையில் தாம் அடைந்துள்ள வளர்ச்சியை மற்ற நாடுகளோடு ஒப்பிட்டு உறுதி செய்துகொண்டு பொருளாதாரத் தன்னிறைவு அடைய மேற்கொள்ள வேண்டிய பணிகளைத் தெளிவாகக் காட்டுவதாகும்.

உலக வணிக உலகில் நமக்குக் கிடைக்க வேண்டிய வெற்றிகளுக்கான நம்பிக்கையை அளிப்பதுடன் புதிய முயற்சிகள் தொடங்கும் ஊக்கத்தையும் 'ஆசியா '72' பொருட்காட்சி நம் நாட்டுக்கு அளித்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

# அஞ்சலக சேமிப்பு வங்கி மூலம்
# சேமியுங்கள்!

- எந்த வங்கியும் இதுவரை அளிக்காத அளவுக்கு நடப்புக் கணக்கு – 4 சதவீத வட்டியுடன்
- வேண்டும்போதெல்லாம் பணம் எடுத்துக்கொள்ளலாம்; செலுத்தலாம்; எந்தத் தடையும் இல்லை
- காசோலை வசதிகள் உண்டு
- முற்றிலும் பாதுகாப்பு உடையது
- அஞ்சலகங்கள் அனைத்திலும் இந்த வசதி உண்டு

இப்போது சொல்லுங்கள் சேமிப்பதற்காக
அஞ்சலகச் சேமிப்பு வங்கியை
நான் தேர்ந்தெடுத்தது நியாயம்தானே!



ஆசிரியர், வெளியிடுபவர் செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர், தமிழ்நாடு அரசு அச்சக
எழுதுபொருள் இயக்குநரால், சென்னை,